1108
09·01·08
Lib.

வெளியீடு 28-8-2007 Issued 28-8-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயல்க வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வியாழக்கிழமை, ஏப்ரல் 26, 2007—தொகுதி 32—எண் 2**

**Thursday the 26th April 2007—Volume 32—No. 2**

...வச் செயலகம், சென்னை-600 009

...ibly Secretariat, Chennai-600 009

22 1001

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 13, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 26, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்*
*அடிதழீஇ நிற்கும் உலகு."*

*குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.*

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 7 மற்றும் 8)@

### பட்டியல் 7

**1—**

### குழந்தை கடத்துவோர்க்குத் தண்டனை

**வினா எண் 8311—திரு. கோவை தங்கம் :** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) குழந்தைகளைக் கடத்துபவர்களைக் கடுமையாகத் தண்டிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

---

*@ இப்பட்டியல்களிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் விடையளித்த நாளன்றுள்ளவாறு அமைந்தனவாகும்.*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1. அரசு மருத்துவமனைகளிலும் மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் பணிபுரியும் அலுவலர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இடையே, குழந்தைகள் கடத்தப்படுவதைத் தடுக்க விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2. காவல் துறையில் காவல் ரோந்துப் பணியில் செல்லும் காவலர்களுக்கு இக்குற்றத்தைத் தடுக்கத் தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பொது மக்கள் கூடும் கோயில் திருவிழாக்கள் மற்றும் மதப் பண்டிகை தினங்களில் பொது மக்கள் விழிப்புடன் இருக்கவும், குழந்தைகள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் ஒலிபெருக்கி மூலம் காவல் துறையினரால் எச்சரிக்கப்படுகின்றனர்.

3. கடந்த ஐந்து ஆண்டுகளில் நடந்த குழந்தைகளைக் கடத்தும் கொடியவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| வ. எண். | வருடம் | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | தண்டனை வழங்கப்பட்ட எண்ணிக்கை | தண்டனை விவரம் |
|---|---|---|---|---|
| 1. | 2002 | 5 | 1 | குழந்தைக் கடத்தல் வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு நீதிமன்றத்தில் பத்து மாதம் வரை சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. |
| 2. | 2003 | 9 | 2 | |
| 3. | 2004 | 7 | 1 | |
| 4. | 2005 | 2 | 0 | |
| 5. | 2006 (ஆகஸ்ட் வரை) | 8 | 0 | |
| | மொத்தம் | 31 | 4 | |

**2—**

## காவல் நிலையம்

**வினா எண் [illegible]01—திருக் [illegible] செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

227661.
சென்னை-600 009



விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, கணக்கன்குப்பம் கிராமத்தில் காவல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

புதிய காவல் நிலையங்கள் அமைப்பது தொடர்பாக அவ்வப்போது எழக்கூடிய தேவையையும், நிலவும் சூழலையும், கோரிக்கையின் தன்மையையும் கருத்தில்கொண்டு, உரிய வகையில் முக்கியத்துவம் தந்து நன்கு பரிசீலனை செய்து, முன்னுரிமையின் அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கருத்துரு மீது உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**3—**

## புதிய காவல் நிலையம்

**வினா எண் 13725—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிர்லா சிமெண்ட் ஆலை உள்ள வி. கைக்காட்டியில் புதிதாகக் காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் அமைப்புப் பணி உள்ளிட்ட காவல் துறை தொடர்பாக, ஆய்வு செய்து அரசுக்குப் பரிந்துரைகள் செய்ய மூன்றாவது காவல் குழு (Third Police Commission) அமைக்கப்பட்டுள்ளது. பிர்லா சிமெண்ட் ஆலை உள்ள வி. கைக்காட்டியில் புதிதாகக் காவல் நிலையம் அமைப்பது தொடர்பாக மேற்படி காவல் குழுவின் பரிந்துரைக்குப் பிறகு உரிய காலத்தில் பரிசீலிக்கப்படும்.

**4—**

## காவல் நிலையங்கள்

**வினா எண் 13726—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 26

தூத்தூர், விக்கிரமங்கலம் ஆகிய காவல் நிலையங்களை அரியலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தூத்தூர், விக்கிரமங்கலம் ஆகிய காவல் நிலையங்களை அரியலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவது தொடர்பாக உரிய அதிகாரிகளின் பரிந்துரையைப் பெற்று, தக்க சமயத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**5—**

## போக்குவரத்துக் காவல் நிலையம்

**வினா எண் 15651—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வால்பாறை மற்றும் கோட்டூரில் போக்குவரத்துக் காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு நிதியாண்டில் காவல் மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்மீது அறிவிப்புச் செய்யக்கூடிய இடங்களில் மட்டுமே புதிய காவல் நிலையங்கள் அமைக்க ஆணையிடுவது எனவும், இது குறித்த கோரிக்கை எதனையும் வேறு வகைகளில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதில்லை என்ற நிலையும் நடைமுறையில் உள்ளது. அறிவிப்புக்கேற்ப வெவ்வேறு மாவட்டங்களில் 20 இடங்களில் புதிய போக்குவரத்துக் காவல் நிலையங்கள் அமைக்க 6-2-2007 நாளிட்ட உள் துறை அரசாணை நிலை எண் 203-ல் உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. மேலும், வால்பாறை மற்றும் கோட்டூர் ஆகிய இடங்களில் அமையப்பெற்றுள்ள வகை 5-ஐச் சார்ந்த காவல் நிலையப் பணியாளர்களைக்கொண்டு அக்காவல் நிலையங்களின் எல்லையில் போக்குவரத்து திறம்பட நிர்வகிக்கப்பட்டு வருகிறது. எனவே, அவ்விடங்களில் தனியாகப் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைத்திடும் அவசியம் எழவில்லை.



2007 ஏப்ரல் 26]

**6—**

## புதிய மின் மாற்றி

**வினா எண் 7516—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை கிராமத்தில் ஆராய்ச்சிக்குப்பம் அருகில் புதிய மின் மாற்றி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை கிராமத்தில் ஆராய்ச்சிக்குப்பம் அருகில் உள்ள பகுதிகளுக்கு ஆராய்ச்சிக்குப்பம் மின் மாற்றி 1 (100 கே.வி.ஏ.+63 கே.வி.ஏ.)-ன் வாயிலாகச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட மின் மாற்றியில் 9 எண்ணிக்கையிலான 8.5 குதிரைத் திறன் உள்ள விவசாய மின் இணைப்புகளும், 7.5 குதிரைத் திறன் உள்ள குடிநீர் மின் இணைப்பு ஒன்றும், வீடு மற்றும் இதர இணைப்புகள் 73-ம் இணைக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சிக்குப்பம் மின் மாற்றி 1-ல் (100 கே.வி.ஏ.+63 கே.வி.ஏ.) மின் பளு போதுமானதாக உள்ளதால், புதியதாக மின்மாற்றி அமைக்கத் தொழில்நுட்பரீதியாகத் தற்போது அவசியம் ஏற்படவில்லை.

**7—**

## சீரான மின் விநியோகம்

**வினா எண் 8744—திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை நீடூர் பகுதியில் சீரான மின் விநியோகம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போது கடலங்குடி 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. சோழப்பேட்டை மின் பாதைமூலமாக மின்சாரம் நீடுர் பகுதிக்கு வருகிறது. இதற்குப் பதிலாகத் தனியாக ஒரு 11 கி.வோ. விரைவு மின் பாதை (Express feeder) கடலங்குடியிலிருந்து நீடூருக்கு அமைப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், நீடுர் பகுதியில் தற்போது மின் பாதைகள் மற்றும் மின் மாற்றிகள் அனைத்தும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு, தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

8—

## இருபது மணி நேர மின்சாரம்

**வினா எண் 8837—திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை வட்டம், கந்தர்வக்கோட்டை, ஆதனக்கோட்டை மற்றும் வடவாளம் பகுதிகளுக்கு விவசாய மின் மோட்டார்களுக்கு இருபது மணி நேரம் மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை வட்டம், கந்தர்வக்கோட்டை, ஆதனக்கோட்டை மற்றும் வடவாளம் ஆகிய பகுதிகள் காவிரி ஒட்டு மொத்தக் கொள்முதல் பகுதியில் இல்லாததால், 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கு சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

9—

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 1117—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை பேரூராட்சியில் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னிமலை, கருமாண்டி செல்லிபாளையம், பெருந்துறை, நசியனூர், சித்தோடு மற்றும் 69 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவதற்கு ரூ.2,304.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்போது நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

10—

## குடிநீர் வசதி

**வினா எண் 2670—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆழியாறு நகருக்கு கம்பாளப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து தனியாக மின் மோட்டார் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாகக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

11—

## குடிநீர் வசதி

**வினா எண் 2843—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், முள்ளிகொளத்தூர் ஊராட்சி, ஈகைரத்னாபுரத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மிகவும் பழுதடைந்து உள்ளதால், புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், முள்ளிகொளத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த ஈகைரத்னாபுரத்தில் நடப்பு நிதியாண்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படவுள்ளது.

12—

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 3763—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொத்தபுலியானூர் காட்டுவளவு பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொங்குப்பட்டி ஊராட்சி, கொத்தபுலியானூர் காட்டுவளவு பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

13—

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 3764—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி, ஆணை கவுண்டம்பட்டி பகுதி, சாமிநாயக்கன்பட்டி ஊராட்சி, புதிய காலனி பகுதி, கஞ்சநாயக்கன்பட்டி கிராமம், கொட்டாய்காரன் பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி, ஆணை கவுண்டம்பட்டி பகுதி, சாமிநாயக்கன்பட்டி பகுதி, புதிய காலனி பகுதி ஆழ்துளைக் கிணறு அமைக்க ரூ.1.00 இலட்சம் செலவாகும். இங்கு சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றன. ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதி இல்லை. வரும் நிதியாண்டில் ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதி கிடைக்கப்பெற்றதும், முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணியினைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

14— [2007 ஏப்ரல் 26

## குடிநீர் வசதி

**வினா எண் 3773—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கொல்லப்பட்டி ஊராட்சி, கோரிமேடு பகுதி, நாரணம்பாளையம் ஊராட்சி, மறவன்குறை நீர்த்தேக்கத் தொட்டி—செல்லப்பன் வீடு வரை—சக்கரசெட்டிபட்டி ஊராட்சி, நாய்க்கடிச்சாம்பட்டி பகுதி மற்றும் குமரச்சான்கரடு பகுதியிலும் குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், கொல்லப்பட்டி ஊராட்சி, கோரிமேடு பகுதி, நாரணம்பாளையம் ஊராட்சி, மறவன்குறை நீர்த்தேக்கத் தொட்டி—செல்லப்பன் வீடு வரை—சக்கரசெட்டிபட்டி ஊராட்சி, நாய்க்கடிச்சாம்பட்டி பகுதி மற்றும் குமரச்சான்கரடு பகுதியிலும் குடிநீர்க் குழாய் சுமார் 800 மீட்டர் செய்து தர வேண்டும். இதற்கு ரூ.90,000/- மதிப்பீடாகும். இந்தக் குடிநீர்க் குழாயை விஸ்தரிப்புச் செய்வதால், சுமார் 150 குடும்பங்கள் பயன்பெறுவார்கள். ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதி கிடைக்கப்பெற்றதும், முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணியினைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

15—

## கைப் பம்பு

**வினா எண் 3783—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 26]

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி, வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 25 (போர்வெல்) கைப் பம்பு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்டகவுண்டம்பட்டி ஊராட்சி, வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் சுமார் 200 குடியிருப்புகள் உள்ளன. இந்தப் பகுதியில் கைப் பம்பு 2, விசைப் பம்பு 2, மின் பம்பு ஒன்றும் உள்ளன. மேட்டூர், ஆத்தூர் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இங்கு இரண்டு புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கலாம். மதிப்பீடு ரூ.1.10 இலட்சமாகும். ஒன்றியப் பொது நிதியில் போதுமான நிதி வசதி கிடைக்கப்பெற்றதும், முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணியினைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

16—

## கைப் பம்பு

**வினா எண் 3784—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், நாலுக்கால் பாலம் மற்றும் நாய்க்கடிச்சாம்பட்டி பகுதிகளில் கைப் பம்பு போட்டுக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், நாலுக்கால் பாலம் மற்றும் நாய்க்கடிச்சாம்பட்டி ஆகிய பகுதிகளில் 2 கைப் பம்புகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். இந்த இரண்டு கைப் பம்புகளை அமைப்பதன்மூலம் சுமார் 100 குடும்பங்கள் பயன்பெறுவார்கள். இந்தப் பணியினை மேற்கொள்ள சுமார் ரூ.1.00 இலட்சம் மதிப்பீடாகும். ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதி கிடைக்கப்பெற்றதும், முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணியினைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**17—**

**சாக்கடை வசதி**

**வினா எண் 3792—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், செல்ல பிள்ளை குட்டை ஊராட்சி ஆதி திராவிடர் காலனியில் சாக்கடை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதி கிடைக்கப்பெற்றதும், முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணியினைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**18—**

**சாக்கடை வசதி**

**வினா எண் 4924—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) காங்கேயத்திற்கு உட்பட்ட ஈங்கூர் ஊராட்சி, ஏழு திங்கள்பட்டி, வெட்டுக்காட்டுவலசு, கவுண்டனூர் பகுதி ஆகிய இடங்களில் சாக்கடை வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, ஈங்கூர் ஊராட்சி ஏழுதிங்கள்பட்டியில் எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தில் 2006-2007 ஆம் ஆண்டு சாலை வசதி செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணியின்போது சாக்கடை வசதி செய்யும் பணியும் மேற்கொள்ளப்படும். வெட்டுக்காட்டுவலசு, கவுண்டனூர் பகுதிகளுக்கு வரும் நிதியாண்டில் சாக்கடை வசதி செய்து தரப்படும்.

**19—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 5140—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்ப்புதூர் முதல்நிலை ஊராட்சி, இராமமூர்த்தி நகர்ப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்ப்புதூர் ஊராட்சியிலுள்ள இராமமூர்த்தி நகர்க் குடியிருப்பில் தனி மின் விசைத் திட்டத்தின்மூலம் ஏற்கெனவே அக்குடியிருப்பில்

[2007 ஏப்ரல் 26

கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருவதாலும், ஊரகக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளதாலும், கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**20—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5141—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சங்கீதப்பட்டி ஊராட்சி, வெத்திலைக்காரனூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், சங்கீதப்பட்டி ஊராட்சியிலுள்ள வெத்திலைக்காரனூர் குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து டால்மியா கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாலும், மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளதாலும், ஊரகக் குடிநீர்த் திட்ட விதிகளின் படி, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**21—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5561—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 26]

ஓமலூர் தொகுதி, கோட்டமாரியம்மன் கோயில் ஊராட்சி பெரமச்சூர் முருகன் கோயில் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கோட்டமாரியம்மன் கோயில் ஊராட்சியைச் சார்ந்த பெரமச்சூர் பிரதானக் குடியிருப்பின் ஒரு பகுதியே பெரமச்சூர் முருகன் கோயில் என்பதாகும். பெரமச்சூர் குடியிருப்பில் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து, குழாய் நீட்டிப்புமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஊரகக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி, இப்பகுதி குடியிருப்புக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**22—**

## குடிநீர் வசதி

**வினா எண் 5656—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, பாலப்பம்பட்டி சமத்துவபுரம் பகுதியில் குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை ஒன்றியம், கண்ணமநாயக்கனூர் ஊராட்சி, பாலப்பம்பட்டி சமத்துவபுரம் கிராமத்திற்கு ஒரு தனி மின் விசைத் திட்டம் மற்றும் இரு சிறு மின் விசைத் திட்டங்கள்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2007 ஏப்ரல் 26

23—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 6132—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், பெரியேரிபட்டி ஊராட்சி, தாண்டானூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், பெரியேரிபட்டி ஊராட்சியிலுள்ள தாண்டானூர் குடியிருப்பில் 1994 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 121 குடியிருப்புகளுக்கானக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாலும், ஊரகக் குடிநீர்த் திட்ட விதிகளின்படி மக்கட்தொகைக்கேற்ப ஏற்கெனவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளதாலும், கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசிலனையில் இல்லை.

24—

## கழிவு நீர்க் கால்வாய்

**வினா எண் 6403—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், திருப்பத்தூர் கிராம ஊராட்சி, காக்கணாம்பாளையம் ஊராட்சி, திருமால்நகர் மற்றும் கிராமங்களுக்குப் புதிய கழிவு நீர்க் கால்வாய் அமைத்துத் தர அரசு முன்வருமா? இராஜபாளையம் ஆகிய



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர், இராஜபாளையம் மற்றும் காக்கணாம்பாளையம் ஆகிய கிராம ஊராட்சிகளில் கழிவு நீர்க் கால்வாய் அமைக்க கிராம சபாவின் தீர்மானத்துடன் கருத்துரு அனுப்பினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

25—

## கழிவு நீர்க் கால்வாய்

**வினா எண் 6603—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, பழையகோட்டை ஊராட்சி முள்ளிப்புரம் — ஊஞ்சமர நாடார் பகுதியிலிருந்து மேட்டுக்காட்டு வலசு கரை வரை, ராவாத்தி பட்டரை தெரு, நத்த காட்டுப்பாளையம் வரை கழிவு நீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், பழைய கோட்டை ஊராட்சி, முள்ளிப்புரம் ஊஞ்சமர நாடார் பகுதியிலிருந்து மேட்டுக்காட்டு வலசு கரை வரை, ராவாத்தி பட்டரை தெரு, நத்த காட்டுப்பாளையம் வரை கழிவு நீர்க் கால்வாய் அமைக்க ரூ.8,00,000/- தேவைப்படுகிறது. ஊராட்சியில் நிதி நெருக்கடி காரணமாகத் தற்போது செய்ய இயலவில்லை.

26—

## நிழற்குடை

**வினா எண் 7067—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 26

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், புதூர் பூங்குளம் கிராமத்தில் பயணிகள் நிழற்குடை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், புதூர் பூங்குளம் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து நிதி பெற்று, பயணியர் நிழற்கூடம் கட்டப்படும்.

**27—**

## கழிவு நீர்க் கால்வாய்

**வினா எண் 7072—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், மரிமானிகுப்பம் ஊராட்சி, ஓமகுப்பம் கிராமத்தில் புதிய கழிவு நீர்க் கால்வாய் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், மரிமானிகுப்பம் ஊராட்சி, ஓமகுப்பம் கிராமத்தில் கழிவு நீர்க் கால்வாய் கட்ட கிராம சபா தீர்மானத்தின் பேரில் கருத்துரு வரப்பெறின், அடுத்து வரும் ஆண்டில் இப்பணியை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்படும்.

**28—**

## சாலை வசதி

**வினா எண் 7076—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 26]

(அ) காங்கேயம் தொகுதி, வடசின்னாரிபாளையம் ஒன்றியம், காட்டுப்பாளையம், ஓலப்பாளையம் கிராமத்திற்குத் தார்ச் சாலை வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, வடசின்னாரிபாளையம் ஊராட்சி, காட்டுப்பாளையம், ஓலப்பாளையம் கிராமத்திற்குச் சாலை 3.60 கி.மீ. நீளம் உள்ளது. மண் சாலையாக உள்ள இச்சாலையின் இடையில் எந்த ஒரு குக்கிராமமும் இல்லை என்பதாலும், போக்குவரத்திற்கு எந்தவிதமான இடையூறும் இல்லை என்பதாலும், மேற்படி சாலையினைத் தார்ச் சாலையாக மாற்றிடத் தற்போது அவசியமில்லை.

**29—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 7862—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், 57 குலமாணிக்கம் ஊராட்சி, அன்னுகுடி கிராமத்தில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், 57 குலமாணிக்கம் ஊராட்சி, அன்னுகுடி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பரிந்துரை செய்யும்பட்சத்தில் சமுதாயக் கூடம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30—

### சாலை வசதி

**வினா எண் 7863—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், சேரி ஊராட்சியில் பழுதடைந்துள்ள சாலை, 57 குலமாணிக்கம் ஊராட்சி, கீழ ஆதி திராவிடர் தெரு, மேல ஆதி திராவிடர் தெரு இணைப்புச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1. கோட்டூர் ஒன்றியம், சேரி ஊராட்சி, மேலச்சேரி சாலை 425 மீட்டர் ரூ.2.30 இலட்சம் செலவில் மாநில நிதிக் குழு மானியத்தில் தார்ச் சாலை போடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் சேரி ஊராட்சி சாலை மேம்பாட்டுக்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 115 மீ. கீழகண்டமங்கலம் சிமெண்ட் சாலைக்கு ரூ.1.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதம் உள்ள சாலைகளைப் புதிய அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் தார்ச் சாலைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

2. 57 குலமாணிக்கம் ஊராட்சியில், கீழ ஆதி திராவிடர் தெரு, மேல ஆதி திராவிடர் தெரு இணைப்புச் சாலை சிறப்பு நிதித் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையிலோ அல்லது வரும் ஆண்டுகளில் புதிய அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இப்பணியினை எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

31—

### மேற்கூரை

**வினா எண் 8205—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி, பேர்பெரியான்குப்பம் கிராமம் மற்றும் வீரப்பெருமாநல்லூர் ஆகிய கிராமங்களின் சுடுகாட்டிற்கு மேற்கூரை அமைத்துத் தந்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பேர்பெரியான்குப்பம் கிராமம் மற்றும் வீரப்பெருமாநல்லூர் ஆகிய கிராமங்களின் சுடுகாட்டிற்கு மேற்கூரை நிதி ஆதாரம் கிடைத்தபின் அமைக்கப்படும்.

32—

### மயான வசதி

**வினா எண் 8240—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், குரும்பப்பட்டி கிராமம், கருங்கல் காட்டுவளவு பகுதி மக்களுக்கு மயான வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், குரும்பப்பட்டி கிராமம், கருங்கல் காட்டுவளவு பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகள் பட்டா நிலமாக உள்ளதால், இப்பகுதி மக்களுக்கு மயான வசதி செய்து தர இயலாத நிலையில் உள்ளது.

33—

## சாலை வசதி

**வினா எண் 8548—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை ஊராட்சி, ஈங்கூர் ஊராட்சி, கவுண்டனூரில் மண் சாலை, குண்டடம் ஒன்றியம், வடசினார்பாளையம் கிராமம், அமராபதி பாளையம் கிழக்கே ஆதி திராவிடர் காலனி, கீரனூர் ஊராட்சி, விஜயரங்கன் வலசு, மறவபாளையம் செல்லும் மெட்டல் சாலை, சிவன்மலை ஊராட்சி, அரசம்பாளையம்—நல்லிப்பாளையம் இணைப்புச் சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி, ஈங்கூர் ஊராட்சி, கவுண்டனூரில் மண் சாலை, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், வடசினார்பாளையம் கிராமம், அமராபதி பாளையம் கிழக்கே ஆதி திராவிடர் காலனி, கீரனூர் ஊராட்சி, விஜயரங்கன் வலசு, மறவபாளையம் செல்லும் மெட்டல் சாலை, சிவன்மலை ஊராட்சி, அரசம்பாளையம்—நல்லிப்பாளையம் இணைப்புச் சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்ற உத்தேச மதிப்பீடாகத் தொகை ரூ.45 இலட்சம் நிதி தேவைப்படும். ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது நிதி வசதி இல்லையாதலால், மேற்கண்ட பணியினை எடுத்துச் செய்ய இயலாது.

34—

## சாலை வசதி

**வினா எண் 8552—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) காங்கேயம், சிவன்மலை ஊராட்சி, அரசம்பாளையத்தில் ஆதி திராவிடர் காலனி, திருப்பூர் சாலை ஜேஜே மேடு வரை உள்ள இணைப்புச் சாலை, கரட்டுப்பாளையம் பொதுவிலிருந்து படியூர் வரை செல்லும் இணைப்புச் சாலை, காங்கேயம் ஊராட்சி, ஆலாம்பாடி கிராமம், வரதப்பக் கவுண்டர் பாளையம் செல்லும் மண் சாலை, சிவன்மலை, கீரனூர் செல்லும் சாலை—புங்கந்தோட்டம்—சாவடிப்பாளையம் இணைப்புச் சாலை, குண்டடம் ஊராட்சி, பெருமாள்பாளையம், புங்கந்துரை, சிறுகினார் ஊராட்சிக்குட்பட்ட வாலைராயநல்லூர், ஆலாம்பாளையம் மண் சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலையாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம் காங்கேயம் தொகுதி, சிவன் மலை ஊராட்சி, அரசம்பாளையத்தில் ஆதி திராவிடர் காலனி, திருப்பூர் சாலை ஜேஜே மேடு வரை உள்ள இணைப்புச் சாலை, கரட்டுப்பாளையம் பொதுவிலிருந்து படியூர் வரை செல்லும் இணைப்புச் சாலை, காங்கேயம் ஊராட்சி, ஆலாம்பாடி கிராமம், வரதப்பக் கவுண்டர் பாளையம் செல்லும் மண் சாலை, சிவன்மலை, கீரனூர் செல்லும் சாலை—புங்கந்தோட்டம்—சாவடிப்பாளையம் இணைப்புச் சாலை, மண் சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலையாக மாற்ற உத்தேச மதிப்பீடாக தொகை ரூ.75 இலட்சம் நிதி தேவைப்படும். 'ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது நிதி வசதி இல்லையாதலால், மேற்கண்ட பணியினை எடுத்துச் செய்ய இயலாது.

35—

## சாலை வசதி

**வினா எண் 8557—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 26

(அ) காங்கேயம், சிவன்மலை ஊராட்சி, சாவடிப்பாளையம் சாலை பிரிந்து ராசாம்பாளையம் பழைய ஆதி திராவிடர் காலனி செல்லும் மெட்டல் சாலை, கோபி—தாராபுரம் சாலை—சங்கரத் தோட்டம்—சிங்கரசம்பாளையம் இணைப்புச் சாலை, கோபி—தாராபுரம் பிரதான சாலை—நல்லிப்பாளையம் வரை செல்லும் மண் சாலை, கோயில்பாளையம்—ராயர் வலசு இணைப்புச் சாலை, ராமபட்டினம்—பெருமாள் மலை வரையுள்ள இணைப்புச் சாலை, கோபி—தாராபுரம் மண் சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம், சிவன்மலை ஊராட்சி, சாவடிப்பாளையம் சாலை பிரிந்து ராசாம்பாளையம் பழைய ஆதி திராவிடர் காலனி செல்லும் மெட்டல் சாலை, கோபி—தாராபுரம் சாலை—சங்கரத் தோட்டம்—சிங்கரசம்பாளையம் இணைப்புச் சாலை, கோபி—தாராபுரம் பிரதான சாலை—நல்லிப்பாளையம் வரை செல்லும் மண்சாலை, கோயில்பாளையம்—ராயர் வலசு இணைப்புச் சாலை, ராமபட்டினம்—பெருமாள் மலை வரையுள்ள இணைப்புச் சாலை, கோபி—தாராபுரம் மண் சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்ற உத்தேச மதிப்பீடாகத் தொகை ரூ.63.80 இலட்சம் நிதி தேவைப்படும். ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது நிதி வசதி இல்லையாதலால், மேற்கண்ட பணியினை எடுத்துச் செய்ய இயலாது.

**36—**

## சாலை வசதி

**வினா எண் 8566—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்திற்குட்பட்ட சென்னிமலை பகுதியில் இச்சிபட்டி செந்தாப்பாளையம் பனியம்பள்ளி ஊராட்சி, துலுக்கம்பாளையம்—ரங்கநாயகியம்மன் கோயில் வரை கவுண்டச்சிபாளையம்—



2007 ஏப்ரல் 26]

பெரியவாய்க்கால், ஈங்கூர் ஊராட்சி, உச்சனகவுண்டன்புதூர்—பெரியவாய்க்கால், ஈங்கூர் ஊராட்சி, உச்சனகவுண்டன்புதூர்—கோயில்பாளையம் சாலை, காசநாயக்கன்பாளையம்—எல்.பி.பி. வாய்க்கால் வரை மண் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை பகுதியில் இச்சிபட்டி செந்தாப்பாளையம் பனியம்பள்ளி ஊராட்சி, துலுக்கம்பாளையம்—ரங்கநாயகியம்மன் கோயில் வரை, கவுண்டச்சிபாளையம்—பெரியவாய்க்கால், ஈங்கூர் ஊராட்சி, உச்சனகவுண்டன்புதூர்—கோயில்பாளையம் சாலை, காசநாயக்கன் பாளையம்—எல்.பி.பி. வாய்க்கால் வரை மண் சாலை அமைக்கச் சாத்தியமில்லை. ஓர் அடுக்கு கப்பி போட்டுச் சாலை அமைக்க, வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**37—**

## புதிய சாலை

**வினா எண் 8571—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிப்பிடாரியூர் ஊராட்சி—பெருந்துறை, ஆர்.எஸ். காந்திபுரம் சாலை, வெள்ளோடு சாலை, மைலாடி பிரிவு சாலை, பனப்பாளையம் தார்ச் சாலை, புதூர் வழி, தரைப்பாளையம் வரை, கூத்தம்பாளையம் ஊராட்சி, கூத்தம்பாளையம்—கொடு மணல் காலனி சாலை, குப்பிச்சிபாளையம் வாய்க்கால் மேடு சாலை, நொய்யல் சாலை, முருங்கத்தொழுவு ஊராட்சி, குமாரபாளையம் சாலை, வாய்க்கால் மேடு சாலை ஆகிய சாலைகளைப் புதிய மண் சாலைகளாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிப்பிடாரியூர் ஊராட்சி—பெருந்துறை, ஆர்.எஸ். காந்திபுரம் சாலை, வெள்ளோடு சாலை, மைலாடி பிரிவு சாலை, பனப்பாளையம் தார்ச் சாலை, புதூர் வழி, தரைப்பாளையம் வரை, கூத்தம்பாளையம் ஊராட்சி, கூத்தம்பாளையம்—கொடு மணல் காலனி சாலை, குப்பிச்சிபாளையம் வாய்க்கால் மேடு சாலை, நொய்யல் சாலை, முருங்கத்தொழுவு ஊராட்சி, குமாரபாளையம் சாலை, வாய்க்கால் மேடு சாலை ஆகிய சாலைகளைப் புதிய மண் சாலைகளாக அமைக்கச் சாத்தியமில்லை. எனினும், ஓர் அடுக்கு கப்பிபோட்டுச் சாலை அமைக்க, வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**38—**

### சாலை வசதி

**வினா எண் 8576—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சியில், சரம்பதி ஆதி திராவிடர் காலனியில் சாலை வசதி, குட்டப்பாளையம்—கொடுமராபாளையம் சாலைப் பராமரிப்பு, வெங்கிட்டியாம்பாளையம்—ஆர்.எஸ்.ரோடு சாலை வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சியில், சரம்பதி ஆதி திராவிடர் காலனியில் சாலை வசதி குட்டப்பாளையம்—கொடுமராபாளையம், சாலைப் பராமரிப்பு வெங்கிட்டியாம்பாளையம்—ஆர்.எஸ். ரோடு சாலை வசதி அமைக்க,





வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**39—**

### வீடுகள் பழுதுபார்த்தல்

**வினா எண் 8579—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை ஊராட்சி, ஈங்கூர் பஞ்சாயத்திற்கு உட்பட்ட கவுண்டனூரில் உள்ள ஆதி திராவிடர் காலனி தொகுப்பு வீடுகளைப் பராமரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1991 ஆம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்டுப் பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பழுது நீக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட கவுண்டனூரில் உள்ள பழுதடைந்த தொகுப்பு வீடுகளைப் பழுது நீக்கம் செய்ய காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் எடுத்துச் செய்யப் பரிந்துரை செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**40—**

### பாலம் அமைத்தல்

**வினா எண் 8583—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை ஊராட்சி, வெள்ளோடு கிராமத்திலுள்ள பெரியகுளம் சரணாலயம் அருகில் மயானத்திற்குச் செல்லப் பாலம் அமைக்க அரசு முன்வருமா?.

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2007 ஏப்ரல் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி, வெள்ளோடு கிராமத்திலுள்ள பெரியகுளம் சரணாலயம் அருகில் மயானத்திற்குச் செல்லப் பாலம் அமைக்க வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**41—**

## குடிநீர் வழங்கல் வாரிய அலுவலகம்

**வினா எண் 8619—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரிய அலுவலகம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதியில் தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியப் பராமரிப்பு உப கோட்டம், கடந்த 01-9-2004 முதல் இயங்கி வருகிறது.

**42—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 9020—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், கல்லேரியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், ஆலம்பாடி ஊராட்சியில் உள்ள கல்லேரி குடியிருப்பிற்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின் விசைத் திட்டம் மற்றும் கையிறைப்பான் திட்டம்மூலம் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மக்கட்தொகை அடிப்படையில் தற்போதுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானதாகையால், புதியதாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் எழவில்லை.

**43—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 9021—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, பாலப்பாளையத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சி, பாலப்பாளையம் குடியிருப்பிற்கு 3 கையிறைப்பான்கள் மற்றும் நடப்பாண்டில் ஊராட்சியால் அமைக்கப்பட்ட 6,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பெருந்துறை மற்றும் சென்னிமலை ஒன்றியங்களிலுள்ள 392 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இக்குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை

நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் (3/07) முடித்து, மக்கட்பயனுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மக்கட்தொகை அடிப்படையில், 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியே போதுமானதாகும். எனவே, 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் எழவில்லை.

**44—**

## குடிநீர் வசதி

**வினா எண் 9022—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர், கூத்தம்பாளையம் கிராமத்திற்கு இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சி, கூத்தம்பாளையம் குடியிருப்புக்குத் தற்போது அங்குள்ள சிறு மின் விசைத் திட்டம்மூலம் அத்தியாவசியத் தேவைக்கானக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்பிற்குப் பெருந்துறை மற்றும் சென்னிமலை ஒன்றியங்களிலுள்ள 392 ஊரகக் குடியிருப்புகளுக்கானக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை 03/07-க்குள் முடித்து மக்கட்பயனுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**45—**

## குடிநீர் வசதி

**வினா எண் 9072—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்துக்குளம், கழுகரையில் குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்துக்குளம் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் (இரண்டாவது திட்டம்) மடத்துக்குளம் பேரூராட்சிக்குட்பட்ட கழுகரையைச் சார்ந்த ஒரு பகுதிக்கும், மடத்துக்குளம் குடிநீர்த் திட்டத்தின்கீழ் (முதல் திட்டம்) கழுகரையைச் சார்ந்த இதர பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**46—**

## சாலை வசதி

**வினா எண் 9130—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் மேலக்கட்டளைக்குச் சாலை வசதி, மேலமாயனூர் பகுதிக்குக் கழிப்பிட வசதியும், மயான வசதியும் செய்து தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் மேலக்கட்டளைக்கு, வரும் 2007—2008 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதியினைப் பெற்று தார்ச் சாலையும், மேலமாயனூரில் கழிப்பறை வசதி மற்றும் மயானக் கொட்டகை ஒன்றியப் பொது நிதியிலிருந்து அமைத்துத் தரப்படும்.

[2007 ஏப்ரல் 26

47—

## கழிவு நீர்க் கால்வாய்

**வினா எண் 10301—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உங்கரானஅள்ளி ஊராட்சி, எட்டிமரத்துப்பட்டியில் கழிவு நீர்க் கால்வாய் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஊராட்சி ஒன்றியம், உங்கரான அள்ளி ஊராட்சி எட்டிமரத்துப்பட்டியில் கழிவு நீர்க் கால்வாய் கட்டும் பணி 2006-07 ஆம் ஆண்டில் ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ. 50,000/- மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

48—

## சீரணி அரங்கம்

**வினா எண் 10643—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் ஒன்றியம், ஆரியூர் ஊராட்சி, நெய்க்காரன்பட்டிக்குச் சீரணி அரங்கம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மோகனூர் ஊராட்சி ஒன்றியம், ஆரியூர் ஊராட்சி, ஆரியூரில் ஊராட்சிக்கு ஒன்று என்ற விகிதத்தின் அடிப்படையில் சீரணி



2007 ஏப்ரல் 26]

அரங்கம் 2006-07 ஆம் ஆண்டு கபிலர்மலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1,60,000/- மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது. எனவே, ஆரியூர் ஊராட்சியைச் சேர்ந்த நெய்க்காரன்பட்டி கிராமத்திற்கு எனத் தனியே சீரணி அரங்கம் அமைக்க இயலாது.

49—

## நிழற்கூடம்

**வினா எண் 10649—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், திருமல் ஊராட்சி, திருமல், ஆவாரங்காடு, தாசாம்பாளையம், ராசம்பாளையம் ஆகிய பேருந்து நிறுத்துமிடங்களில் நிழற்கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்றத் தொகுதி மேம்பாடு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெறப்படின், கபிலர்மலை ஒன்றியம், திருமல் ஊராட்சி, திருமல், ஆவாரங்காடு, தாசாம்பாளையம், ராசம்பாளையம் ஆகிய பேருந்து நிறுத்துமிடங்களில் நிழற்கூடம் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

50—

## சமுதாயக் கூடம்

**வினா எண் 10651—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், கொந்தளம் ஊராட்சி, கருக்கம்பாளையத்தில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெறப்படின், கபிலர்மலை ஒன்றியம், கொந்தளம் ஊராட்சி, கருக்கம்பாளையத்தில் சமுதாயக் கூடம் கட்ட ஆவனச் செய்யப்படும்.

**51—**

**சாலை வசதி**

**வினா எண் 10996—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, பொத்திபாளையம் ஊராட்சியில் பொத்திபாளையம், எல்லப்பாளையம் ஊராட்சி, நிழலி மற்றும் நிழலி காலனி ஆகிய பகுதிகளுக்குச் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், பொத்திபாளையம் ஊராட்சியில், பொத்திபாளையம் ஆதி திராவிடர் காலனிக்கு ரூ.2,55,000/- மதிப்பீட்டில் 2006-2007 ஆம் ஆண்டிற்கு சம்பூர்ண கிராம வேலைத் திட்டத்தின் (கிராம ஊராட்சி) கீழ் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. குண்டடம் ஊராட்சி ஒன்றியம், எல்லப்பாளையம் ஊராட்சியில், நிழலி மற்றும் நிழலி காலனி பகுதிகளுக்குச் சாலை வசதி செய்து தரப் போதிய நிதி ஆதாரம் கிடைக்கப்பெற்றபின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**52—**

**சாலை வசதி**

**வினா எண் 10999—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குருக்கம்பாளையம் ஊராட்சி, ஓலப்பாளையம், அய்யம்பாளையம், எல்லம்பாளையம், அம்மாபாளையம், செட்டிபாளையம், வேங்கிபாளையம் ஆகிய பகுதிகளில் செல்லும் மண் சாலைகளைத் தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், குருக்கம்பாளையம் ஊராட்சியில், ஓலப்பாளையம், அய்யம்பாளையம், குள்ளம்பாளையம், அம்மாபாளையம், வேங்கிபாளையம் ஆகிய ஊர்களில் உள்ள சாலைகளைத் தேவை ஏற்படின் தார்ச் சாலைகளாக மாற்றம் செய்யப் போதிய நிதி ஆதாரம் கிடைக்கப்பெற்றபின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**53—**

**சாலை வசதி**

**வினா எண் 11007—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, செங்கோடம்பாளையம் ஊராட்சி, கருக்கம்பாளையம்-குள்ளம்பாளையம் வரை செல்லும் மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தரவும், செங்கோடம்பாளையம் ஊராட்சி, காசிலிங்கம்பாளையத்தில் உள்ள தார்ச் சாலையைச் செப்பனிட்டுத் தரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், செங்கோடம்பாளையம் ஊராட்சியிலுள்ள கருக்கம்பாளையம், குள்ளம்பாளையம் வரை செல்லும் மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றவும், செங்கோடம்பாளையம் ஊராட்சி, காசிலிங்கம்பாளையத்தில் உள்ள தார்ச் சாலையைச் செப்பனிட்டுத் தரவும், நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**54—**

## சாலை வசதி

**வினா எண் 11009—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, செங்கோடம்பாளையம் ஊராட்சியிலுள்ள சமத்துவபுரத்தில் கான்கிரீட் சாலை அமைக்கவும், வட்டமலைப்பாளையம், தாசநாயக்கன்பட்டி, ஊதியூர் இணைச் சாலையைச் செப்பனிடவும் மற்றும் கருக்கம்பாளையம் ஆதி திராவிடர் காலனிக்குச் சாலை வசதி செய்து தரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், செங்கோடம்பாளையம் ஊராட்சியிலுள்ள கருக்கம்பாளையம் ஆதி திராவிடர் காலனிக்கு மாநில நிதிக் குழு மானியம்மூலமாக நடப்பு நிதியாண்டில் ரூ.76,000/- மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட்டமலைப்பாளையம், தாசநாயக்கன்பட்டி, ஊதியூர் ஆகிய கிராமங்களில் சாலை அமைக்கும் பணி வரும் நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து, நிதிநிலைமைக்கேற்ப நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





**55—**

## மயானக் கூடம்

**வினா எண் 11030—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சி, பூமிநாயக்கன்பட்டி காலனி மயானப் பகுதியில் மயானக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்காணும் பணியினை மேற்கொள்ள வரும் நிதியாண்டில் பெறப்படும் நிதி ஒதுக்கீடுகளில் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

**56—**

## திருமண மண்டபம்

**வினா எண் 12566—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், பிள்ளையார்குளம், வந்தவாசி ஆகிய கிராமங்களில் திருமண மண்டபம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதிக்குட்பட்ட பிள்ளையார்குளம், வந்தவாசி ஆகிய கிராமங்களில் திருமண மண்டபம் கட்டுவதற்குச் சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு செய்து பரிந்துரை செய்யும்பட்சத்தில், இந்தப் பணியினைச் செய்யத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**57—**

## புதிய சமுதாயக் கூடம்

**வினா எண் 13388—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மாங்குளம் கிராமத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதிக்குட்பட்ட மாங்குளம் கிராமத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்டுவதற்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியில் நிதி ஒதுக்கீடு செய்து பரிந்துரை செய்யும்பட்சத்தில் இந்தப் பணியினைச் செய்யத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**58—**

## மலர்கள் ஏற்றுமதி நிலையம்

**வினா எண் 8018—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தருமபுரி நகரில் விவசாயிகளின் நலன் கருதி மலர்கள் ஏற்றுமதி நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கி, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் கொய் மலருக்கென 198.73 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனமும், தனியார் நிறுவனமும் இணைந்து டான்ப்ளோரா என்ற ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. தருமபுரி தற்சமயம் பொதுக் கட்டமைப்பு வசதிகளுடன் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ள ஓசூரில் இருந்து 90 கி.மீ. தூரத்தில் உள்ளதால், இப்பகுதியில் உள்ள மலர் உற்பத்தி செய்யும் விவசாயிகள், ஓசூரில் அமைந்துள்ள ஏற்றுமதி மண்டலம்மூலம் தாங்கள் உற்பத்தி செய்யும் மலர்களை ஏற்றுமதி செய்து பயனடையலாம் என்பதால், தருமபுரி நகரில் மலருக்கென ஏற்றுமதி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**59—**

## புளி பதனிடும் நிலையம்

**வினா எண் 12015—திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோடு பகுதியில் புளி பதனிட்டுப் பாதுகாக்கின்ற நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோடு பகுதியில் புளி பதனிட்டுப் பாதுகாக்கின்ற நிலையம் அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2007 ஏப்ரல் 26

60—

## பூச்சி நோய்க்கு மருந்து

**வினா எண் 14089—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஈரியோபைட் சிலந்திப் பூச்சி நோய் மருந்து கண்டுபிடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் ஈரியோபைட் சிலந்திப் பூச்சி நோய்க்கான மருந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளால் ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் ஈரியோபைட் சிலந்திப் பூச்சியைக் கட்டுப்படுத்த ரூ.9.50 கோடி செலவில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவியுடன் திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2006-2007 ஆம் ஆண்டிலும் 22.774 கோடி ரூபாயில் இத்திட்டம் செயல்படுத்தப்படப் பரிசீலனையில் உள்ளது.

61—

## தடுப்புச் சுவர்

**வினா எண் 10152—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மணலூரிலிருந்து பார்த்திபனூர் மதகு அணை வரை வைகை ஆற்றின் இரு புறமும் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

62—

## நீர்வரத்தை அதிகரித்தல்

**வினா எண் 10906—திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், சண்முகா நதித் திட்டத்தின்மூலம் நாயக்கர் குளம், மூர்த்திநாயக்கன்பட்டி, தாதாமுத்தன் மற்றும் கருவேலன்குளம் கண்மாய்களில் நீர்வரத்தை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

சண்முகா நதி அணையின் கொள்ளளவு அதன் உறுதி செய்யப்பட்ட பாசன நிலங்களுக்கே பகிர்ந்தளிப்பதில் சிரமமான சூழ்நிலையில் இருப்பதால், குறிப்பிடப்பட்ட குளங்களின் பாசனப் பரப்பை சண்முகா நதி அணையின் பாசனத்தில் சேர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், ஓர் அணை பயன்பாட்டிற்கு வந்து 5 ஆண்டுகள் கண்காணித்த பின்பே அதன் முழுப் பயன்பாட்டையும் அறிய முடியும். அதன்படி, சண்முகா நதி 2004-ல் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதால், அதன் செயல்பாட்டை ஆராய்ந்து, 2009-க்குப் பின்பே புதிய பாசனப் பரப்பு சேர்க்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி முடிவு செய்யப்படும்.

[2007 ஏப்ரல் 26

63—

## கண்மாய் ஆழப்படுத்துதல்

**வினா எண் 11885—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதி, கூடலூரில் உள்ள மைத்தலை மன்னாங்குளத்தை ஆழப்படுத்திக் கரையை உயர்த்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

கண்மாயின் முழுக் கொள்ளளவிற்கு நீர் உள்ளதால், தற்போதைய சூழ்நிலையில் கண்மாயினை ஆழப்படுத்திக் கரைகளை உயர்த்தும் அவசியம் எழவில்லை.

64—

## பேருந்து வசதி

**வினா எண் 1237—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவாத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, காணை ஒன்றியம், நதியத்தூர் வழியாக மேல் வெங்கமூர் செல்லும் எண் 22 பேருந்தை வீரமூர், புதூர், துரவித்தாங்கல் வழியாக மேல்வெங்கமூர் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விழுப்புரத்திற்கும் வெங்கமூருக்கும் இடையே கெடார் மற்றும் கக்கனூர் வழியாக இயங்கும் நகரப் பேருந்து தடம் எண் 22, வீரமூர், புதூர், துரவித்தாங்கல் வழியாக மாற்றி இயக்கினால் தற்சமயம் பயன்பெறும் மக்கள் பேருந்து வசதி இழக்க நேரிடும் என்பதால், இப்பேருந்தினை வீரமூர் மற்றும் துரவித்தாங்கல் வழியாகத் தடம் மாற்றி



2007 ஏப்ரல் 26]

இயக்கிடச் சாத்தியமில்லை. மேலும், கேள்வியில் இடம்பெற்றுள்ள துரவித்தாங்கல்—கக்கனூர் இடைப்பட்ட 10 கி.மீ. தூரப் பகுதி சாலை, செப்பனிடப்படாத சாலையாக உள்ளது. சாலை செப்பனிடப்பட்ட பின்னர், கோரிக்கைத் தடத்தில் இயக்கிட ஆய்வு மேற்கொள்ளப்படும்.

65—

## பேருந்து வசதி

**வினா எண் 1254—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, வெள்ளம்புதூர், திருமலைப்பட்டு தாழனூர்—டீ. தேவனூர் ஆகிய இடங்களுக்கு அரசுப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருக்கோயிலூருக்கும் திருமலைப்பட்டுக்கும் இடையே அரகண்டநல்லூர் மற்றும் வடகரை, தாயனூர் வழியாக நகரப் பேருந்து தடம் எண் 22 மூலமாக 8 நடைகளும் மற்றும் நகரப் பேருந்து தடம் எண் 11 மூலமாக 2 நடைகளும், ஆக 10 (சென்று வரும்) நடைகளில் பேருந்து வசதி உள்ளது. மேலும், திருக்கோயிலூர்—திருமலைப்பட்டு இடையே தேவனூர் மற்றும் வெள்ளம்புதூர் வழியாக 2 தனியார் மினி பேருந்துகள் இயங்கி வருகின்றன; தேவனூர், வெள்ளம்புதூர் மற்றும் வடகரை, தாயனூர் கிராமங்களுக்குத் தேவையான பேருந்து வசதிகள் உள்ளன.

66—

## பேருந்து வசதி

**வினா எண் 1256—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரம் வழியாகக் கடையம் செல்லும் அரசு தடம் எண் 36 பேருந்து அத்தியூர், திருக்கை வழியாகக் கடையம் செல்ல நடவடிக்கை எடுக்கப்படுமா?

[2007 ஏப்ரல் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விழுப்புரத்திற்கும், கடையத்திற்கும் இடையே கெடார், கண்டாச்சிபுரம் மற்றும் நல்லாபாளையம் வழியாகச் சென்று வரும் நகரப் பேருந்து தடம் எண் 36-ன் நடைகளை சுக்கனூர், அத்தியூர், திருக்கை வழியாகத் தடம் மாற்றி இயக்கினால், தற்சமயம் பேருந்து வசதிபெறும் கெடார், ஒதியத்தூர், கண்டாச்சிபுரம் மற்றும் நல்லாபாளையம் கிராம மக்கள் பேருந்து வசதியை இழக்க நேரிடும் என்பதால், தடம் எண் 36-ஐ வழித்தடம் மாற்றி இயக்கிடச் சாத்தியமில்லை. ஆனால், அத்தியூர், திருக்கை கிராமத்திற்கு விழுப்புரத்திலிருந்து நகரப் பேருந்து தடம் எண் 13ஏ, எட்டு தனி நடைகள்மூலம் சென்று வரும் நடைகளில் பேருந்து வசதி உள்ளது.

**67—**

## பேருந்து வசதி

**வினா எண் 3597—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர், செம்மாண்டப்பட்டி, பெரியப்பட்டி, ஒண்டிவீரனூர்—மருத்துவமனை, தாசனூர், நல்லூர் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் மூலம் தடம் எண் 58 மற்றும் 58ஏ மூலம் ஓமலூரிலிருந்து தாராபுரம், செம்மாண்டப்பட்டி, பெரியப்பட்டி தடத்தில் தினசரி 26 நடைகளும், தடம் எண் 97 மற்றும் 79 பேருந்துகள்மூலம் ஓமலூரில் இருந்து ஒண்டிவீரனூர் வரை தினசரி 18 நடைகளும், மற்றும் தடம் எண் எஸ். 1, ஓ13 மற்றும் 99 பேருந்துகள்மூலம் ஓமலூரிலிருந்து நல்லூர் வழியாக தாசனூர் வரை தினசரி 18 நடைகளும், தடம் எண் எஸ். 1 மூலம் ஓமலூர்—நல்லூர் தடத்தில் 8 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நடைகளே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானவையாகும்.



2007 ஏப்ரல் 26]

**68—**

## பேருந்து வசதி

**வினா எண் 6520—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், நெசவாளர், வியாபாரிகள் நலன் கருதி, தொளசம்பட்டி முதல் எளம்பிள்ளை வரை மூங்கசுத்தூர் காட்டுவளவு பகுதி, மோட்டூர், தெசவிளக்கு கிராமம், லட்சுமியூர் ஆகிய இடங்களுக்குப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் கேட்கப்பட்டுள்ள வழித்தடம் புதிய வழித்தடமாகும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள இலட்சுமியூர் மற்றும் தெசவிளக்கு கிராமப் பகுதிகள் தாரமங்கலம்—சின்னப்பம்பட்டி பிரதான சாலையின் இணைச் சாலையில் அமைந்துள்ளன. இப்பகுதிகளில் பேருந்தில் பயணிக்கக்கூடிய அளவில் மக்கள் அடர்வு இல்லை. தற்போது இப்பகுதியினரின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 2 மினி பேருந்துகள் இயங்குகின்றன. மேலும், மூங்கசுத்தூர்—காட்டுவளவு, மோட்டூர் ஆகிய பகுதிகள் பாப்பம்பட்டி—எளம்பிள்ளை பிரதான சாலையின் இணைச் சாலையில் அமைந்துள்ளன. இதில் மூங்கசுத்தூர் முதல் ஏகாபுரம் வரையிலான சாலை கப்பிச் சாலையாகவும், குறுகலான சாலையாகவும், பேருந்து இயக்கிட இயலாத அளவில் உள்ளது. மேலும், மோட்டூர் பிரிவு முதல் தாடிக்காரனூர் வரையிலான சாலை மண் சாலையாக உள்ளது. எனவே, கேட்கப்பட்டுள்ள தடத்தில் பேருந்துகள் இயக்கிட இயலாது.

**69—**

## பேருந்து நிறுத்தம்

**வினா எண் 6524—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 26

(அ) தாரமங்கலம் தொகுதி, செக்குமேடு பகுதியிலுள்ள பள்ளிக் குழந்தைகளின் வசதியை முன்னிட்டு அங்கு பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம்—எடப்பாடி (வழி) கொங்கணாபுரம் வழித்தடத்தில் மேட்டுப்பாளையம் பிரிவு சாலை மற்றும் எட்டிக்குட்டைமேடு ஆகிய பேருந்து நிலைகளுக்கு இடையே உள்ள செக்குமேடு பேருந்து நிறுத்தத்தில் அவ்வழித்தட அனைத்து நகரப் பேருந்துகளும் நின்று, பயணிகள்/பள்ளி மாணவர்களைத் தவறாமல் ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன.

**70—**

## பேருந்து வசதி

**வினா எண் 8400—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புலியூர் காட்டுசாகை கிராமத்திற்கு, கடலூர், வெள்ளக்கரை, கட்டியாங்குப்பம், ஒதியடிக்குப்பம், கட்டியாங்குப்பம், சத்திரம் வழியாக குறிஞ்சிப்பாடி வரை அரசுப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, புலியூர் காட்டுசாகை, கடலூரிலிருந்து வடமேற்கே 22.8 கி.மீ. தொலைவில் உள்ளது. கடலூர்—குறிஞ்சிப்பாடி இடையே புலியூர் காட்டுசாகை, கட்டியாங்குப்பம் வழியாக உள்ள தூரம் 35.5 கி.மீ. என்பதால் நகரப் பேருந்து இயக்க இயலாது. புலியூர் காட்டுசாகை கிராமத்திற்குக் கடலூரிலிருந்து நகரப் பேருந்து தடம் எண் டி11 மூலமாக 14 சென்று வரும் நடைகளில் பேருந்து வசதி உள்ளது. எனினும், தற்சமயம் வெள்ளைகரை கிராமத்திற்கு நகரப் பேருந்து தடம் எண் டி12 மூலம்



2007 ஏப்ரல் 26]

10 சென்று வரும் நடைகளிலும், நகரப் பேருந்து தடம் எண் டி29 மூலம் 2 சென்று வரும் நடைகளிலும் பேருந்து வசதிகள் உள்ளன. ஒதியடிக்குப்பம் கிராமத்திற்கு நகரப் பேருந்து தடம் எண் டி12 மூலம் 10 சென்று வரும் நடைகளில் பேருந்து வசதி உள்ளது. கட்டியங்குப்பம் கிராமத்திற்கு நகரப் பேருந்து தடம் எண் டி10 மூலம் 12 நடைகள், நகரப் பேருந்து டி28 மூலம் 2 நடைகள், நகரப் பேருந்து டி23 மூலம் 6 நடைகள், ஆக நாளொன்றுக்கு 20 சென்று வரும் நடைகளில் பேருந்து வசதிகள் உள்ளன. பகுதிவாரியாகப் பேருந்து வசதி உள்ள நிலையில் நேரடிப் பேருந்து வசதி அளித்திடத் திட்டம் ஏதும் இல்லை.

**71—**

## போக்குவரத்தைச் சீர் செய்தல்

**வினா எண் 9182—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகர் மேம்பாலம், ரயில் நிலையம், வட கோயம்புத்தூர் மேம்பாலம் ஆகிய இடங்களில் போக்குவரத்தினைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோவை மாநகரத்தில் போக்குவரத்தினைச் சீர் செய்யும் வகையில் கோவை மாநகரப் புகை வண்டி நிலையத்தின் எதிரிலும், பாரத ஸ்டேட் வங்கி சாலையிலும், இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடங்களும், கால் டாக்சி, ஆட்டோ நிறுத்துமிடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பேருந்து நிறுத்துமிடங்களில் அதைத் தெரிவிக்கும் அறிவிப்புப் பலகைகளும் நிறுவப்பட்டுள்ளன. கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சாலைச் சந்திப்பில் தானியங்கி விளக்குக் கம்பங்கள் நிறுவத் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சாலைகளில் ஏற்படும் வாகன விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக கோவை—அவினாசி சாலை பழைய மேம்பாலத்தின் தடுப்புச் சுவர்களின் மீது ஒளி பிரதிபலிப்பான்களும் நிறுவப்பட்டுள்ளன. கோவை மாநகராட்சியின் உதவியுடன் பாலத்தின்

[2007 ஏப்ரல் 26

கீழ்ப்பகுதியில் மழை நீர் தேங்குவதைத் தடுக்கவும், மழை நீரை இறைத்து வெளியேற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோவை மாநகரத்தின் சாலைப் போக்குவரத்தை மேலும் சீரமைக்கவும், உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் தேவையான நிதியுதவியைப் பெற மத்திய அரசின் நகர்ப்புறப் புனரமைப்புக் கழகத்திற்குத் திட்ட மதிப்பீட்டுக் கருத்துருவும் அனுப்பப்பட்டுள்ளது.

**72—**

## ஆவணங்கள் பாதுகாப்பு

**வினா எண் 14594—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கணினி ஏற்படுத்துவதற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட பத்திரங்களை மீண்டும் கணினிமூலம் ஸ்கேன் செய்து வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

கணினி ஏற்படுத்துவதற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் உரிய ஆவணதாரர்களால் திரும்பப்பெறப்பட்டுள்ள நிலையில், அவற்றை ஸ்கேன்மூலம் உள்ளீடு செய்யத் தற்போது வாய்ப்பு இல்லை. ஆனால், கணினிமயமாக்கப்பட்ட சார் பதிவகங்களில் தற்போது ஆவணங்கள் ஸ்கேன்மூலம் உள்ளீடு செய்யப்பட்டு நெகிழ்வட்டுக்கள்மூலம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**73—**

## பட்டா

**வினா எண் 3746—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஓமலூர் வட்டம், கொட்டமேட்டுப்பட்டி கிராமம், பழைய வண்டிப்பேட்டை பகுதியில் புறம்போக்கு நிலத்தில் வீடுகள் கட்டிக் குடியிருக்கும் குடும்பங்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?



2007 ஏப்ரல் 26]

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும்மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**74—**

## பட்டா

**வினா எண் 8279—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, நாட்டான்வலசு என். காஞ்சிபுரம் காலனி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும்மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 26

**75—**

**பட்டா**

**வினா எண் 13159—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, அருணகிரிபாளையம் வெங்கமேடு பகுதி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும்மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**76—**

**பட்டா**

**வினா எண் 14678—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, கவுந்தப்பாடி கிராமம், வேலம்பாளையம் ஆஸ்பத்திரிமேடு பகுதியில் வசிப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும்மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**77—**

**பட்டா**

**வினா எண் 17239—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், டேனிஷ்பேட்டை கிராமம், காந்தி நகர் வாளையாந்தோப்பு பகுதியில் வீடு கட்டிக் குடியிருந்து வரும் சுமார் 150 குடும்பங்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச் சாலைகள் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும்மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 26

**78—**

## குடும்ப அட்டை பதிவு

**வினா எண் 3593—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், புதுகாருவள்ளி, சந்தனூர் காட்டுவளவு பகுதி மக்களுக்கு காருவள்ளி பகுதியில் உள்ள நியாய விலைக் கடையில் குடும்ப அட்டை பதிவு செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், புதுகாருவள்ளி, சந்தனூர் காட்டுவளவு பகுதியில் இருந்து மொத்தம் 118 குடும்ப அட்டைதாரர்கள் சின்னத் திருப்பதி நியாய விலைக் கடையில் பொருட்கள் பெற்று வருகின்றனர். சின்னத் திருப்பதி நியாய விலைக் கடைக்கும், காருவள்ளி நியாய விலைக் கடைக்கும் இடையே உள்ள தூரம் சுமார் 2 கி.மீ. ஆகும். மேற்படி சந்தனூர் காட்டுவளவு பகுதியைச் சேர்ந்த பொது மக்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விருப்பம் தெரிவித்த 42 குடும்ப அட்டைதாரர்களின் குடும்ப அட்டைகள் காருவள்ளி நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுவிட்டது. தற்போது மேற்படி குடும்ப அட்டைதாரர்கள் காருவள்ளி நியாய விலைக் கடையில் பொருட்கள் பெற்று வருகின்றனர். மீதமுள்ள 76 குடும்ப அட்டைதாரர்கள் சம்மதக் கடிதம் கொடுக்க முன்வரவில்லை என்பதால், சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் அடிப்படையில் மீண்டும் சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்களை நேரடியாகச் சந்தித்து விசாரணை மேற்கொண்டதில், மேற்கண்ட குடும்ப அட்டைதாரர்கள் ஏற்கெனவே பொருட்கள் பெற்று வந்த சின்னத் திருப்பதி நியாய விலைக் கடையிலேயே பொருட்கள் பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதால், சந்தனூர் காட்டுவளவைச் சேர்ந்த 76 குடும்ப அட்டைதாரர்களைக் காருவள்ளி நியாய விலைக் கடையில் பதிவு செய்யத் தேவையில்லை.



2007 ஏப்ரல் 26]

**79—**

## கூடுதல் கட்டணம்

**வினா எண் 12301—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, இலக்கியம்பட்டி ஊராட்சி, வெண்ணாம்பட்டியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகளுக்கு முழுத் தொகையைச் செலுத்திய வீட்டு உரிமையாளர்களிடம் கூடுதல் கட்டணம் வசூல் செய்வதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தருமபுரி, வெண்ணாம்பட்டியில் வீட்டு வசதித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 58.22 ஏக்கர் நிலத்தினை ஆர்ஜிதம் செய்து 288 வீடுகளைக் கட்டி 1987-88 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்தது. நீதிமன்றத் தீர்ப்பின்படி ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு, 2004 ஆம் ஆண்டில் நிலத்தின் விலை இறுதி செய்யப்பட்டு, மனையின் தோராய விலைக்கும், இறுதி விலைக்கும் இடையிலான வித்தியாசத் தொகையினைச் செலுத்தக் கோரி ஒதுக்கீட்டாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இத்தொகை ஒப்பந்த விதிமுறைகளின்படி செலுத்தப்பட வேண்டிய தொகையாகும். இது கூடுதல் தொகை அல்ல. எனவே, இந்த வித்தியாசத் தொகையினைத் தள்ளுபடி செய்ய இயலாது.

(ஆ) எழவில்லை.

**80—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 10149—திரு. கோ. அரி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 26

திருத்தணி, கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும். திருத்தணி வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர் கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் கடம்பத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. எனவே, விடையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**81—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 10547—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மல்லிக்குந்தம் அரசு துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, 2 ஆரம்ப சுகாதார மையங்களுக்குக் குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும். ஆனால், சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், மல்லிக்குந்தம் கிராமத்திற்கும், மேச்சேரி



2007 ஏப்ரல் 26]

ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், மல்லிக்குந்தம் கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றி அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**82—**

## அடிப்படை வசதி

**வினா எண் 11174—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுற்றுச் சுவர் மற்றும் அடிப்படை வசதிகள் செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதியில் ஆக்கூர், மேலபெரும்பள்ளம், சங்கரன்பந்தல், செம்பனார்கோயில், திருக்கடையூர், பூம்புகார் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இவற்றில், ஆக்கூர் ஆரம்ப சுகாதார நிலையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாக 24 மணி நேரமும் இயங்குகிறது. சங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையமும் 24 மணி நேரமும் இயங்குகிறது. மேற்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதுமான அடிப்படை வசதிகளுடன் செவ்வனே செயல்பட்டு வருகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய வழிவகை இல்லை. எனவே, பாராளுமன்ற/ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவிபெற்று சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு நாகப்பட்டினம் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநருக்குப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 26

**83—**

## புதிய மதிற்சுவர்

**வினா எண் 11281—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய மதிற்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட மதுக்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் மதுக்கூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசு நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனினும், பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவிபெற்று சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு தஞ்சாவூர் மாவட்டத் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அவர்களுக்குப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**84—**

## கொசு ஒழிப்பு

**வினா எண் 14582—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கொசுக்களை ஒழிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அரசாணை (டி) எண் 854, சுகாதாரம், நாள் 25-8-2006-ன்படி 235 ஃபாகிங் மெஷின் (Fogging Machine) ரூ.1.225 கோடி (ரூபாய் ஒரு கோடியே இருபத்திரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டு, புகை அடிக்கும் கருவிகள் வாங்கப்பட்டு, அவைகள் பயன்பாட்டிற்காக அனைத்துத் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மேற்படி அரசாணையின்படி, 620 மஸ்தூர்கள் மற்றும் அரசாணை (நிலை) எண் 273, சுகாதாரம், நாள் 30-10-2006-ன்படி 3,230 மஸ்தூர்கள், ஆக மொத்தம் 3,850 மஸ்தூர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் களப் பணியில் கொசுக்களை ஒழிப்பதற்கு மருந்து தெளித்தல், மேலும் கொசு உற்பத்தியாவதைத் தடுக்க குப்பைகள், டயர்கள் மற்றும் தேங்கியுள்ள பொருட்களை அகற்றுவது ஆகிய பணிகளைச் செய்து வருகின்றனர். மேற்படி 3,850 மஸ்தூர்கள் தற்காலிகமாக மூன்று மாதங்களுக்கு நியமிக்கப்பட்டு, தினக் கூலி அடிப்படையில் தொகை பட்டுவாடா செய்வதற்கு மேலே கண்ட அரசாணையில் ரூ.2,45,52,500/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிக்குன்குன்யா வராமல் தடுப்பதற்காக கொசுக்களை ஒழிக்கும் பணியில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து களப் பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டு, கொசுக்கள் வளராமல் தடுக்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை எண் 278, சுகாதாரம், நாள் 31-10-2006-ன்படி 742 சுகாதார ஆய்வாளர்கள் கிரேடு—II நிலையில் நியமிக்கப்பட்டு களப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் ஆரம்ப நிலையிலேயே கொசுப் புழுக்களை ஒழிப்பதற்கு ஃபேடக்ஸ், அபேட் போன்ற மருந்துகளைத் தெளித்து அவை அழிக்கப்பட்டு வருகின்றன.

கொசுப் புழு ஒழிப்புப் பணி மற்றும் முதிர்கொசு ஒழிப்புப் பணி, மலேரியா ஒழிப்புத் திட்டத்தின்கீழ் ஆண்டாண்டு காலமாக 1957 முதல் கடலோரப் பகுதிகள், ஆற்றுப் படுகை மற்றும் நகர்ப்புறங்களிலும் செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம் கொசு ஒழிப்புப் பணி செவ்வனே செய்யப்பட்டு வருகிறது.

நகரப் பகுதிகளில் யானைக்கால் நோய் ஒழிப்புப் பணிக்காக கொசுப் புழு அழிக்கும் மருந்துகள் 25 யானைக்கால் தடுப்புக் கட்டுப்பாட்டு நிலையங்கள்மூலம் தெளிக்கப்பட்டு வருகின்றன.

தற்சமயம் சிக்குன்குன்யா ஒழிப்புப் பணியைத் தீவிரப்படுத்தும் முறையில் தனியார் நிறுவனங்கள், ஓட்டல் உரிமையாளர்கள் ஆகியோருக்குக் கொசு வளரும் இடம் மற்றும் அவற்றை அழிக்கும்/ வளர்வதைத் தடுக்கும் முறை பற்றி விளக்கவுரையும், செயல் முறை விளக்கங்களும் மாவட்ட அளவில் அளிக்கப்பட்டு வருகின்றன.

**85—**

## மருத்துவர் பணி நேரம்

**வினா எண் 14814—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் மருத்துவர்கள் பணிபுரிய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் நான்கு மருத்துவர்கள் உள்ளனர். அவர்கள் 24 மணி நேரமும் பணிபுரிந்து வருகின்றனர்.

**86—**

## ஸ்கேன் வசதி

**வினா எண் 14829—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி அரசு பொது மருத்துவமனையில் உள்ள MRI Scan கருவி பழுதடைந்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏற்கெனவே MRI Scan கருவி நிறுவப்படவில்லை. தற்பொழுதுதான் தமிழக அரசு ரூ.4.79 கோடி செலவில் புதிதாக MRI Scan வாங்கி, அதனை நிறுவுவதற்கு இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளது. விரைவில் MRI Scan கருவி நிறுவப்படும்.

**87—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 12345—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரில் செயல்பட்டு வரும் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு இட ஒதுக்கீடு ஏதும் வழங்கப்படவில்லை. மேலும், தருமபுரியில் வருவாய்த் துறை மற்றும் பொதுப் பணித் துறைகளுக்குச் சொந்தமான காலிக் கட்டடங்கள் ஏதும் இல்லை. எனவே, இவ்வேலைவாய்ப்பு அலுவலகம் தொடர்ந்து வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. மேலும், தருமபுரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

[2007 ஏப்ரல் 26

**88—**

## தங்கும் விடுதி

**வினா எண் 6890—திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி கோயிலுக்குக் கூடுதலாகத் தங்கும் விடுதி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தெற்குச் சித்திரை வீதியில் உள்ள 116 ஆம் எண்ணுள்ள கட்டடத்தினை முழுமையாக இடித்துவிட்டு, தரைத் தளத்தில் 4 அறைகளும், முதல் தளத்தில் 3 அறைகளும் கட்ட ரூ.27 இலட்சத்திற்கு மதிப்பீடு பெறப்பட்டு, கூடுதலாகத் தங்கும் விடுதி கட்டத் திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், திருவரங்கம் அம்மா மண்டபத்தில் உள்ள மதுரகவி ஆழ்வார் நந்தவன அறக்கட்டளைக்குச் சொந்தமான 1.85 ஏக்கர் நிலத்தினைத் திருக்கோயில் சார்பாக விலைக்கு வாங்கி, கூடுதலாக தங்கும் விடுதிகள் கட்டுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**89—**

## தொழிற்சாலைப் புகை

**வினா எண் 8047—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஆலாம்பாடி கிராமம், வரதப்பக் கவுண்டன் புதூர், குப்பக்கவுண்டன் வலசு, தொட்டியம்பட்டி, வரதப்பம்பாளையம் ஆகிய பகுதிகளிலுள்ள தேங்காய்த் தொட்டியில் கரி தயாரிக்கும் தொழிற்சாலைப் புகையால் விவசாய நிலங்கள், ஆடு, மாடுகள், தென்னை மரங்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் பகுதியில் தேங்காய் ஓடுகளை எரித்துக் கரி தயாரிக்கும் சிறிய தொழிற்சாலைகள் சுமார் 20 உள்ளன. இவைகள் தரிசு நிலங்களில் அமைந்துள்ளன. தேங்காய்த் தொட்டிகள் எரிக்கும்போது புகை வெளியேறி சுற்றுச்சூழலை மாசுபடுத்துகின்றது. இத்தொழிற்சாலைகள் எந்த ஒரு பெயருமின்றி தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய உரிமமோ மற்றும் எந்தவிதமான அரசு உரிமங்களோ பெறாமல் இயங்கி வருகின்றன. மேலும், காங்கேயம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தலைமையில் 10-7-2006 அன்று கூட்டம் நடத்தப்பட்டு, மேற்கூறிய தேங்காய் ஓடுகள் எரிப்பதால் ஏற்படும் காற்று மாசு சம்பந்தமான பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. இது சம்பந்தமாக காங்கேயம் வட்டத்திலுள்ள தேங்காய் எரிக்கும் தொழிற்சாலைகள் ஆய்வு செய்யப்பட்டு ஈரோடு மாவட்ட சுற்றுச்சூழல் நலப் பொறியாளர்மூலம் முகாந்திரக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சில தொழிற்சாலைகளிலிருந்து பதில்கள் பெறப்பட்டுள்ளன. அதில் காற்று மாசு தடுப்புச் சாதனங்களை முறையாக நிறுவியும், மாசு கட்டுப்பாட்டு வாரிய இசைவாணையைப் பெற்ற பின்னரே தொழிற்சாலையை இயக்குவோம் என்று பதில் தெரிவித்துள்ளனர். மேற்படி தொழிற்சாலைகளை வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

**90—**

## பாலம் கட்டுதல்

**வினா எண் 13504—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டியிலிருந்து காந்தி நகர் வழியாக சமத்துவபுரம் செல்லும் சாலையில் வரட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டியிலிருந்து காந்தி நகர் வழியாக சமத்துவபுரம் செல்லும் சாலையில் வரட்டாற்றின் குறுக்கே பாலம் மற்றும் அணுகுச் சாலை அமைப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**91—**

**ஊட்டச் சத்து மையம்**

**வினா எண் 4186—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பச்சினம்பட்டி ஊராட்சி, மோட்டூர் பகுதி தொடக்கப் பள்ளிக்குப் புதிய சத்துணவுக் கூடம், ஊட்டச் சத்து மையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டாரம், பச்சினம்பட்டி பஞ்சாயத்து, மோட்டூரில் மக்கள் தொகை 994 ஆகும். 1-8-1993 முதல் 17-3-2003 வரை தனித்த ஊட்டச் சத்து மையம் செயல்படுத்தப்பட்டு வந்தது. தற்போது 18-3-2003 முதல் அங்கன்வாடி மையமாக, துவக்கப் பள்ளி அருகில் உள்ள வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

**92—**

**சமையலறைக் கூடம்**

**வினா எண் 4970—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, போத்தாபுரம் கிராம சத்துணவு சமையல் கூடக் கட்டுமானப் பணியை விரைந்து நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?





**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், எர்ரஅள்ளி ஊராட்சி, போத்தாபுரம் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளிச் சத்துணவு மையச் சமையலறைக் கூடப் பணி புதியதாக ரூ.65,000/- மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் எடுத்துப் பணி முடித்துப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

**93—**

**மதிய உணவு**

**வினா எண் 7934—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, மணலகரம், வடரெங்கம், வேட்டங்குடி, திட்டுப்படுகை, முதலைமேடு, நல்லூர், சந்தப்படுகை, ஆனந்தக்கூத்தன், தொடுவாய், கடைக்கண் விநாயகநல்லூர், பெரம்பூர் மற்றும் தாண்டவன்குளம் கிராமங்களில் நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் மதிய உணவு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதியில் நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்ட மணலகரம், வடரெங்கம், வேட்டங்குடி, திட்டுப்படுகை, முதலைமேடு, நல்லூர், சந்தப்படுகை, ஆனந்தக்கூத்தன், தொடுவாய், கடைக்கண் விநாயகநல்லூர், பெரம்பூர் மற்றும் தாண்டவன்குளம் கிராமங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளில் 20-11-2006 முதல் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

**94—**

**அங்கன்வாடி மையம்**

**வினா எண் 8078—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 26

(அ) காங்கேயம் தொகுதி, தாராபுரம் சாலை, குதிரைப்பள்ளம், பொன்னி நகருக்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, குதிரைப்பள்ளம், பொன்னி நகர் என்ற பகுதி ஏற்கெனவே இயங்கி வரும் 1 கி.மீ. தொலைவில் உள்ள பாரதியார் நகர் அங்கன்வாடி மையத்திற்குத் துணை கிராமமாக உள்ளது. இப்பகுதியில் மக்கள் தொகை 160 ஆகக் குறைவாக உள்ளனர். 0—3 வயதுக் குழந்தைகள் 4 பேரும், 3—6 வயதுக் குழந்தைகள் 2 பேரும் உள்ளனர். கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் இல்லை. எனவே, பொன்னி நகர்ப் பகுதியில் உள்ள குறைவான பயனாளிகள் ஏற்கெனவே செயல்பட்டு வரும் பாரதியார் நகர் அங்கன்வாடி மையம் மூலம் பயனடைந்து வருவதால், மேற்காணும் இடத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க வாய்ப்பில்லை.

**95—**

## ஊனமுற்றோருக்கு உதவி

**வினா எண் 8817—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உடல் ஊனமுற்றோர்களைக் கணக்கெடுப்புச் செய்து உரிய நிவாரணம் கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 20-12-2006 மற்றும் 22-12-2006 ஆகிய இரு தினங்களில் மருத்துவக்



2007 ஏப்ரல் 26]

குழுக்கள் மூலம் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு, ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டது. மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஊனமுற்றோர்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்ட உபகரணங்கள் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | மூன்று சக்கர சைக்கிள் பெற்றவர்கள் | 8 |
| 2. | சக்கர நாற்காலி பெற்றவர்கள் | 1 |
| 3. | மடக்கு ஊன்றுகோல் பெற்றவர்கள் | 5 |
| 4. | பிரெய்லி கைக்கடிகாரம் பெற்றவர்கள் | 1 |
| 5. | ஊன்றுகோல் பெற்றவர்கள் | 3 |
| 6. | செயற்கை அவயம் பெற்றவர்கள் | 2 |

**சுனாமி சிறப்புத் திட்டம் (ADB)**

| பயனடைந்த நபர்கள் | தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|
| 244 | 10,000 | 24,40,000 |

**96—**

## புதிய கட்டடம்

**வினா எண் 11771—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில், 22-வது வட்டம் மறவன்குடியிருப்புப் பகுதியில் சத்துணவு மையத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மறவன்குடியிருப்பு அரசு நடுநிலைப் பள்ளிச் சத்துணவு மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப் போதிய இட வசதி இல்லை என்பதால், தற்போது இயங்கி வரும் கட்டடத்தை, நடப்பு நிதி ஆண்டிற்குப் பெறப்படும் பழுது நீக்க நிதியிலிருந்து முன்னுரிமை வழங்கிப் பழுது நீக்கம் செய்யப்படும்.

97—

## அங்கன்வாடிக் கட்டடம்

**வினா எண் 11820—திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், கருப்பமுதலியார் கோட்டையில் அங்கன்வாடிக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், கருப்பமுதலியார் கோட்டை கிராமத்தில் ஒரு அங்கன்வாடி மையம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும், அதே ஊராட்சியில் ராஜபுரம் கிராமத்தில் 4-4-2004 முதல் ஒரு அங்கன்வாடி மையம் துவங்கப்பட்டு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மையத்திற்குத் தனியே சொந்தக் கட்டடம் வரும் நிதியாண்டில் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

98—

## சமையல் எரிவாயு

**வினா எண் 11844—திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை நகரிலுள்ள சத்துணவு மையங்களில் சமையல் எரிவாயுவைப் பயன்படுத்த அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

சத்துணவு மையங்களில் உள்ள சமையலறைகளை நவீனப்படுத்தும் முகமாக முதலில் இந்த ஆண்டு (2006-07) இதனை ஒரு முன்னோடித் திட்டமாக (as a pilot scheme) சுமார் 400 பயனாளிகளுக்கும் அதிகமாக உள்ள சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிப் பகுதிப் பள்ளிகளிலும், வேலூர், விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி மற்றும் திருவள்ளூர் ஆகிய நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள 750 பள்ளிச் சத்துணவு மையங்களுக்கும் எரிவாயு இணைப்பு வசதி ஏற்படுத்தித் தர ஒரு சத்துணவு மையத்திற்கு ரூ.20,000/- வீதம் மொத்தம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் சத்துணவுச் சமையலறைகளை நவீனப்படுத்த அரசாணை (நிலை) எண் 1, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 4-1-2007-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணைக்கிணங்க, சென்னை நகரில் உள்ள சத்துணவு மையங்களில் சமையல் எரிவாயு பகுதியாகப் (phased manner) பயன்படுத்தப்படும்.

99—

## குழந்தைகள் காப்பகம்

**வினா எண் 16501—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, அய்யங்காடு காலனி பகுதி மற்றும் அண்ணா நகர்ப் பகுதியில் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

[2007 ஏப்ரல் 26

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில், பெத்தநாயக்கன்பாளையம் மற்றும் சேலத்தில் அரசு குழந்தைகள் காப்பகம் செயல்பட்டு வருகிறது. இவற்றில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை முறையே 100 மற்றும் 250 ஆகும். சேலம் மாவட்டம் மற்றும் அருகிலுள்ள மாவட்டங்களில், விருப்பம் உள்ளவர்கள் மேற்கண்ட இரண்டு அரசு குழந்தைகள் காப்பகங்களில் குழந்தைகளைச் சேர்த்து வருகிறார்கள். எனவே, இந்நிலையில் புதியதாக சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில் கோட்டமேட்டுப்பட்டி ஊராட்சி, அய்யங்காடு காலனி பகுதி மற்றும் அண்ணா நகர்ப் பகுதியில் குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தச் சாத்தியக் கூறுகள் இல்லை.

**100—**

### புதிய கட்டடம்

**வினா எண் 8918—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடையார்பாளையம் கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம்தான் செயல்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் உடையார்பாளையம் கால்நடைக் கிளை நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டத் தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.



2007 ஏப்ரல் 26]

### பட்டியல் 8

**1—**

### கடுமையான தண்டனை

**வினா எண் 7292—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கற்பழிப்பில் சம்பந்தப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு இவ்வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது. வன்புணர்ச்சியில் ஈடுபடுகின்ற நபர்கள்மீது காவல் துறையினர்மூலம் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களுக்கு நீதிமன்றங்களில் தண்டனை வழங்கப்பட்டு வருகிறது. வன்புணர்ச்சியில் ஈடுபடுகின்ற நபர்கள்மீது இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 376எ முதல் டி வரை, பிரிவுகளுக்கு ஏற்றபடி நீதிமன்றங்களில் கடுமையான தண்டனை வழங்கப்பட்டு வருகிறது. வன்புணர்ச்சியில் ஈடுபடுகின்ற ஒரு நபருக்கு 7 ஆண்டுகளுக்குக் குறையாமலும், ஆனால் 10 ஆண்டுகள் அல்லது ஆயுட்காலம் வரை நீடிக்கக்கூடிய சிறைக் காவல் தண்டனையுடன், அபராதமும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படுகிறது.

**2—**

### காவல் நிலையம்

**வினா எண் 10753—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் வட்டக் காவல் நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் வட்டக் காவல் நிலையம் அமைக்கப்படுவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

3—

### காவல் நிலையம்

**வினா எண் 10898—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூரில் காவல் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் நிலையங்கள் அமைப்பது தொடர்பாக வரக்கூடிய கோரிக்கைகள் அனைத்தும் அவ்வப்போது எழக்கூடிய தேவையையும், நிலவும் சூழலையும், கோரிக்கையின் நியாயத்தையும் கருத்தில் கொண்டு உரிய வகையில் முக்கியத்துவம் தந்து நன்கு பரிசீலனை செய்து, முன்னுரிமை அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கூறிய சூழ்நிலையில், மேல்மலையனூரில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்து நன்கு ஆய்வு செய்து, தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப, காவல் குழு பரிந்துரைக்குப்பின் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

4—

### உதவி ஆய்வாளர்

**வினா எண் 11278—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



பட்டுக்கோட்டை காவல் நிலையத்திற்குப் போக்குவரத்து உதவி ஆய்வாளரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை நகரத்தில் போக்குவரத்து உதவி ஆய்வாளர் நியமனம் செய்யப்பட்டு, கடந்த 07-09-2006 முதல் பணிபுரிந்து வருகிறார்.

5—

### காவல் நிலையம்

**வினா எண் 11280—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரில் வட்ட அளவில் தனிக் காவல் நிலையம் அமைக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் மானிய கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது 30-8-2006 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கேற்ப, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை என்ற இடத்தில் உள்ள காவல் நிலையத்தைத் தரம் IV-லிருந்து தரம் III ஆக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டை நகரில் வட்ட அளவில் காவல் நிலையம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

### நிலை உயர்த்துதல்

**வினா எண் 11912—திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில், மேல்பட்டியில் உள்ள புறக்காவல் நிலையத்தைத் தலைமையிடக் காவல் நிலையமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 26

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்நிதியாண்டில் முதல் கட்டமாகப் பேரணாம்பட்டு தொகுதியிலுள்ள மேல்பட்டி உட்பட 10 புறக்காவல் நிலையங்களை நிலை உயர்த்துவதாக இவ்வரசு அறிவிப்புச் செய்து, அதற்கான உத்தரவு 12-1-2007 நாளிட்ட அரசாணை உள் துறையில் வெளியிடப்பட்டுள்ளது.

**7—**

**காவல் நிலையம்**

**வினா எண் 11963—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பாட்டைக்குளம் பகுதியில் கிராமியக் காவல் நிலையம் துவக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் நிலையங்கள் அமைப்பது தொடர்பாக வரக்கூடிய கோரிக்கைகள் அனைத்தும் அவ்வப்போது எழக்கூடிய தேவைவையும், நிலவும் சூழலையும், கோரிக்கையின் நியாயத்தையும் கருத்தில்கொண்டு உரிய வகையில் முக்கியத்துவம் தந்து நன்கு பரிசீலனை செய்து, முன்னுரிமை அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் முடிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கூறிய சூழ்நிலையில், ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பாட்டைக்குளம் பகுதியில் கிராமியக் காவல் நிலையம் அமைப்பது குறித்து நன்கு ஆய்வு செய்து, தேவை மற்றும் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**8—**

**மகளிர் காவல் நிலையம்**

**வினா எண் 11964—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, ஆரணி நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் மகளிர் காவல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஒவ்வொரு காவல் உட்கோட்டத் தலைமையிடத்திலும் மகளிர் காவல் நிலையம் ஏற்படுத்துதல் என்ற அரசின் கொள்கை முடிவின்படி, ஆரணி தொகுதியில், ஆரணி நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் ஏற்கெனவே ஒரு மகளிர் காவல் நிலையம் அமையப்பெற்று இயங்கி வருகிறது.

**9—**

**ஊக்கத் தொகை**

**வினா எண் 13844—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதவி ஆய்வாளர் முதல் துணைக் கண்காணிப்பாளர் வரை, வாரம் ஒரு முறை விடுப்பு எடுக்காத காவலர்களுக்கு வழங்கப்படுவதுபோல் ஊக்கத் தொகை வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கூடுதல் பணி நேரச் சிறப்பு ஊதியம் (ETR) காவலர் முதல் தலைமைக் காவலர் நிலையிலுள்ள பதவிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை உதவி ஆய்வாளர் முதல் காவல் துணைக் கண்காணிப்பாளர் வரை உள்ளவர்களுக்கு வழங்குவதற்கு அரசு விதிகளில் இடமில்லை. மேலும், இது குறித்து எந்த ஒரு கருத்துருவும் பரிசீலனையில் இல்லை.

**10—**

**ஏவலர் பணி முறை**

**வினா எண் 15613—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர் காவல் துறை அதிகாரிகள் வீட்டில் பணிபுரியும் ஏவலர் பணி முறையை ஒழிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உயர் காவல் துறை அதிகாரிகள் வீட்டில் பணிபுரிந்த ஏவலர் (Orderly) பணி முறை, அரசாணை (நிலை) எண் 2231, உள் துறை, நாள் 5-9-1979-ன்படி முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக அரசாணை (நிலை) எண் 664, உள் துறை, நாள் 19-3-1982-ன்படி கடைநிலை ஊழியர்கள் (Basic Government Servants) அமர்த்தப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட அரசாணைகளின்படி ஏவலர் பணி முறை ஏற்கெனவே ஒழிக்கப்பட்டுள்ளது.

**11—**

### காவலர் நியமனம்

**வினா எண் 15638—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், முடிஸ், கோட்டூர் ஆகிய காவல் நிலையங்களுக்குப் போதுமான காவலர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில், பொள்ளாச்சி உட்கோட்டத்தில் அமையப்பெற்றுள்ள முடிஸ், கோட்டூர் ஆகிய காவல் நிலையங்கள் வகை 5-ஐச் சார்ந்தவை. வகை 5-ஐச் சார்ந்த காவல் நிலையங்களுக்கென அரசு ஒப்பளிப்புச் செய்துள்ள 22 பணியாளர்களைக்கொண்டு இக்காவல் நிலையங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. இக்காவல் நிலையங்களின் வகையைத் தரம் உயர்த்தி மேலும் காவலர்களை நியமனம் செய்ய வேண்டிய அளவிற்கு அக்காவல் நிலைய எல்லைகளில் குற்ற நிகழ்வுகளோ, சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினையோ எழவில்லை.



**12—**

### புதிய மின் மாற்றி

**வினா எண் 3937—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, பரக்கலக்கோட்டை ஊராட்சியில் உள்ள மண்ணெண்ணெய் கேணிப் பகுதியில் புதிய மின் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

பரக்கலக்கோட்டை ஊராட்சியில் உள்ள மண்ணெண்ணெய் கேணிப் பகுதியில் உள்ள பரக்கலக்கோட்டை III மின் மாற்றியின் திறனை 63 கே.வி.ஏ.ல் இருந்து 100 கே.வி.ஏ. ஆக மாற்ற மதிப்பீடு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் மின் மாற்றி மாற்றியமைத்துத் தரப்படும்.

**13—**

### தெரு விளக்கு வசதி

**வினா எண் 9917—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, சோப்பனூர் காலனி கோயில் முன்பு மின் கம்பம் மற்றும் மின் விளக்கு அமைத்துத் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதி, சோப்பனூர் காலனியில் தற்சமயம் இரண்டு கோயில்கள் உள்ளன. அதில் ஒரு கோயில் அருகே ஏற்கெனவே மின் கம்பம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 26

அதில் தெரு மின் விளக்கும் பொருத்தப்பட்டுள்ளது. மற்றொரு கோயில் தனி நபருக்குச் சொந்தமானது ஆகும். அக்கோயில் முன்பு மின் கம்பம் உள்ளது. அதில் தெரு மின் விளக்கு இல்லை. தெரு மின் விளக்கு கோரி உரிய விண்ணப்பம் இதுவரை பெறப்படவில்லை. தெரு மின் விளக்கு கோரி உரிய விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், வாரிய விதிமுறைகளுக்கு உட்பட்டுத் தெரு மின் விளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14—**

### தெரு விளக்கு வசதி

**வினா எண் 9954—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், கஞ்சா நகரம் ஊராட்சி, 2-வது வார்டு வெள்ளாளர் தெருவிலிருந்து பிரதான சாலை வரை மின்சார வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், கஞ்சா நகரம் ஊராட்சி, 2-வது வார்டு வெள்ளாளர் தெருவிலிருந்து பிரதான சாலை வரை புதியதாக 3 கம்பங்கள் தெரு விளக்குடன் அமைக்க மதிப்பீடு அனுமதிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்த பஞ்சாயத்துத் தலைவர், கஞ்சா நகரம் அவர்களுக்கு அறிவிப்புக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. பணம் செலுத்தியவுடன் தெரு விளக்கு அமைத்துத் தரப்படும்.

**15—**

### மின் வசதி

**வினா எண் 14108—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 26]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோயில் ஒன்றியம், ஆறுபாதியிலிருந்து மேலையூர் ஊராட்சி எல்லை வரை மின் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியத்திற்குட்பட்ட ஆறுபாதி மற்றும் மேலையூர் ஊராட்சிகளுக்கு ஏற்கெனவே மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது.

ஆறுபாதி கிராமத்தில் ஒரு தெரு விளக்கு மின் இணைப்பு உள்ளது. இதில் 28 தெரு விளக்குகள் உள்ளன. மேலையூர் கிராமத்திலும் ஒரு தெரு விளக்கு மின் இணைப்பு உள்ளது. இதில் இரண்டு தெரு விளக்குகள் உள்ளன.

ஆறுபாதி மற்றும் மேலையூர் ஊராட்சித் தலைவர் அவர்களிடமிருந்து தெரு விளக்கு அமைப்பதற்கான விண்ணப்பங்கள் பெறப்படின், மின் இணைப்புக்குண்டான மதிப்பீட்டுத் தொகையை அந்தந்த ஊராட்சிகள் மூலம் பெறப்பட்டபின், கூடுதலாகத் தெரு விளக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

**16—**

### மின் தடங்கல் சரி செய்தல்

**வினா எண் 15230—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தொடர்ந்து மின் வெட்டு ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறைக்கு ஐயர்பாடி துணை மின் நிலையத்திலிருந்து உயர் மின்னழுத்த மின்னூட்டிகள் வாயிலாக மின்

விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இம்மின்னூட்டிகள் அடர்ந்த மரங்களடங்கிய மலைப் பகுதிகள் வழியாகச் செல்கின்றன. எனவே, கடந்த மழைக் காலங்களில் மழை மற்றும் காற்றுபோன்ற இயற்கைக் காரணங்களால் மின் தடங்கல் ஏற்பட்டது. இம்மின் தடங்கல் உடனுக்குடன் சரி செய்யப்பட்டு வருகின்றது. மலைப் பகுதிகளில் மின் தடங்கல்களைச் சரி செய்யச் சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. மின் தடங்கல்கள் ஏற்படாவண்ணம் இருக்கும்பொருட்டும், மின் தடங்கல்களை விரைந்து சரி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**17—**

## இலவச மின்சாரம்

**வினா எண் 15285—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாநகர் 57-வது டிவிசன், குமாரசாமி ஏரியில் உள்ள குடிசைப் பகுதிக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாநகர் 57-வது டிவிசன் குமாரசாமி ஏரியில் உள்ள குடிசைகள், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளன. நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி மாநகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்க இயலாது. எனவே, மேற்கண்ட குடிசைகளுக்கும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி இலவச மின்சாரம் வழங்க இயலாது.

**18—**

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 916—திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, பள்ளிப்பட்டு ஊராட்சியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ் பள்ளிப்பட்டு ஊராட்சிப் பகுதியில் தற்போது 14 கைப் பம்புகள், 6 பவர் பம்புகள், 6 மினி பவர் பம்புகள், ஆக மொத்தம் 26 நீர்நிலை ஆதாரங்கள் உள்ளன. இவ்வூராட்சியின் மொத்த மக்கள் தொகை 2,313 ஆகும்.

இருப்பினும், கீழ் பள்ளிப்பட்டு ஊராட்சியில் உள்ள குக்கிராமம் ஆகிய வடக்கு கொட்டாமேடு பகுதியில் உள்ள ஊத்துக்கோட்டை அம்மன் தெருவில் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் உடன் சிறு மின் விசைப் பம்பு அமைக்கும் பணி ரூ.90,000/- மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் இருந்து பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**19—**

## தொகுப்பு வீடு

**வினா எண் 917—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட தாராபுரம் வட்டம், சங்கராண்டாம்பாளையம் கிராமம், வடுகபாளையத்தில் வசிக்கும் மக்களுக்குத் தொகுப்பு வீடு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதிக்குட்பட்ட குண்டடம் ஊராட்சி ஒன்றியம், சங்கராண்டாம்பாளையம் கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 6 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், வடுகபாளையம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு 2 தொகுப்பு வீடுகள் ஒதுக்கப்பட்டு, தற்போது பணி நடைபெற்று வருகிறது.

**20—**

## கழிப்பிட வசதி

**வினா எண் 1932—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, போடிப்பட்டி பஞ்சாயத்து அலுவலகம் உள்ள பகுதிக்கு மேல்புறமுள்ள வீதிகளில் கழிப்பிட வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, போடிப்பட்டி பஞ்சாயத்து அலுவலகம் மேல்புறமுள்ள வீதிகளில் கழிப்பிட வசதி ஏற்படுத்தித் தரப் போதிய இட வசதி இல்லை.

**21—**

## நிழற்குடை

**வினா எண் 2666—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 26]

(அ) வால்பாறை தொகுதி, வேடசந்தூரில் பேருந்து நிற்குமிடத்தில் நிழற்குடை ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வேடசந்தூரில் பேருந்து நிற்குமிடத்தில் நிழற்குடை ஒன்றை அமைக்க நெடுஞ்சாலைத் துறை அனுமதியும், சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடும் கிடைக்கும் பட்சத்தில் நிழற்குடை அமைக்க ஆவன செய்யப்படும்.

**22—**

## சுகாதார வளாகம்

**வினா எண் 3494—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், சோமந்துறை ஊராட்சிக்கு ஆண்கள் மற்றும் பெண்கள் சுகாதார வளாகம் இரண்டு கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சியில் ஏற்கெனவே பெண்களுக்கு மூன்று சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆண்களுக்கான சுகாதார வளாகம் அமைக்க நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2007 ஏப்ரல் 26

**23—**

**சுகாதார வளாகம்**

**வினா எண் 3913—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாம்பட்டி ஊராட்சி, பாரமடையூர் கிராமத்தில் சுகாதார வளாகம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கம்பலாம்பட்டி ஊராட்சி, பாரமடையூர் கிராமத்தில் சுகாதார வளாகம் கட்ட அரசுப் புறம்போக்கு நிலம் ஏதுமில்லை.

**24—**

**கழிவு நீர்க் கால்வாய்**

**வினா எண் 4691—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்புதூர் முதல் நிலை ஊராட்சி கணவாய்புதூர் அருந்ததியர் காலனி முதல் சின்னத் தம்பி கடை வரை கே.என். புதூர் அருந்ததியர் காலனி—கோதண்டன் வீடு வரை, இராமமூர்த்தி நகர், மாதையன் கடை—பழனி வீடு வரை கழிவு நீர்க் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்புதூர் அருந்ததியர் காலனி முதல் சின்னத் தம்பி கடை வரை மற்றும் இராமமூர்த்தி நகர், மாதையன் கடை முதல் பழனி கடை வரை கழிவு நீர் வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. கே.என். புதூர் அருந்ததியர் காலனி—கோதண்டன் வீடு வரை கழிவு நீர் வாய்க்கால் அமைக்க நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு இல்லாததால், வரும் நிதி ஆண்டில் ஒதுக்கீடு பெற்றுப் பணி செய்து முடிக்கப்படும்.

**25—**

**கழிப்பிட வசதி**

**வினா எண் 4740—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, புங்கமுத்தூர் கிராமத்தில் போடிப்பட்டி ஊராட்சி அலுவலகம் முன்புறம், மேற்கு வீதி தின்னப்பட்டி ஊராட்சி, புங்கமுத்தூர் ஊராட்சி, காட்டூர் கிராமம், என்.ஜி. புதூர் ஆகிய இடங்களில் ஆண்கள், பெண்கள் மற்றும் பொதுக் கழிப்பிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புங்கமுத்தூர் கிராமத்தில் போடிப்பட்டி ஊராட்சி அலுவலகம் முன்புறம், மேற்கு வீதி தின்னப்பட்டி ஊராட்சி, புங்கமுத்தூர் ஊராட்சி, காட்டூர் கிராமம், என்.ஜி. புதூர் ஆகிய இடங்களில் ஆண்கள், பெண்கள் மற்றும் பொதுக் கழிப்பிடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில் சேர்த்துக் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

[2007 ஏப்ரல் 26

**26—**

## குடிநீர்த் தேக்கத் தொட்டி

**வினா எண் 5120—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, சிக்கம்பட்டி ஊராட்சி, சின்னகாடம்பட்டி மேற்கு வளர்பகுதி ஊ. மாரமங்கலம் ஊராட்சி, கல்ரெட்டிப்பட்டி கூலியூர் காட்டுவளவு பகுதி ஆகிய இடங்களில் குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, சிக்கம்பட்டி ஊராட்சி, சின்னகாடம்பட்டி மேற்கு வளர்பகுதி, ஊ. மாரமங்கலம் ஊராட்சி, கல்ரெட்டிப்பட்டி கூலியூர் காட்டுவளவு பகுதி ஆகிய இடங்களில் குடிநீர்த் தேக்கத் தொட்டி அத்தியாவசியமாகிறது. இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க ரூ.3.00 இலட்சம் மதிப்பீடாகும். ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதி இல்லை. ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதி கிடைக்கப்பெற்றதும், முன்னுரிமை அடிப்படையில் பணிகள் செய்யப்படும்.

**27—**

## கழிப்பிட வசதி

**வினா எண் 5881—திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஆத்தூர் தொகுதிக்கு உட்பட்ட கிராம, நகரங்களில் கழிப்பிட வசதி இல்லாத இடங்களுக்குக் கழிப்பிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் மகளிர் சுகாதார வளாகங்கள் மூலம் கழிப்பிட வசதி உள்ளது. குக்கிராமங்களில் கழிப்பிட வசதி தேவைப்படும் இடங்களுக்கேற்ப முழு சுகாதாரத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**28—**

## தார்ச் சாலை

**வினா எண் 5947—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், எறவார்பட்டி பஞ்சாயத்து, மணல்பட்டிக்குப் பிரதான சாலையிலிருந்து மணல்பட்டி வரை முதலைக்குளம் பஞ்சாயத்து, கீழப்பட்டி மெட்டல் சாலை, அம்மன் கோயில்பட்டி சாலை, M. ஒத்தவீட்டுப்பட்டி சாவடி முதல் ஒச்சாண்டாம்மன் கோயில் வரை, கல்லூத்துப் பஞ்சாயத்து, முத்திவீரன்பட்டி சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலையாக அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், எறவார்பட்டி பஞ்சாயத்து, மணல்பட்டிக்குப் பிரதான சாலையிலிருந்து மணல்பட்டி வரை முதலைக்குளம் பஞ்சாயத்து, கீழப்பட்டி மெட்டல் சாலை, அம்மன் கோயில்பட்டி சாலை மற்றும் M. ஒத்தவீட்டுப்பட்டி சாவடி முதல் ஒச்சாண்டாம்மன் கோயில் வரை, கல்லூத்துப் பஞ்சாயத்து,

[2007 ஏப்ரல் 26

முத்திவீரன்பட்டி சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலைகளாக அமைத்துக் கொடுக்க பாரத் நிர்மாண் திட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**29—**

## சாலை வசதி

**வினா எண் 6332—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, அய்யம்பட்டியிலிருந்து நரியம்பட்டிக்கு, சடச்சிப்பட்டி முதல் அ. புதுப்பட்டி வரை, பிரவியம்பட்டி முதல் அகிலாண்டபுரம் வரை, முதலைக்குளம் கண்மாய்ச் சாலை முதல் எழுவம்பட்டி வரை, ஜோ. மீனாட்சிபுரம் முதல் சம்மலப்பட்டி வரை, திம்மநத்தம் மேற்கே, துரைசாமிபுரம் வடக்கே, மாதரை முதல் முத்துப்பாடிபட்டி வழியாக சடையாண்டிபட்டி செல்ல இணைப்புச் சாலைகள் அமைத்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, அய்யம்பட்டியிலிருந்து நரியம்பட்டிக்கு, சடச்சிப்பட்டி முதல் அ. புதுப்பட்டி வரை, பிரவியம்பட்டி முதல் அகிலாண்டபுரம் வரை, முதலைக்குளம் கண்மாய்ச் சாலை முதல் எழுவம்பட்டி வரை, ஜோ. மீனாட்சிபுரம் முதல் சம்மலப்பட்டி வரை, திம்மநத்தம் மேற்கே, துரைசாமிபுரம் வடக்கே, மாதரை முதல் முத்துப்பாடிபட்டி வழியாக சடையாண்டிபட்டி செல்ல இணைப்புச் சாலைகள் சிறு சேமிப்பு ஊக்க நிதி, 2003-2004-ன்கீழ் செய்ய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது.

**30—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 6722—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 26]

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கீலாத்திகுளம் கிராமத்தில், தாமிரபரணி தண்ணீர் ஏற்றிட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், கும்பிகுளம் ஊராட்சி, கீலாத்திகுளம் குடியிருப்பில் அதன் மக்கள் தொகைக்கேற்ப பயனில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்று நீரும், உள்ளூர் ஆழ்துளைக் கிணற்று நீரும் விநியோகம் செய்யப்படுகிறது. ஆதலால், இக்குடியிருப்பில் ஆற்று நீருக்கெனத் தனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டச் சாத்தியக்கூறுகள் இல்லை.

**31—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 6724—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் ஊராட்சி, மூலக்காடு கிராமத்திற்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் ஊராட்சி, மூலக்காடு கிராமத்தின்

மக்கட்தொகைக்கேற்ப 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின் விசைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் பிப்ரவரி 2007-க்குள் முடிக்கப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**32—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 6726—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சமூகரெங்கபுரம் கிராமம் கஸ்பாவில் 60,000 லிட்டர் கொள்ளளவுகொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், சமூகரெங்கபுரம் ஊராட்சி, சமூகரெங்கபுரம் கஸ்பா என்பது சமூகரெங்கபுரம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பில் 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பயனில் உள்ளன. ஆதலால், கூடுதலாக மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**33—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 6730—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு கிராமத்தில், தாமிரபரணித் தண்ணீரை ஏற்றிடத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், அச்சம்பாடு ஊராட்சி, அச்சம்பாடு குடியிருப்பில் அதன் மக்கள் தொகைக்கேற்ப பயனில் உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் ஆழ்குழாய்க் கிணற்று நீரும் பணகுடி-வடக்கு வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்று நீரும் வழங்கப்பட்டு வருகிறது. ஆதலால், இக்குடியிருப்பில் தாமிரபரணி ஆற்று நீருக்கெனத் தனியாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**34—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 6734—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உதயத்தூர் ஊராட்சி, வட்டவிளை கிராமத்திற்குப் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், உதயத்தூர் ஊராட்சி, வட்டவிளை குடியிருப்பில் அதன்

தற்போதைய மக்கள் தொகைக்கேற்ப (105) 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பயனில் உள்ளது. இதன் மூலம் ஆழ்குழாய்க் கிணற்று நீரும், நாங்குநேரி - திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்று நீரும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆதலால், இக்குடியிருப்பில் புதிதாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**35—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 6736—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆனைகுளம் ஊராட்சி, ஆனைகுளம் யாதவர் காலனி மற்றும் ஆதி திராவிடர் காலனியில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும். (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், ஆனைகுளம் ஊராட்சி, யாதவர் காலனி, ஆனைகுளம் குடியிருப்பின் ஒரு பகுதியாக உள்ளது. இக்குடியிருப்பில் அதன் மக்கள் தொகைக்கேற்ப பயனில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் பணகுடி-வடக்கு வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆற்று நீரும், உள்ளூர் நீராதாரமாகிய திறந்தவெளிக் கிணற்று நீரும் வழங்கப்படுவதால், இக்குடியிருப்பில் கூடுதலாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீனையில் இல்லை.

ஆனைகுளம் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் காலனி குடியிருப்பிற்கு தற்போது ஆனைகுளம் குடிநீர்த் திட்டத்திலிருந்து குழாய்





நீட்டிப்பு முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனினும், வரும் நிதியாண்டில் இக்குடியிருப்பில் அதன் மக்கள் தொகைக்கு ஏற்ப மேல்நிலைத் தொட்டி அமைப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**36—**

## சாலை வசதி

**வினா எண் 7088—திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, மலையடிப்பட்டி கிராமம், பொன்னமராவதிக்கு காஞ்சாத்து மலை வழியாகச் சாலை வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருமயம் தொகுதி, மலையடிப்பட்டி கிராமம், பொன்னமராவதிக்குச் சாலை அமைக்கக் கோரும் காஞ்சாத்து மலைப் பகுதி வனத் துறை சார்ந்த பகுதியாதலால் வனத் துறையின் அனுமதி பெற்று நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**37—**

## சாலை வசதி

**வினா எண் 8126—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர், காந்தி நகர் காலனியில் கள்ளங்குப்பம், கானங்குப்பம் கிராமம், சிறுவைப்பாளையம் கிராமத்தில் ஊரிலிருந்து பேருந்து நிறுத்துமிடம் வரை, மணம்தவிழ்ந்தபுத்தூர் கிராமம் ஆகிய இடங்களில் புதியதாகச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் காந்தி நகர் காலனியில் கள்ளங்குப்பம் பகுதியில், சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தில் 2004-05 ஆம் ஆண்டு சிமெண்ட் சாலை 135 மீட்டர் ரூ. 1.70 இலட்சம் மதிப்பீட்டில் போடப்பட்டுள்ளது. கானங்குப்பம் கிராமத்தில் 2004-05 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய்.-2 திட்டத்தில் சிமெண்ட் சாலை 150 மீட்டர் போடப்பட்டுள்ளது. எஞ்சிய மெயின் சாலை தார்ச் சாலையாகும். சிறுவைப்பாளையம் கிராமத்தில் எஸ்.ஜி.ஆர்.ஒய். மாவட்ட ஊராட்சித் திட்டத்தில் 2004-05 ஆம் ஆண்டு சிமெண்ட் சாலை 230 மீட்டர் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் போடப்பட்டுள்ளது. மணம்தவிழ்ந்தபுத்தூர் கிராமத்தில் மெயின் சாலை தார்ச் சாலையாக குறுக்குத் தெருக்கள் மொத்த நீளம் 420 மீட்டரும், சிமெண்ட் சாலை எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்மூலம் ரூ. 2.50 இலட்சம் 2004-05-ல் நமது கிராமம் திட்டத்தின்மூலம் ரூ. 2.00 இலட்சத்திலும் போடப்பட்டுள்ளது.

**38—**

## சிமெண்ட் சாலை

**வினா எண் 8131—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ஆராய்ச்சிக்குப்பம் கிராமத்தில் உள்ள மதுரைவீரன் கோயில், நன்னிக்குப்பம் கிராமம், வடக்குத் தெரு, மருங்கூர் காலனி, சாட்டமாம்பட்டு கிராமம் மேற்குத் தெரு, மேலிருப்பு கிராம தெற்குத் தெரு, மேல்மாம்பட்டு கிராம வடக்குத் தெரு, வீராபெருமா நல்லூர் கிராமம் ஆகிய இடங்களில் சிமெண்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, ஆராய்ச்சி குப்பம் கிராமத்தில் உள்ள மதுரைவீரன் கோயில் சாலை 2004-05 ஆம் ஆண்டு ரூ.1.00 இலட்சம் செலவில் தேசிய ஊரக வேலைக்கு உணவுத் திட்டத்தின் மூலம் ஜல்லி சாலை அமைக்கப்பட்டுவிட்டது. நன்னிக்குப்பம் கிராமம், வடக்குத் தெரு எஸ்.ஜி.ஆர்.ஒய்-1 திட்டம் 2004-05 ஆம் ஆண்டு 110 மீட்டர் ரூ.1.50 இலட்சம் செலவில் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது. மருங்கூர் காலனியில் 2004-05 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய்-2 திட்டத்தில் 220 மீட்டர் நீளம் ரூ 3.00 இலட்சம் செலவில் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது. சாத்தமாம்பட்டு கிராமம் மேற்குத் தெரு, 2005-06 ஆம் ஆண்டு மாநில நிதிக் குழுத் திட்டத்தின்கீழ் 140 மீட்டர் ரூ. 2.00 இலட்சம் செலவில் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது. மேலிருப்பு கிராம தெற்குத் தெரு 2004-05 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பொது நிதி மூலம் 210 மீ. ரூ. 2.50 இலட்சம் செலவில் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது. மேல்மாம்பட்டு கிராமம் வடக்குத் தெரு 2004-05 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். 2 திட்டத்தில் 140 மீட்டர் ரூ. 2.00 இலட்சம் செலவில் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது. வீராபெருமா நல்லூர் கிராமத்தில் 2004-05 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். 2 திட்டத்தில் ரூ. 2.00 லட்சம் மதிப்பீட்டில் 150 மீட்டர் நீளம் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது.

**39—**

## சிமெண்ட் சாலை

**வினா எண் 8138—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புதுப்பாளையம் கிராமம், கிழக்குத் தெருவில் நடுப் பகுதி, பள்ளிக்குச் செல்லும் தெரு, வடக்குப் பகுதி, விசூர் ஊராட்சி, ராயர்பாளையம் கிராமம், [illegible] கிராமம் முனீஸ்வரன் கோயில் ஆகிய இடங்களில் [illegible] அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

227661

[2007 ஏப்ரல் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, புதுப்பாளையம் கிராமம், கிழக்குப் பகுதி நடுத் தெரு மற்றும் பள்ளிக்குச் செல்லும் தெரு, வடக்குப் பகுதி ஆகிய இரண்டு தெருக்களும் 230 மீட்டர் சிமெண்ட் சாலை அமைக்க இந்த நிதியாண்டு அரசின் திட்டத்தில் வழிவகை இல்லை. ஆனால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இந்த சாலை அமைக்க ரூ.3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு கிடைக்கும்பட்சத்தில் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். விசூர் ஊராட்சியில் 2005-06 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதி மூலம் 14.5 மீட்டர் ரூ. 2.00 இலட்சம் செலவில் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது. ராயர்பாளையம் கிராமத்தில் 140 மீட்டர் நீளம் சிமெண்ட் சாலை ரூ. 2.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. நன்னிக்குப்பம் முனீஸ்வரன் கோயில் சிமெண்ட் சாலை 2005-06 ஆம் ஆண்டு 70 மீட்டர் நீளம் ரூ. 1.00 இலட்சம் செலவில் போடப்பட்டுள்ளது.

**40—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 8146—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நன்னிக்குப்பம் கிராமத்தில் இரண்டு புறமும் தடுப்புச் சுவர் கட்டி சிமெண்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, நன்னிக்குப்பம் கிராமத்தில் இரு புறமும் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி 2006-07 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பொது நிதிமூலம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 26]

**41—**

## சிமெண்ட் சாலை

**வினா எண் 8147—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை கிராமம் சிறுதொண்டமாதேவி கிராமம்-கொள்ளுக்காரன் குட்டை சாலை, சிறுதொண்டமாதேவி-பாவைக்குளம் செல்லும் சாலை நன்னிக்குப்பம் கிராமம் மேற்கு, தென்புறம் சாலை, புதுப்பாளையம் மாளிகம்பட்டு கிராம நடுநிலைப் பள்ளிச் சாலை, கிராமச் சாலைகள் ஆகிய சாலைகளை செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை கிராமத்தில் சிமெண்ட் சாலை 100 மீட்டர் 2005-2006 ஆம் ஆண்டு மாநில நிதிக் குழுத் திட்டத்தில் ரூ.1.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. சிறுதொண்டமாதேவி, கொள்ளுக்காரன்குட்டை முதல் சிலம்பிநாதன்பேட்டை குளக்கரை சாலை ஆகிய 2 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 2006-07 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் எடுக்கப்பட்டு உள்ளது. நன்னிக்குப்பம் கிராமத்தில் 2005-06 ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து ரூ.1.50 இலட்சம் செலவில் 110 மீட்டர் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. தென் புதுப்பாளையம், மாளிகம்பட்டு தெருக்கள் 140 மீட்டர் நீளம் சிமெண்ட் சாலை 2004-05 ஆம் ஆண்டு பொது நிதிமூலம் அமைக்கப்பட்டுள்ளன.

**42—**

## அடிப்படை வசதி

**வினா எண் 9414—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 26

திருப்பத்தூர் தொகுதி, எரிவட்டம் மக்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர் ஒன்றியம், பூங்குளம் ஊராட்சியில் உள்ள எரிவட்டம் மக்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் குடிநீர் வசதி செய்து தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**43—**

**சிமெண்ட் சாலை**

**வினா எண் 9696—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியிலுள்ள கிராமங்களிலுள்ள அனைத்துத் தெருக்களுக்கும் சிமெண்ட் சாலை அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியிலுள்ள கிராமங்களில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்ட கிராமங்கள் தவிர மீதமுள்ள அனைத்து கிராமங்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் இத்தொகுதிக்கு ஒதுக்கப்படும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீட்டைப் பொறுத்து சிமெண்ட் சாலை அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2007 ஏப்ரல் 26]

**44—**

**மயான வசதி**

**வினா எண் 10255—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதியிலுள்ள ஊராட்சிகளுக்கு மயான வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதியில் உள்ள ஊராட்சிகளுக்கு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மயான வசதி செய்து தரப்படும்.

**45—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 10642— டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் ஒன்றியம், அணியாபுரம் ஊராட்சி அணியாபுரம் புதூரில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மோகனூர் ஊராட்சி ஒன்றியம், அணியாபுரம் ஊராட்சி, அணியாபுரம் புதூரில் சமுதாய நலக் கூடம் அமைக்க கபிலர்மலை சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்

[2007 ஏப்ரல் 26

ரூ.2.50 இலட்சத்தில் பணிகள் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அணியாபுரம் புதூரில் சமுதாய நலக் கூடம் அமைக்க இட வசதி இல்லாததால் சமுதாய நலக் கூடம் அமைக்க இயலவில்லை.

**46—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 11064—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கபிலர்மலை ஒன்றியம், ஆரியூர் ஊராட்சி, கொளத்தூர், வடகரையாத்தூர் ஊராட்சி, பள்ளப்பாளையம் கிராமம் ஆகிய பகுதிகளில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரியூர் ஊராட்சியில் 2005-2006 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் சமுதாயக் கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வடகரையாத்தூர் ஊராட்சி, பள்ளப்பாளையத்தில் அடுத்து வரும் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடுபெற்று சமுதாயக் கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**47—**

## சாலை வசதி

**வினா எண் 12030—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, பச்சமலையான் கோட்டை ஊராட்சியிலுள்ள திருமயன்கவுண்டன்பட்டியிலிருந்து உத்தயகவுண்டன்பட்டி வரை புதிய சாலைகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி, பச்சமலையான் கோட்டை ஊராட்சியிலுள்ள திருமயன்கவுண்டன்பட்டியிலிருந்து உத்தயகவுண்டன்பட்டி வரை புதிய சாலைகள் பாரத் நிர்மாண் திட்டத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப் பரிசீலனையில் உள்ளது.

**48—**

## கல்யாண மண்டபம்

**வினா எண் 12046—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நிலக்கோட்டை தொகுதி, சிலுக்குவார்ப்பட்டி ஊராட்சியில் உள்ள மன்னவராதி மற்றும் கரியாம்பட்டி கிராமங்களுக்குக் கல்யாண மண்டபம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க.ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி, சிலுக்குவார்பட்டி ஊராட்சியில் உள்ள மன்னவராதி மற்றும் கரியாம்பட்டி கிராமங்களுக்குக் கல்யாண மண்டபம் கட்டித் தர சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் பரிந்துரை செய்யும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**49—**

## நிழற்கூடம்

**வினா எண் 12265—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, விளத்தூர் ஆதி திராவிடர் காலனிக்குப் பயணிகள் நிழற்கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், மானாமதுரை தொகுதி, விளத்தூர் ஆதி திராவிடர் காலனிக்குப் பயணிகள் நிழற்கூடம் கட்டித் தரப்படும்.

**50—**

## திருமண மண்டபம்

**வினா எண் 12503—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒன்றிய ஊராட்சிகளில் திருமண மண்டபம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், ஒன்றிய ஊராட்சிகளில் திருமண மண்டபம் கட்டித் தரப்படும்.

**51—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 12505—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கல்லூரணி, கீழச்சொரிக்குளம், மணலூர், ஈச்சனேரி, புதுகுசவன்குண்டு, பிரான்குளம், வீரனேந்தல், மேலவெள்ளூர், வேலாங்குளம் ஆகிய கிராமங்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கல்லூரணி, கீழச்சொரிக்குளம், மணலூர், ஈச்சனேரி, புதுகுசவன்குண்டு, பிரான்குளம், வீரனேந்தல், மேலவெள்ளூர், வேலாங்குளம் ஆகிய கிராமங்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தரப்படும்.

**52—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 12518—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், ரெட்டாகுளம் மற்றும் குண்டுக்குளம் ஆகிய கிராமங்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், ரெட்டாகுளம் மற்றும் குண்டுக்குளம் ஆகிய கிராமங்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தரப்படும்.

53—

## நிழற்குடை

**வினா எண் 12546—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பிரான்குளம் மற்றும் எதிர்மறிச்சான் கிராமப் பிரிவு ஆகிய இடங்களில் பயணிகள் நிழற்குடை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பிரான்குளம் மற்றும் எதிர்மறிச்சான் கிராமப் பிரிவு ஆகிய இடங்களில் பயணிகள் நிழற்குடை கட்டித் தரப்படும்.

54—

## நிழற்குடை

**வினா எண் 12622—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்திற்கு உட்பட்ட பரஞ்சேர் வழி ஊராட்சி உள்ள வாலிபாளையம் மற்றும் நான்கு வழிப் பாதைச் சந்திப்பு மற்றும் எல்லாப்பாளையம் புதூர் ஊராட்சி, கவுண்டப்பாளையம் காலனி பேருந்து நிலையத்தில் நிழற்குடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயத்திற்கு உட்பட்ட பரஞ்சேர் வழி ஊராட்சி உள்ள வாலிபாளையம் மற்றும் நான்கு வழிப் பாதைச் சந்திப்பு மற்றும் எல்லாப்பாளையம் புதூர் ஊராட்சி, கவுண்டப்பாளையம் காலனி பேருந்து நிலையத்தில் நிழற்குடை அமைக்க சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெறும்பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

55—

## சாலை வசதி

**வினா எண் 12734—திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில், வடகாடு ஊராட்சியின் பெத்தேல்புரத்திலிருந்து சிறுவாட்டுக் கோம்பைக்குச் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, வடகாடு ஊராட்சியின் பெத்தேல்புரத்திலிருந்து சிறுவாட்டுக் கோம்பைக்குச் செல்லும் சாலையானது, பாச்சலூர் செல்லும் சாலையில் 14/4-ல் கிழக்குப் புறமாகப் பிரிந்து செல்கிறது. பெத்தேல்புரத்திலிருந்து சிறுவாட்டுக் கோம்பை வரை இச்சாலையின் மொத்த நீளம் 7 கி.மீ. ஆகும். இப்பாதை வண்டிப் பாதையாகவும், குண்டும், குழியுமாக மக்கள் செல்ல இயலாததாகவும் உள்ளது. இப்பாதை வழியே ஆறு செல்வதால் பாலம் (30 மீட்டர் நீளம்) அமைக்கப்பட வேண்டும். இச்சாலையில் நான்கு

இடங்களில் கொண்டை ஊசி வளைவு ஏற்படுத்த வேண்டும். மேற்கண்ட பணிக்கு ரூ.1 கோடி கீழ்க்கண்டவாறு நிதி தேவைப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | சாலை அமைத்தல் கி.மீ. 0/0.7/0 | ரூ.70.00 இலட்சம் |
| 2. | பாலம் அமைத்தல் 2/6-ல் | ரூ.20.00 இலட்சம் |
| 3. | கொண்டை ஊசி வளைவு மற்றும் தடுப்புச் சுவர் அமைக்க | ரூ.10.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.100.00 இலட்சம்** |

ஊராட்சி ஒன்றியத்தில் இப்பணியைச் செய்யப் போதுமான நிதி வசதி இல்லையாதலால், அரசின் சிறப்புத் திட்டங்கள்மூலமே செய்ய இயலும்.

**56—**

## பாலம் அமைத்தல்

**வினா எண் 12792—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, வைரமங்களம் கிராமம், கவுண்டன்புதூர் சந்தை, வைரமங்களம் சுமைதாங்கி கல் அருகில், ஜம்பை கிராமம், சின்னவடமலைப்பாளையம் சாலை ஆகிய இடங்களில் சிறிய பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானி ஊராட்சி ஒன்றியம், வைரமங்களம் ஊராட்சி, கவுண்டன்புதூர் சந்தை, வைரமங்களம் சுமைதாங்கி கல் அருகே 2 சிறு பாலங்கள் கட்டத் தலா ரூ.50,000/- வீதம் மொத்தம் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு வேண்டியுள்ளது. தற்போது பவானி ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லை. எனவே, வரும் நிதியாண்டில் இப்பணியினை எடுத்துச் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



பவானி தொகுதி, ஜம்பை பேரூராட்சிக்குட்பட்ட சின்னவடமலைப்பாளையம் குடியிருப்புப் பகுதியை ஒட்டிச் செல்லும் சாலை, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானதாகும். இக்குடியிருப்புப் பகுதியில் உள்ள விநாயகர் கோயில் அருகில் தார் ரோட்டில் கழிவு நீர் மற்றும் மழை நீர் செல்வதற்கு ஒரு கான்கிரீட் பாலம் அமைத்துத் தரக் கோரி பேரூராட்சி மன்றத் தீர்மான எண் 96, நாள் 30-11-2006-ல் பேரூராட்சி மன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இப்பணியினைச் செய்து கொடுக்கக் கோரி நெடுஞ்சாலைத் துறைக்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**57—**

## சிமெண்ட் சாலை

**வினா எண் 12896—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, அம்மணம்பாக்கம், தாழம்பேடு, சோகண்டி, பி.வி. களத்தூர், ஈச்சன்கரணை, தர்மாபுரம், அழகுசமுத்திரம், மேலேரிப்பாக்கம், நடுவக்கரை, மோசிவாக்கம், பொன்பதிர்கூடம், ஆலப்பாக்கம், மேலையூர் ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, அம்மணம்பாக்கம், தாழம்பேடு, சோகண்டி, பி.வி. களத்தூர் (பொன்விளைந்தகளத்தூர்) ஈச்சங்கரணை, தர்மாபுரம், அழகுசமுத்திரம், மேலேரிப்பாக்கம், நடுவக்கரை, மோசிவாக்கம், பொன்பதிர்கூடம் ஆகிய கிராமங்களில் 2004-2005 மற்றும் 2005-2006 ஆம் ஆண்டுகளில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது 2006-2007ஆம் ஆண்டு செயல்பாட்டில் உள்ள அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் அழகுசமுத்திரம், மேலேரிப்பாக்கம், மோசிவாக்கம் மற்றும் பொன்பதிர்கூடம் ஆகிய ஊராட்சிகளில் சிமெண்ட் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2007 ஏப்ரல் 26

மேலையூர் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் ஆலப்பாக்கம் ஊராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிலும் சிமெண்ட் சாலை அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**58—**

## தார்ச் சாலை

**வினா எண் 13053—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, காடையாம்பட்டி கிராமத்தில், சேர்வராயன்பாளையம் கிழக்கு, மேற்கு, இட்டேரி சாலை மற்றும் சலங்கைபாளையம் கிராமம், 7-வது வார்டு, ஈஞ்சரம்மேட்டிலுள்ள சாலைகளை தார்ச் சாலைகளாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானி ஊராட்சி ஒன்றியம், காடையாம்பட்டி கிராமம், சேர்வராயன்பாளையம் கிழக்கு, மேற்கு இட்டேரி சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்ற நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையிலும், நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் தேர்வு செய்து தார்ச் சாலை அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பவானி தொகுதி, சலங்கைபாளையம் பேரூராட்சிக்குட்பட்ட 7-வது வார்டு ஈஞ்சரம்மேட்டில் உள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்ற ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 26]

**59—**

## வீடுகள் பழுது நீக்கம் செய்தல்

**வினா எண் 13072—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், ஆனங்கூர் ஊராட்சிக்குட்பட்ட ஆதி திராவிடர் காலனி பழுதடைந்த வீடுகளைப் புதுப்பிக்கவும் மற்றும் பெருங்குறிச்சி ஊராட்சி, குப்ரிக்காபாளையம் கிராமத்திலுள்ள பழுதடைந்துள்ள காலனி வீடுகளைப் பராமரிக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், ஆனங்கூர் ஊராட்சிக்குட்பட்ட ஆதி திராவிடர் காலனி, பழுதடைந்த வீடுகளையும், பெருங்குறிச்சி ஊராட்சி, குப்ரிக்காபாளையம் கிராமத்திலுள்ள பழுதடைந்துள்ள காலனி வீடுகளையும் பழுது நீக்கம் செய்யச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளதால், சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பரிந்துரை பெறப்பட்டு, பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**60—**

## சேமிப்புக் கிடங்கு

**வினா எண் 8030—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், அரகண்டநல்லூர் மற்றும் கண்டாச்சிபுரத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விவசாயிகளுக்கும், விளைபொருள்களுக்கும் சேமிப்புக் கிடங்கு ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2007 ஏப்ரல் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியத்தில் அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள கிட்டங்கி அமைக்கப்பட்டுள்ளது. அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலிருந்து கண்டாச்சிபுரம் கிராமம் 11 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளதால், 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் விதிகளின்படி கண்டாச்சிபுரத்தில் தனியாகச் சேமிப்புக் கிடங்கு ஏற்படுத்த வழிவகைகள் இல்லை.

**61—**

## குளிர்பதனக் கிடங்கு

**வினா எண் 10431—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, இராயக்கோட்டையில் அதிகமான தக்காளி விளைச்சல் உள்ளதால் குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் நிறுவனங்கள் குளிர்பதனக் கிட்டங்கி அமைத்திட முன்வந்தால் மைய அரசின் நிறுவனமான தேசிய தோட்டக் கலை வாரியம்/தேசிய தோட்டக் கலைக் குழுமூலமாக 25 விழுக்காடு முதலீட்டு மானியம் பெற்றுத் தர வேளாண்மை விற்பனைத் துறையின்மூலமாக அனைத்து உதவிகளும் செய்து கொடுக்கப்படும்.



2007 ஏப்ரல் 26]

**62—**

## குளிர்பதனக் கிடங்கு

**வினா எண் 13696—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகளைப் பாதுகாக்க மேட்டுப்பாளையத்தில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தனியார் நிறுவனங்கள் குளிர்பதனக் கிட்டங்கி அமைத்திட முன்வந்தால் மைய அரசின் நிறுவனமான தேசிய தோட்டக் கலை வாரியம்/தேசிய தோட்டக் கலைக் குழுமூலமாக 25 விழுக்காடு முதலீட்டு மானியம் பெற்றுத் தர வேளாண்மை விற்பனைத் துறையின்மூலமாக அனைத்து உதவிகளும் செய்து கொடுக்கப்படும்.

**63—**

## அரசுக் கட்டடங்கள் நவீனப்படுத்துதல்

**வினா எண் 5977—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் அரசுக் கட்டடங்கள் நவீனப்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பொதுப் பணித் துறை, நீதித் துறை, கல்வித் துறை, விவசாயத் துறை, மருத்துவத் துறை, வருவாய்த் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறைபோன்ற அரசுத் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள் பொதுப் பணித் துறைப் பராமரிப்பில் உள்ளன.

[2007 ஏப்ரல் 26

அந்தந்த அரசுத் துறைத் தலைவர்களிடமிருந்து திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அரசுக் கட்டடங்களை நவீனப்படுத்தத் தேவையான முன்னேற்றப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் பணிகளின் பட்டியலுடன்கூடிய கோரிக்கை பொதுப் பணித் துறையில் பெறப்பட்டவுடன் தேவையான மதிப்பீடு தயாரித்து தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுப் பணிகள் துவங்கி முடித்துக் கொடுக்கப்படும்.

**64—**

## தங்குவதற்கு விடுதி

**வினா எண் 3440—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பரம்பிக்குளம் அணைக்கு அருகில் ஹைபாரஸ்ட் குடியிருப்புப் பகுதி மற்றும் அக்காமலை பகுதி ஆகிய பகுதிகளில் இரவு நேரங்களில் ஓட்டுநர்கள், நடத்துநர்கள் தங்க விடுதிகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் பரம்பிக்குளம் அணைக்கு அருகில் ஹைபாரஸ்ட் குடியிருப்புப் பகுதி மற்றும் அக்காமலை பகுதி ஆகிய பகுதிகளில் தலா ஒரு பேருந்து இரவுத் தங்கல் செய்கிறது. பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள் தங்குவதற்கு அப்பகுதி தேயிலைத் தொழிற்சாலைக் குடியிருப்பில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஒரு அறையை அப்பகுதி தேயிலைத் தோட்ட நிர்வாகம் இலவசமாக ஒதுக்கி உள்ளதால், அவர்கள் அங்கு தங்கி வருகின்றனர். கோரிக்கை எழும் பட்சத்தில் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் தங்குவதற்கு விடுதிகள் கட்டித் தருவது பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**65—**

## புதிய இயந்திரங்கள்

**வினா எண் 7372—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 26]

நீலகிரி மாவட்டக் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்குப் புதிய இயந்திரங்கள் வழங்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டத்தில் 15 தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 20,000-க்கு மேலான சிறு தேயிலை விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இத்தொழிற்சாலைகள்மூலம் 2005-06 ஆம் ஆண்டில் 123 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.4,289.16 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இச்சங்கங்களின் இணையமான இன்கோ-சர்வ் கடந்த ஆண்டில் ரூ.2,881.94 இலட்சத்திற்கு வியாபாரம் செய்துள்ளது.

2. தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் இயந்திரங்களை மேம்படுத்தவும், உறுப்பினர்களின் தேயிலைத் தோட்டங்களை மேம்படுத்தவும் அதன்மூலம் தேயிலைத் தூளின் தரத்தை மேம்படுத்தி, தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளுக்கு நல்ல சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில், உபாசி மற்றும் தேயிலை வாரியம் இணைந்து ரூ.8,856.65 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு திட்ட அறிக்கை தயார் செய்து, அரசுக்கு அளித்துள்ளது. அத்திட்ட அறிக்கையை மைய அரசின் ஆய்வுக்கும், தேயிலை வாரியம்மூலம் மானியம் வழங்குமாறு கேட்டும் 8-3-2007 அன்று மைய அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

3. மேற்படி திட்டத்தில் தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் இயந்திரங்களை மேம்படுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் ரூ.1,058.80 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

4. இத்திட்டம் செயல்படுத்தப்படும்பொழுது, அனைத்துத் தொழிற்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் இயந்திரங்களைப் புதுப்பிக்கவும், மேம்படுத்தவும் வாய்ப்புள்ளது.

**66—**

## பட்டா

**வினா எண் 5973—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, வாணியம்பாடி வட்டம், மரிமானி குப்பம் ஊராட்சி, ஏரிப்பள்ளம் கிராமத்தில் ஐம்பதாண்டுகளாகக் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும்மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**67—**

## பட்டா

**வினா எண் 10216—திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி மற்றும் தோட்டப்பாடியில் 20 ஆண்டுகளாக புறம்போக்கு இடங்களில் வீடு கட்டிக் குடியிருப்போருக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணை (நிலை) எண். 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும்மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.

**68—**

## பட்டா

**வினா எண் 13189—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, பொத்தேரி பகுதி மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட

[2007 ஏப்ரல் 26

தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.

**69—**

## பட்டா

**வினா எண் 13976—திரு. வீ.ஏ.டி. கலியவரதன் :** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், ஏமபேர் காலனி, அருமலை, ப. புத்தூர், அரும்புராம்பட்டு புத்தூர் புதிய காலனி, மேல்க்கொண்டூர், சத்திரம் கீழ்க்கொண்டூர், பரனூர், பரனூர் காடு வெட்டி, வசந்த கிருஷ்ணாபுரம் ஆகிய கிராமங்களில் குடியிருப்போருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும்மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 26]

**70—**

## அலுவலகக் கட்டடம்

**வினா எண் 14515—திரு. டி. ராமச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"தளித் தொகுதியில் கிராம நிர்வாக அதிகாரிகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தந்து அவர்கள் அக்கட்டடத்திலேயே தங்கிப் பணிபுரிய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரி மாவட்டம் தளி சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் 73 வருவாய் கிராமங்கள் உள்ளன. 73 கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு கிராம நிர்வாக அலுவலர்கள் அலுவலகக் கட்டடத்தில் தங்கி அலுவலகப் பணிபுரிந்து வருகிறார்கள்.

**71—**

## இலவச வீட்டுமனை

**வினா எண் 14676—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, அட்டவணைப்புதூரில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு

மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழாது.

**72—**

### பட்டா

**வினா எண் 17140—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை ரொட்டிக்கடையில் நீண்ட நாட்களாகக் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும்மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.



**73—**

### பட்டா

**வினா எண் 17197—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி கிராமத்திலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும்மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரித் திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**74—**

### சிறைச்சாலை மராமத்து

**வினா எண் 17522—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி சார்நிலை சிறைச்சாலையை விரிவுபடுத்தி மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு 72 ஆகும். ஆனால், அங்கு தற்போது 51 சிறைவாசிகள் மட்டுமே உள்ளனர். மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சிறைச்சாலைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தில் ரூ.8.40 இலட்சம் செலவில் ஒரு துயிற்கூடம் (Dormitory Block) கட்டிக் கொடுக்கப்பட்டு, ஏற்கெனவே கிளைச் சிறை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், கட்டடப் பராமரிப்பு நிதியின்கீழ், அங்கு மராமத்துப் பணிகளுக்கு ரூ.3.25 இலட்சம் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 296, உள் (சிறை-4) துறை, நாள் 23-2-2007-ல், 2006-07 ஆம் ஆண்டுக்கான சிறைகளை நவீனப்படுத்தும் செயல் திட்டத்தின்கீழ் ரூ.12.25 இலட்சம் மதிப்பீட்டில் இக்கிளைச் சிறையைச் சுற்றிப் பாதுகாப்புச் சுவர் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பொள்ளாச்சியில் உள்ள கிளைச் சிறைக்கு அவ்வப்போது தேவைப்படும் பணிகள் பொதுப் பணித் துறையினரால் செய்யப்படுகின்றன. இக்கிளைச் சிறையில் அங்கீகரிக்கப்பட்ட அடைப்பிற்கும் குறைவாகவே சிறைவாசிகள் உள்ளதால், பொள்ளாச்சியில் உள்ள கிளைச் சிறையினை மேலும் விரிவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**75—**

## நவீன சமையல் கூடம்

**வினா எண் 17549—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையில் நவீன சமையல் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 26]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2005-2006 ஆம் ஆண்டுக்கான சிறைகளை நவீனப் படுத்தும் திட்டத்தின்கீழ், கோவை, மத்திய சிறையில் உள்ள சமையற் கூடத்தை ரூ. 71.02 இலட்சம், செலவில் புதுப்பிக்க அரசாணை எண் 1007, உள் (சிறை-4) துறை, நாள் 19-10-2006-ல் ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடந்து வருகின்றன.

**76—**

## அரிசிக் கடத்தல்

**வினா எண் 7309—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரிசி கடத்தியவர்கள்மீது காவல் துறை போட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) இதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரிசி கடத்தியவர்கள்மீது குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையினரால் 2006 ஆம் ஆண்டில் 365 வழக்குகள் போடப்பட்டன. இதன் தொடர்பாக இம்மாவட்டத்தில் 5263.86 குவிண்டால் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது. இந்த மாவட்டத்தில் 2007 ஆம் ஆண்டில் இதுவரை 72 வழக்குகள் போடப்பட்டன. இதன் தொடர்பாக 1,921 குவிண்டால் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது. இந்த மாவட்டத்தில 2006 ஆம் ஆண்டு, கள்ளச் சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதல் பராமரிப்புச் சட்டம் 1980-ன்படி 11 நபர்களும், குண்டர் சட்டத்தின்கீழ் (த.நா. சட்டம் 14/1982) ஒரு நபரும், ஆக மொத்தம்

[2007 ஏப்ரல் 26

12 நபர்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டான 2007-ல் இதுவரை 6 நபர்கள் கள்ளச் சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதல் பராமரிப்புச் சட்டம் 1980-ன்படி கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) இதன்மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் 2006 ஆம் ஆண்டில் ரூ. 63,16,632/- ஆகும். 2007 ஆம் ஆண்டில் இதுவரை கிடைத்த வருமானம் ரூ. 23,05,200/- ஆகும்.

**77—**

### நாய்க் கடி மருந்து

**வினா எண் 2705—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட பெரிய அரசு மருத்துவமனையில் நாய்க் கடி மருந்து குறைவின்றி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

2006-2007 ஆம் நிதியாண்டில் தமிழக அரசு, நாய்க் கடி மருந்து வழங்குவதற்காக மட்டும் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு ரூ. 4.50 கோடியும், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளுக்கு ரூ. 4.00 கோடியும், பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளுக்கு ரூ. 1.25 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனடிப்படையில், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்மூலம் நாய்க் கடி மருந்து போதுமான அளவு கொள்முதல் செய்யப்பட்டு, அருகிலுள்ள மருந்துக் கிடங்குகளின்மூலம் மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கோவை மாவட்ட பெரிய அரசு மருத்துவமனைக்கும் நாய்க் கடி மருந்து குறைவின்றிக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 26]

**78—**

### குடிநீர் வசதி

**வினா எண் 12278—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானம்பாக்கியிலுள்ள வடக்கு முனியன் கோயிலுக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானம்பாக்கியிலுள்ள வடக்கு முனியன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் குடிநீர் வசதி செய்து தரும் திட்டம் எதுவும் இல்லை.

**79—**

### ஆக்கிரமிப்பு அப்புறப்படுத்துதல்

**வினா எண் 16926—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி ஊராட்சி, அருள்மிகு சென்றாய பெருமாள், அருள்மிகு புஜங்கலீஸ்வரர் திருக்கோயில்களைச் சுற்றியுள்ள குடியிருப்பு, கடைகளை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, பாகல்பட்டி ஊராட்சி, அருள்மிகு சென்றாய பெருமாள், அருள்மிகு புஜங்கலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான

கோயில் வீட்டின் அருகில் இரு ஓலைக் குடிசைகள் உள்ளன. அவற்றில், இத்திருக்கோயிலின் திருவலகுப் பணியாளரும், திருக்கோயிலின் முன்னாள் பணியாளரும் குடியிருந்து வருகிறார்கள். இதைத் தவிர வேறு குடிசைகளோ, ஆக்கிரமிப்புகளோ ஏதும் இல்லை. இவ்விரு ஓலைக் குடிசைகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**80—**

## கடன் உதவி

**வினா எண் 18461—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, இரமணமுதலிப்புதூரிலுள்ள நெசவாளர்களுக்கு நீண்ட காலக் கடன் உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, இரமணமுதலிப் புதூரில் 80 நெசவாளர்கள் உள்ளனர். அவர்களில் 60 நெசவாளர்கள் சமத்தூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ளனர். எஞ்சியுள்ள 20 நெசவாளர்கள் கூட்டுறவின்கீழ் அல்லாத நெகமம் மாஸ்டர் வீவரிடம் தொழில் புரிந்து வருகின்றனர். கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சங்க நெசவாளர்கள் பயனடையும் வகையில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து குறுகிய காலக் காசுக் கடன் வழங்கப்படுகிறது. தனியார் நெசவாளர்கள், மைய அரசின் நெசவாளர்களுக்குக் கடன் அட்டை வழங்கும் திட்டத்தின்கீழ் (ஸ்வரோஜ்கார் கடன் அட்டைத் திட்டம்) மூலமாக ரூ. 25,000/- வரையிலும் கடனுதவி பெற வழிவகை உள்ளது. மேலும் இவர்கள் விரும்பும்பட்சத்தில் அருகிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து அரசு வழங்கும் நலத் திட்டத்தின் பயன்களைப் பெறலாம். எனவே, வால்பாறை தொகுதி, இரமணமுதலிப்புதூர் நெசவாளர்களுக்கெனத் தனியாக நீண்ட காலக் கடனுதவி வழங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.





**81—**

## கடன் உதவி

**வினா எண் 18511—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நெசவாளர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் உதவி செய்து உற்பத்தி செய்யும் துணிகளை அரசே கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் கூட்டுறவின்கீழ் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நபார்டு மறு நிதியுதவித் திட்டம், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 275 கோடி அளவிற்கு 9.5 சதவிகித வட்டியில் காசுக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வட்டி விகிதத்தினைக் குறைப்பது சம்பந்தமாக மைய அரசு, நபார்டு வங்கியுடன் பரிசீலனை செய்து வருகிறது. மைய அரசு நபார்டு வங்கிமூலம் வட்டி விகிதத்தினைக் குறைத்து, உத்தரவு வெளியிடும் பட்சத்தில், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் காசுக் கடனுக்கான வட்டி விகிதம் மேலும் குறைய வாய்ப்புள்ளது.

மேலும், தமிழகக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் அனைத்து ரகங்களையும் தமிழ்நாடு மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (Co-optex) தேவைக்கேற்ப கொள்முதல் செய்து வருகிறது. இவை தவிர, சங்கங்களின் உற்பத்தி, அந்தந்தச் சங்கங்களின் விற்பனை நிலையம் மற்றும் கிளை விற்பனை நிலையங்களின்மூலமாகவும், முகவர் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருவதால் தமிழகத்தில் நெசவாளர்களுக்குக் குறைந்த வட்டியில் கடனுதவி செய்து உற்பத்தி செய்யும் துணிகளை அரசே கொள்முதல் செய்யும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2007 ஏப்ரல் 26

**82—**

### நூலகம்

**வினா எண் 6858—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, காருவள்ளியில் நூலகம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஓமலூர் தொகுதி, காருவள்ளி ஊராட்சியில் சின்னத் திருப்பதியில் நவம்பர் 2003 முதல் ஊர்ப்புற நூலகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்குக் காலி மனை ஏதும் பெறப்படவில்லை. காலி மனை பெறப்பட்டதும் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**83—**

### நூலகம்

**வினா எண் 8085—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சியில் கிராம நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சியில் நூலகமொன்றினை அமைக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பொது மக்கள் பூர்த்தி செய்யும்பட்சத்தில் அவ்வூரில் ஊர்ப்புற நூலகம் திறக்க இயலும்.



2007 ஏப்ரல் 26]

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலி மனை நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்.

3. தலா ரூ. 1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ. 15/-ம், ஆண்டுச் சந்தா ரூ. 5/-, ஆக மொத்தம் ரூ. 20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ. 2,000/-மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.

**84—**

### பொது நூலகம்

**வினா எண் 8688—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், உம்பிளிக்கம்பட்டி கிராமத்தில் பொது நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1950-ல் 1,000 மக்கள் தொகைக்குமேல் உள்ள ஊர்களில் பகுதிநேர நூலகம் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. உம்பிளிக்கம்பட்டி கிராமத்தில் நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், உம்பிளிக்கம்பட்டி கிராமத்தில் மக்கள் தொகை 1,587 ஆகும். எனவே அவ்வூர் மக்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்யும் பட்சத்தில் பகுதிநேர நூலகம் திறக்கப்படும்.

[2007 ஏப்ரல் 26

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலி மனை நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்.

3. தலா ரூ. 1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ. 15/-ம், ஆண்டுச் சந்தா ரூ. 5/-, ஆக மொத்தம் ரூ.20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ. 2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.

**85—**

## நூலகம்

**வினா எண் 8844—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் கிராம ஊராட்சி, திருமால் நகரில் நூல் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் கிராம ஊராட்சி, திருமால் நகரில் நூலகமொன்றினை அமைக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பொது மக்கள் பூர்த்தி செய்யும்பட்சத்தில் முதல் கட்டமாகப் பகுதிநேர நூலகம் திறக்கலாம்.

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட வேண்டும்.



2007 ஏப்ரல் 26]

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலி மனை நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்.

3. தலா ரூ. 1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ. 15/-ம், ஆண்டுச் சந்தா ரூ. 5/-, ஆக மொத்தம் ரூ. 20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ. 2,000/-மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.

திருமால் நகரில் நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டு, மேற்படி நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டதும் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.

**86—**

## அரசு நூலகம்

**வினா எண் 10079—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, காடகனூர் கிராமத்தில் அரசு நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, காடகனூர் கிராமத்தில் நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பொது மக்கள் பூர்த்தி செய்யும்பட்சத்தில் முதல் கட்டமாகப் பகுதிநேர நூலகம் திறக்கலாம்.

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட வேண்டும்.

[2007 ஏப்ரல் 26

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலி மனை நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்.

3. தலா ரூ. 1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/-ம், ஆண்டுச் சந்தா ரூ. 5/-, ஆக மொத்தம் ரூ. 20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ. 2,000/-மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.

காடகனூர் கிராமத்தில் நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.

**87—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 11430—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, ஓமலூர் கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதி, ஓமலூர் கிளை நூலகம் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் ரூ. 2,500/- வாடகையில் இயங்கி வருகிறது. இந்நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட காலி மனை ஏதும் கைவசமில்லை. காலி மனை பெறப்பட்டவுடன் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**88—**

## நூலகம்

**வினா எண் 11741—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 26]

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, முருகல்நத்தம் மற்றும் விளங்காமுடி கிராமத்திற்கு நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, முருகல்நத்தம் மற்றும் விளங்காமுடி கிராமத்தில் நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பொது மக்கள் பூர்த்தி செய்யும்பட்சத்தில் முதல் கட்டமாகப் பகுதிநேர நூலகம் திறக்கலாம்.

1. நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலி மனை நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தர வேண்டும்.

3. தலா ரூ. 1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ. 15/-ம், ஆண்டுச் சந்தா ரூ. 5/-, ஆக மொத்தம் ரூ. 20/- செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

5. ரூ. 2,000/-மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.

**89—**

## தனி ஆணையம்

**வினா எண் 17616—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நிலுவையிலுள்ள வரிகளை வசூலிக்கத் தனி ஆணையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் நிலுவையிலுள்ள வரிகளை வசூலிக்கத் தனி ஆணையம் அமைக்கும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**90—**

**சாலை வசதி**

**வினா எண் 1913—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சங்கரன்குடி மலைஜாதி மக்கள் குடியிருப்புப் பகுதிக்குச் சாலை வசதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, சங்கரன்குடி செட்டில்மென்ட் குடியிருப்புப் பகுதி, இந்திரா காந்தி வன உயிரினச் சரணாலயப் பகுதியில் அமைந்துள்ளது. அப்பகுதிவாழ் மக்கள் வசிக்கும் இடத்திற்குச் செல்லத் தற்போதுள்ள சாலை வசதி போதுமானதாகும்.

(ஆ) வினா எழவில்லை.

**91—**

**சாலைப் பணி**

**வினா எண் 7570—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி இந்திரா காந்தி வன உயிரினக் காப்பக வனப் பகுதியில் சாலைப் பணியை விரைந்து செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) இந்திரா காந்தி வன உயிரினச் சரணாலயப் பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட பயன்பாட்டாளர்களிடமிருந்து (User Agencies) உரிய கருத்துரு அனுப்பி வைக்கும்பட்சத்தில் வனப் பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி மத்திய அரசு அனுமதி பெற முழு முயற்சி மேற்கொண்டு அனுமதி பெற்று சாலைப் பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**92—**

**மேம்பாலம்**

**வினா எண் 9295—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் மாவட்டம் ஈச்சனாரி இரயில்வே கேட் அருகே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயமுத்தூர் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலை எண் 209-ல் கி.மீ.151/4-ல் ஈச்சனாரி இரயில்வே கேட் அருகே மேம்பாலம் கட்ட வேண்டிய பகுதி தேசிய நெடுஞ்சாலையில் (எண் 209) அமைந்துள்ளது. இது தொடர்பாக ஆய்வுப் பணி மேற்கொள்வதற்கான (Feasibility Study) ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுப் பரிசீலனையில் உள்ளது. ஆய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றபின் மேம்பாலம் கட்டுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

[2007 ஏப்ரல் 26

93—

## சாலைச் சீரமைப்பு

**வினா எண் 11975—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூரிலிருந்து செங்கம் செல்லும் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், போளூரிலிருந்து செங்கம் செல்லும் 45.10 கி.மீ. நீளச் சாலை தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டு, முன்கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இச்சாலைப் பணிகள் 30-6-2008-க்குள் முடிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

94—

## மேம்பாலம்

**வினா எண் 12167—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, கரூர்—வெங்கமேடு இரயில்வே மேம்பாலப் பணியை விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கரூர்-வெங்கமேடு இரயில்வே கடவு எண் 37-க்குப் பதிலாக மேம்பாலம் கட்டும் பணி முடிவடைந்து 26-12-2006 அன்று முதல் போக்குவரத்திற்குத் திறந்துவிடப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.



2007 ஏப்ரல் 26]

95—

## மீன் உற்பத்தி

**வினா எண் 4208—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கடல் பகுதிகளில் வவ்வால், இறால், வாளை, அயலை, மத்தி, விரால், கெளுத்தி, வஞ்ஜிரம் முதலிய மீன்கள் அதிக அளவில் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள கடல் பகுதிகளில் மீன் வளத்தினைப் பாதுகாக்கும்பொருட்டு, வணிக முக்கியத்துவம் வாய்ந்த (Commercial Shrimp Species) இறால் குஞ்சுகளை வளர்த்தெடுத்து, கடலில் இருப்புச் செய்து இறால் உற்பத்தியினை அதிகரித்திட ஏற்கெனவே அரசு ஆணை வழங்கியுள்ளது. இறால் இனம், தற்சமயம் குஞ்சுப் பொறிப்பகங்களில் இனவிருத்தி செய்து அவைகளை வளர்த்து எடுத்து கடலில் இருப்புச் செய்யும் திட்டம் நாகப்பட்டினம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், இராமநாதபுரம், தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள கடற்பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஏனைய கடல் இன மீன்களின் உற்பத்தியினைக் கடலில் அதிகரித்திடத் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

96—

## மீன் விற்பனை மையம்

**வினா எண் 16179—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் நீராறு அணை மற்றும் டாப் சிலிப் பகுதியில் மீன்வளத் துறைமூலம் மீன் விற்பனை மையம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 26

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை வட்டம், கீழ்நீராறு நீர்த்தேக்கத்தின் மீன் வளப் பணிகள் மேற்கொள்ள அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கம் வனப் பகுதியில் அமைந்துள்ளதால் மீன் பிடிப்பு மற்றும் மீன் விற்பனைப் பணிகளை மேற்கொள்வதற்காக வனத் துறையினரிடம் அனுமதிபெற வேண்டி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வனத் துறையின் அனுமதிபெறப்பட்டதும், கீழ்நீராறு அணைப் பகுதியில் மீன் துறையினால் மீன் வளப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**97—**

## மீன் வளர்ப்பு

**வினா எண் 16183—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி சோலையாறு அணையில் விரால், ரோகு, கட்லா போன்ற உயர் ரக மீன்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள சோலையாறு அணையில் இந்தியப் பெருங்கெண்டை மீன்களான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சினக் கெண்டையான சாதா கெண்டை மீன் குஞ்சுகளைத் துறையின்மூலம் இருப்புச் செய்யப்பட்டு, மீன் வளப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**98—**

## பால் கூட்டுறவுச் சங்கங்கள்

**வினா எண் 8881—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 ஏப்ரல் 26]

ஜெயங்கொண்டம் பகுதியில் புதிய பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் 12 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கலைத்தல் நடவடிக்கையில் உள்ள மூன்று சங்கங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டும், இரண்டு சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டும் உள்ளன.

**99—**

## கடன் உதவி

**வினா எண் 18067—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத காலத்தில் சிறு தொழில் செய்யக் கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

பனைசார்த் தொழிலாளர்களுக்கு மும்பை, கதர் ஆணைக் குழு, கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தில் பரிந்துரைக்கப்பட்ட தொழில்களுக்கு மற்றும் சிறு தொழில்களுக்குக் கிராமப்புற வேலைவாய்ப்புத் (Rural Employment Generation Programme) திட்டத்தின்மூலம், தேசிய வங்கிகள் வழியாக அந்தந்த மாவட்ட உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில் அலுவலகத்தின்மூலம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கடன் கோரிப் பெறப்படும் விண்ணப்பங்களைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பரிசீலித்து ஒவ்வொரு நிதியாண்டிலும் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, கோயம்புத்தூர் சார்ந்த மக்களுக்கு உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்) அலுவலகம்மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் வங்கிகளின் சட்ட திட்டங்களுக்குட்பட்டுக் கடன்பெற வாய்ப்புகள் உள்ளன.

**100—**

## பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 18508—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

*(அ) பனைவெல்லத் தொழில் செய்யும் உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை மனு பெற்றால், அம்மனுவைப் பரிசீலித்து, சாத்தியக்கூறுகள் இருப்பின் சங்கம் துவக்க வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளும்.*

*(ஆ) கோரிக்கை மனு பெறப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.*

**[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தேழாவது முதல் ஐம்பது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது அறிக்கையைக் குழுவின் சார்பிலே பேரவைக்கு அளிக்கிறேன்.*





## 3. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**
**(ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**
**(இ) கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**
— *தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2007–2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 25–4–2007 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் சார்பில் தமிழ்நாடு காவல் துறை மானியக் கோரிக்கை எண் 22, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மானியக் கோரிக்கை எண் 23, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மானியக் கோரிக்கை எண் 37 ஆகிய 3 மானியக் கோரிக்கைகள்மீது மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன்.*

*ஒரு நாட்டிற்கு மிக முக்கியமானது காவல் துறை. காவல் துறை பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் பாதுகாப்பாக இருப்பது காவல் துறை; அமைச்சர் பெருமக்களுக்கும், இந்த அரசாங்கத்திற்கும், நாட்டிற்கும், நம்முடைய மக்களுக்கும் பாதுகாப்பு அரணாக இருப்பது காவல் துறை. ஆகவேதான், ஒட்டுமொத்தப் பாதுகாப்பு அரண் காவல் துறை என்ற அளவில் நான் காவல் துறையை வெகுவாகப் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் அய்யன் திருவள்ளுவர் அவர்கள் சொல்லுகின்றபொழுது,*

"எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல தரண்"

என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது, எத்தகைய பெருமை உடையவர்களாக இருந்தபோதிலும், செயல் வகையால் சிறப்பு இல்லாதவர் இடத்தில் அரண் பயன் இல்லாதது ஆகும் என்று வள்ளுவர் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, எல்லா வகையிலும் பெருமைக்குரிய காவல் துறை சிறப்பாகப் பணி செய்கின்றபொழுதுதான் அந்தக் காவல் துறை நாட்டிற்கு அரணாக இருக்கும். எல்லாவற்றிற்கும் பாதுகாப்பு அரணாகவும் இருக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

காவல் துறை என்பது நாட்டில் குற்ற நிகழ்வுகள் நடக்காமல் பாதுகாப்பது, குற்றங்களைக் கண்டுபிடித்து, அதற்கு நல்ல தீர்வினை உண்டாக்குதல், மூன்றாவதாகப் பொது அமைதியைப் பாதுகாக்க சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல் ஆகிய இந்த மூன்று பணிகளையும் உள்ளடக்கி பல்வேறு மகத்தான பணிகளைச் செய்வதுதான் நம்முடைய காவல் துறை. ஆகவே, தன்னுடைய பணிக் காலங்களில் ஏற்படுகின்ற எவ்வளவோ எதிர்ப்புகள், அச்சுறுத்தல்கள், சவால்களை எல்லாம் சந்தித்துப் பணியாற்றக்கூடிய நிலையில் காவல் துறை இருக்கின்ற காரணத்தினாலேயேதான் இதற்குப் பல்வேறு காலக்கட்டங்களில், பல்வேறு கோணங்களில் இருந்து விமர்சனங்கள்கூட வருகின்றன. ஆகவே, இந்த விமர்சனங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு நமக்குப் பாதுகாப்பு அரணாக இருக்கிற காவல் துறையில் உண்மையான அதிகாரிகள்—காவலர்களிலிருந்து உயர் அதிகாரிகள் வரையிலே உண்மையான அதிகாரிகள், நேர்மையான அதிகாரிகள், மக்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றக்கூடிய அதிகாரிகள் நிறைய இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட அந்த நல்ல அதிகாரிகளை, நேர்மையான, திறமையான அதிகாரிகளை இந்த மாமன்றத்தின் சார்பிலே நான் தலை வணங்கிப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்; பட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும் நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 9–35)

இந்த உயர்ந்த காவல் துறைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்த நிலையிலே உதவிகளைச் செய்வார்கள் என்று நீண்ட காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நேற்றுக்கூட இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்றபோது, காவல் துறையை



நவீனமயமாக்குவதற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கப்படவில்லை என்று ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. அதிலே, அடுத்துச் சொல்லப்படுவது, காவல் துறையிலே இருப்பவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு என்று, எல்லா ஆண்டுகளிலும் இருந்ததைவிட இந்த ஆண்டு கூடுதலான நிதியை ஒதுக்கியிருப்பவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். நவீனமயமாக்குவது என்பது, வாகனங்கள், ஆயுதங்கள் என்று சொல்வதைவிட, அவர்கள் மனதைத் தெளிவுபடுத்த வேண்டும். இன்றைய காலக்கட்டத்தில் எப்படிப் பணியாற்ற வேண்டுமென்று அவர்களை ஊக்குவிக்கக்கூடிய பயிற்சிதான் சாலப் பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினாலேதான், முதலமைச்சர் அவர்கள் பயிற்சி அளித்தல்போன்ற பல்வேறு நிலைகளிலே உள்ள நிலையை அறிந்து, கூடுதலான நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, இப்படிக் கூடுதலான நிதியை ஒதுக்கியிருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காவல் துறைக்கு நிறையச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்.

கடந்த காலங்களிலேகூடக் கேட்டார்கள், எங்களிடத்திலே சொன்னார்கள். காவல் துறை நவீனமயமாக்கப்படுகிறது, ஆனால், எங்களுக்கு என்ன, இந்தக் காவல் துறையில் பணியாற்றுகிற எங்கள் வயிற்றுக்கு என்ன கிடைக்கிறது என்று எதிர்பார்த்தார்கள், கேட்டார்கள். ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகவே, இந்த ஆண்டும் நிறைய எதிர்பார்க்கின்ற காரணத்தாலே, சிலவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று நான் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, அண்ணல் காந்தியடிகள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். "நம்முடைய நாடு சுதந்திரம் பெற்றிருக்கிறது; இந்தச் சுதந்திர நாட்டில் நள்ளிரவு 12 மணிக்கு ஒரு பெண் நிறைய ஆபரணங்களை அணிந்துகொண்டு தன்னந்தனியாக, அச்சுறுத்தல் இல்லாமல், பயமில்லாமல் செல்ல வேண்டும்; அந்த நாள்தான் சுதந்திரம்பெற்ற நாளாகும்" என்று சொன்னார்கள். ஆகவே, அந்த நாள் வர வேண்டும் என்பது முதலமைச்சர் அவர்கள் உட்பட எல்லோருடைய ஆசை. அந்த நாளை உண்டாக்கக்கூடியவர்கள் காவல் துறையிலே இருப்பவர்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்போது தமிழ்நாட்டில் இருக்கிற இந்தியக் காவல் பணிக்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த அதிகாரிகளின் எண்ணிக்கை 214. அதிலே பணியிலே உள்ளவர்கள் 1–5–2006 நிலவரப்படி 189. மீதம் உள்ள பணியிடங்கள் 25. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்த 25 காலிப் பணியிடங்களிலும்

தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை நிரப்ப வேண்டுமென்ற
வேண்டுகோளை நான் முதலமைச்சருக்கு வைக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, தமிழகத்திலே காவல் துறை துணைக்
கண்காணிப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு
வழங்கப்பட வேண்டிய காலி இடங்கள் ஏராளமாக இருக்கின்றன.
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களில் ஏறக்குறைய 800 இடங்கள்
காலியாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த
இடங்களில், தகுதி உள்ளவர்கள் நிறைய இருக்கின்ற காரணத்தாலே,
அந்தத் துணைக் கண்காணிப்பாளர்களுக்குக் கூடுதல்
கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு வழங்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய நிலவரப்படி, நம்முடைய காவலர் பணியில்
ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் மொத்தம் 98,897. இதிலே அமைச்சுப்
பணியாளர்கள் 5,297. இன்றைய மக்கள் தொகை, மாநிலத்தினுடைய
பரப்பளவு, பெருகி வருகின்ற குற்ற நிகழ்வுகள் ஆகியவற்றையெல்லாம்
ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்தப் பணியிடங்கள் பற்றாக்குறையாக
இருக்கின்றன. ஆகவே, நடப்பாண்டில் காவலர்களின் எண்ணிக்கையைக்
கூடுதலாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
அதைப்போல, அமைச்சுப் பணியாளர் இடங்களும் கூடுதலாக்கப்பட
வேண்டும். இப்போதுகூட மகளிர் காவல் நிலையங்கள் 196 உட்பட
1,419 காவல் நிலையங்கள் உள்ளன. இதிலே சொந்தக் கட்டடங்கள்,
அரசுக் கட்டடங்களில் இருப்பது 1,101, ஏறக்குறைய 78 விழுக்காட்டுக்கு
இருக்கிறது. மீதி இருக்கிற 318 காவல் நிலையங்கள், 22 விழுக்காட்டு
இடங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கின்றன.
ஆகவே, அவற்றைக் கூடிய விரைவிலே அரசுக் கட்டடங்களாகக்
கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, காவலர்களுக்கான குடியிருப்பில் தற்போது
காவலர்களுக்கு 42,016 வீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்போது
கட்டக்கூடிய நிலையிலே இருப்பவை ஏறக்குறைய 5,373. அது 4.9
விழுக்காடு. ஆக 47 விழுக்காட்டுக்குக் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.
மீதி இருக்கிற 53 விழுக்காடு காவலர்களுக்கான குடியிருப்புகளை
விரைவாக உருவாக்கித் தர வேண்டுமென்று நான் பணிவோடு
கேட்டுக்கொள்கிறேன்.



காவல் துறையினர் நேரம், காலம் இல்லாமல்
பணியாற்றக்கூடியவர்கள். அவர்களுக்குப் பணி நேரமே கிடையாது.
எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அழைப்பு வரும். ஆகவே,
அப்படிப்பட்ட காவல் துறையில் இருப்பவர்களின் குழந்தைகள்
தரமான கல்வி, உயர் கல்வி பெற முடியாத சூழ்நிலையிலே
இருந்துகொண்டிருக்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டு காலமாக இந்த
மன்றத்திலே நான் தொடர்ந்து வலியுறுத்தினேன். School of Excellence
என்று சொல்லக்கூடிய அளவிற்கு உலகத் தரம் வாய்ந்த—
காவல் துறையிலே காவலர்களிலிருந்து அதிகாரிகள் வரை
பணியாற்றக்கூடியவர்களின் குழந்தைகள் படிப்பதற்குத் தரமான ஒரு
பள்ளிக்கூடத்தை, School of Excellence என்ற அளவிலே உருவாக்க
வேண்டுமென்ற வேண்டுகோளை முன் வைத்தேன். முன்னாள்
முதலமைச்சர் அவர்கள் முதலாமாண்டு பேசும்பொழுது
அறிவிப்பதாகச் சொல்லி, முதல் கட்ட நிதியும் ஒதுக்குவதாகச்
சொன்னார்கள். அடுத்த ஆண்டு தொடர்ந்து கேட்டேன், 'மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களே, சொன்னீர்கள், நிறைவேற்றப்படவில்லை'
என்று சொன்னேன். 'இடம் தேர்வு செய்தாகிவிட்டது. விரைவிலே
முதல் கட்ட நிதியை ஒதுக்குகிறேன்' என்று சொல்லி ஆரம்பிப்பதாகச்
சொன்னார்கள். இன்றைய வரையிலும் நிறைவேற்றியபாடில்லை.
ஆகவே, அந்தப் பள்ளிக்கூடத்தை உருவாக்குவது என்ன நிலையிலே
இருக்கிறது, அது உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புவதோடு,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்றித் தருமாறு
நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9–40

அதைப்போல, காவலர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டிக்
கொடுப்பதாக, அதாவது காவலர் நகரம் என்று, சென்னையையொட்டி
மேல்கோட்டையூரிலே, காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட பகுதியிலே
17,000 வீடுகள் கட்டுவதாகக் கடந்த ஆட்சிக் காலத்திலே
அறிவிக்கப்பட்டது. அதற்கு நிதியும் ஒதுக்குவதாகச் சொன்னார்கள்.
அது என்ன நிலையில் இருக்கிறது, அது அங்கே உருவாக்கப்படுமா
என்பதையும் நான் இங்கே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இப்போது உங்களுடைய
இந்த 5 ஆண்டு கால ஆட்சியில் காவல் துறையினர், தங்களுக்கு ஏதாவது
செய்ய வேண்டும், கடந்த காலங்களில் நவீனமயமாக்கப்பட்டது,
தங்களுக்கான உதவிகள் எதுவுமே செய்யப்படவில்லை; நீங்கள் செய்ய

வேண்டுமென்ற பேரார்வத்தோடு அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒட்டுமொத்தத் தமிழ்நாடு காவல் துறையினரின் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் சில வேண்டுகோள்களைக் கோரிக்கைகளாக இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

இப்போது காவல் துறையிலே இருப்பவர்களுக்குப் பணி வரம்பு கிடையாது. ஆகவே, எல்லாத் துறைகளிலும் இருப்பதைப்போல, 8 மணி நேரப் பணி வரம்பு கட்டாயம் வழங்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அதே நேரத்தில், காவல் துறையிலே இருப்பவர்களுக்கு ஒட்டுமொத்தமாக ஊதிய வரம்பு என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு ஊதிய வரம்பு கட்டாயம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதிலே, குறைந்தபட்சமாக ஓர் எழுத்தர் பெறக்கூடிய, Assistant என்று சொல்லக்கூடிய உதவியாளர் பெறக்கூடிய அளவிற்காவது காவலர்களுக்கு அடிப்படைச் சம்பளம் இருக்க வேண்டும். அதுகூட இல்லாத நிலையில் இருக்கிறது. ஆகவே, கட்டாயம் காவல் துறையிலே அனைத்து நிலைகளிலேயும் இருக்கிற அதிகாரிகளுக்கும் ஊதிய உயர்வு தங்கள் காலத்திலே வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, எல்லோருக்கும் விடுமுறை இருக்கிறது, வாரத்தில் இரண்டு நாட்கள் விடுமுறை. காவல் துறையிலே காவலர்களிலிருந்து கண்காணிப்பாளர்கள் வரையிலும் விடுமுறை நாட்கள் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே, வாரத்தில் இரண்டு நாட்கள் இல்லையென்று சொன்னாலும்கூட, வாரத்தில் ஒரு நாளாவது அவர்களுக்குக் கட்டாயம் விடுமுறை வேண்டும். வாரம் ஒரு நாள் விடுமுறையை நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இப்போது 24 மணி நேரமும் பணியாற்றக்கூடிய காவலர்களுக்கு இடர்ப் படியாக நீங்கள் 120 ரூபாயை வழங்கி வருகிறீர்கள். அதை 500 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று நான் இங்கே பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையிலே இருப்பவர்களுக்கு மருத்துவ வசதி இன்னும் பற்றாக்குறையாக இருக்கிறது என்ற குறை பரவலாக இருக்கிறது. ஆகவே, ஒரு மாவட்டத்திற்கு ஒரு காவல் மருத்துவமனை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



அதைப்போல, நீண்ட காலமாகத் தலைமைக் காவலர்களாகப் பணியாற்றக்கூடியவர்களுக்குத் தொடர்ந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் என்ற பதவி உயர்வு வழங்கப்பட்டது. இன்னும் பற்றாக்குறை, 25 ஆண்டுகள், அதற்கு மேலும் தகுதி, திறன் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள், 30 ஆண்டுகள் பணியாற்றியும்கூட, ஒரு படிகூட உயர்வு கிடைக்கவில்லை. ஆகவே, தலைமைக் காவலர்களாக இருப்பவர்களுக்குக் குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் என்று சொன்னாலும்கூட அவர்களுக்கு சார்பு ஆய்வாளர், சிறப்பு சார்பு ஆய்வாளர் பதவி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, காவலரிலேயிருந்து தலைமைக் காவலர், தலைமைக் காவலரிலிருந்து சார்பு ஆய்வாளர், சார்பு ஆய்வாளரிலிருந்து ஆய்வாளர், துணைக் கண்காணிப்பாளர் என்று இப்படி எல்லா நிலைகளிலும் குறைந்தபட்சம் 6, 7 ஆண்டுகளுக்கு ஒரு படி பதவி உயர்வு கொடுத்தால், அந்த நிலையிலே அவர்களுக்குக் கூடுதலான சம்பளம் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அதை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சீருடை. சீருடைக்கு இரண்டு உடைகள் வழங்கப்படுகின்றன, ஒரு ஆண்டுக்கு. அந்த இரண்டு உடைகள் போதாது என்கிறார்கள். அதிலே வழங்கக்கூடிய துணிகூட யாருக்கோ ஒருவருக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கி, அதன்மூலம் கொடுக்கிறோம். அதைத் தரமில்லாத துணியாகக் கொடுக்கிறார்கள். ஆகவே, நீங்கள் யாருக்குத் துணிக்காக ஒப்பந்தத்தைக் கொடுக்கிறீர்களோ, அந்தத் துணிக்குண்டான காசைக் கொடுத்தால் போதும், அவர்களே தைத்துக்கொள்வார்கள். ஆகவே, இப்போது ஓர் ஆண்டுக்கு 4 உடைகள், அதற்குண்டான தையல் கூலி ஆகியவற்றை வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9–45

அடுத்து, தொப்பி, இடுப்புப் பட்டை, காலணி, இவையெல்லாம் கொடுக்கிறீர்கள். அது சின்னத் தலைக்குப் பெரிய தொப்பியாகப் போய்விடுகிறது. பெரிய காலுக்கு சிறிய காலணியாகப் போய்விடுகிறது. அதை மீண்டும் வேறு கடையில் வாங்க வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. யாரோ ஒப்பந்ததாரரிடத்திலே கொடுப்பதற்குப் பதிலாகப் அந்தத்

தொகையை அவர்கள் கையிலே கொடுத்தால், அவர்கள் பொருத்தமானதாகப் பெற்றுக்கொள்வார்கள் என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வருவாய்த் துறையில் அங்கு இருக்கக்கூடிய வருவாய் ஆய்வாளர்களுக்குக்கூட இப்போது செல்லிடத் தொலைபேசி அதாவது செல் போன் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காவல் துறையில் இருப்பவர்களுக்கும்கூட செல்ஃபோன் வழங்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, மகளிர் காவலர்களுக்கு, சீருடையில் இது எங்களுக்குச் சரிவர இல்லை என்று ஒரு மன உறுத்தல் அவர்களிடத்திலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அந்தச் சீருடையை மாற்றித் தர வேண்டும். அந்த மேல் சட்டையை முழுக்கால் சட்டைக்குள் திணிப்பதை 'இன்' செய்வது என்று சொல்கிறார்களே, அதைச் சற்று மாற்றி, மேல் சட்டையை மேலேயே விட்டுவிடுவதற்குண்டான வகையிலே நீங்கள் உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆண் காவலர்களுடன் பெண் காவலர்களும் சட்டமன்றப் பணிக்கு வருகின்றனர். நின்றுகொண்டே இருக்கிறார்கள், சட்டமன்றக் கூட்டம் முடிந்து நாம் போகும் வரைக்கும். ஆகவே, சட்டமன்றம் கூடுகின்ற நாட்களில் பணிக்கு வரக்கூடியவர்களுக்கு தினப் படியைக் கூடுதலாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று காவலர்களுடைய குறைகளைப் போக்குவதற்காக ஒரு காவல் ஆணையம் அமைத்து இருக்கிறீர்கள். அதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். நாங்கள் காவலர்களுக்குச் சங்கம் வேண்டும் என்று கேட்டோம்; இல்லை என்று சொன்னாலும், ஓர் ஆணையமாவது முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். முன்பு இரண்டு ஆணையங்கள் அமைக்கப்பட்டு, அதிலே தங்களுக்குச் சலுகைகள் எல்லாம் வழங்கப்பட்டன. அதனை வரவேற்கிறோம்; பாராட்டிக்கொண்டிருக்கிறோம்; மூன்றாவது காவல் ஆணையம் வந்திருக்கிறது; இதிலே நிறையச் சலுகைகளை வழங்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இந்தக் காவல் ஆணையத்தைத் தொடர்ந்து, வரக்கூடிய காலங்களில் அவர்கள் குறைகளைப் போக்குவதற்காக முதலமைச்சர் தலைமையிலே நம்முடைய உள் துறைச் செயலாளர், தலைமை இயக்குநர் உட்படப் பல்வேறு அதிகாரிகளை உள்ளடக்கி, இன்னும் சில உறுப்பினர்களைக்



கொண்டு, அவ்வப்போது இருக்கிற பிரச்சினைகளை அறிவதற்கு ஒரு குழுவினை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குழு நிரந்தரமாக இருக்க வேண்டும். அவர்களுக்குச் சங்கம் இல்லை என்று சொன்னாலும்கூட, குழு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறைப் பணியை மேலும் ஊக்குவிப்பதற்கு, சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு ஆண்டுதோறும் பணியிடைப் பயிற்சி—In-Service Training என்று சொல்கிறார்கள்; அந்தப் பணியிடைப் பயிற்சியை அவர்களுக்கு வழங்க வேண்டும். அதற்கு உடற்பயிற்சி, கணினிப் பயிற்சி, ஆங்கிலம் பேசக் கற்றுக்கொள்ளுதல், வாகனம் ஓட்டுதல் பயிற்சி, தொலைத் தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்துதல் பயிற்சி, மருத்துவ முதலுதவிப் பயிற்சி, உளவியல் பயிற்சிபோன்ற பல்வேறு பயிற்சிகளைக் கொடுத்து, அவர்களைக் குற்றமற்றவர்களாக மேலும் ஊக்குவிக்கக்கூடிய வகையிலே வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதைப்போல, இந்தப் பயிற்சிக்கு இடர்ப்பாட்டுப் படி, விடுப்பு, தீர்ப்பாயம், ரேசன், ஊதியம், மருத்துவம், பணித் தேர்வுபோன்ற பல்வேறு கோரிக்கைகளையும் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் அன்போடு உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது, நாம் வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறோம். இந்திய அளவில் தமிழ்நாடு வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. உணவுப் பழக்கத்தில் முன்னேற்றம், உடை அணிவதில் முன்னேற்றம், குடியிருப்புகளில் முன்னேற்றம், அறிவியல் வளர்ச்சி, மருத்துவ வளர்ச்சி, கல்வி வளர்ச்சி என்று பல்வேறு நிலைகளிலே நாம் வளர்ந்துகொண்டிருக்கிறோம். இந்த வளர்ச்சிக்கு இணையாக, இன்னும் ஒரு படி மேலே சொன்னால், வளர்ச்சிக்கு மேலும் வன்முறையும், தீவிரவாதமும் வளர்ந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அமைதிப் பூங்காவாக இருக்க வேண்டிய நம்முடைய தமிழகத்தில் வன்முறை, தீவிரவாதம்—இது இப்போது என்று நான் சொல்லவில்லை, தொடர்ந்து இளைஞர்கள், படித்துவிட்டு வேலையில்லாதவர்கள் இந்தக் கட்டத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். கடந்த காலங்களில் தமிழ்நாட்டிலே naxalites கூட உருவாயினர். ஆகவே, அப்படிப்பட்ட வன்முறையும், தீவிரவாதமும் கட்டாயம் வேரறுக்கப்பட வேண்டும். எந்த வகையிலும் தலைதூக்கவிடக் கூடாது. ஆகவே, அந்த வன்முறை, தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு நீங்கள் ஒரு தனி சிறப்புப் படையைக்கூட உருவாக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இது நான்

பொதுவாகச் சொன்ன கருத்து. ஆனால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்கு வருகின்றபோது, சிலர் இட்டுக்கட்டி, திட்டமிட்டுச் சொல்கிறார்கள்; "தமிழ்நாட்டில் வன்முறை வந்துவிட்டது; இங்கே சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது" என்று சொல்லக்கூடியது தொடர்ந்து வரக்கூடியது; இது அவதூறானது. அதைப் பற்றி நீங்கள் பொருட்படுத்தாதீர்கள். ஆக, அந்தப் பேச்சுக்கே தமிழகத்தில் இடமில்லை. இது இட்டுக்கட்டிச் சொல்லக்கூடிய வார்த்தையே தவிர, பொருத்தமான வார்த்தையாக இல்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, நம்முடைய நாட்டில் மிரட்டல் கடிதங்கள் வருகின்றன. மின் அஞ்சல்மூலமாக வருகிறது, e-mail மூலமாக; குடியரசுத் தலைவருக்கு; துறைமுகம், விமான நிலையம் ஆகியவற்றுக்கு; அரசியல் கட்சித் தலைவர்களுக்கு; சமீபத்திலே சேலம் பெரியார் பல்கலைக்கழகத்திலே உள்ள துணை வேந்தருக்கு; இப்படிப் பல்வேறு வழிகளிலே மிரட்டல் கடிதங்கள் வருகின்றன.

காவல் துறையிலே, தமிழ்நாட்டினுடைய காவலர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. உலக அளவில் பிரசித்திபெற்றவர்கள்; ஸ்காட்லாண்டு யார்டுக்கு இணை என்று சொல்கிறார்கள். அவர்களைவிட மேலானவர்கள். ஆகவே, அப்படிப்பட்ட திறமையான காவல் துறையினர் எப்படியாவது கண்டுபிடித்துவிடுகிறார்கள். கண்டுபிடித்துவிட்டால், அந்தக் குற்றம் செய்தவர்களுக்கு என்ன தண்டனை? இப்படி மிரட்டல் கடிதம் கொடுப்பவனைத் தண்டிப்பதற்கு இன்று இருக்கக்கூடிய நடைமுறைச் சட்டம் போதாது. இன்னும் கடுமையானதொரு சட்டத்தைக் கொண்டு வந்து, அவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும். அப்பொழுதுதான் தொடர்ந்து இந்த நிகழ்வு நடக்காது. அதற்கு நீங்கள் கடுமையான சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9–50*

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு ஆகவில்லை. இந்த ஓராண்டு காலத்திற்குள்ளாக, செயற்கரிய சாதனைகள்; நாட்டு மக்கள் பாராட்டக்கூடிய வகையிலே, இரண்டு ஏக்கர் நிலம், இரண்டு ரூபாய்க்கு அரிசி முதலாகப் பல்வேறு திட்டங்களை அறிவித்து, சாதனை படைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படி சாதனை படைத்துக்கொண்டிருக்கிற முதலமைச்சர் அவர்கள் மேலும் தமிழகத்தில் நிறைய சாதனைகளை நிகழ்த்த



வேண்டும். இந்தக் காவல் துறையிலே அரிய சாதனைகள் நடக்க வேண்டும் என்று நான் தோழமை உணர்வோடு சில வேண்டுகோள்களையும் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அந்த வேண்டுகோள் என்பது, தமிழ்நாட்டிலே கள்ளச் சாராயம், கஞ்சா, கந்து வட்டி, கள்ள நோட்டு, கட்டப் பஞ்சாயத்து, கற்பழிப்பு என்ற ஆறு "க". இந்த ஆறு "க"–க்களையும் காவல் துறை, கலைஞர் ஆட்சியில் கட்டாயம் ஒழிக்க வேண்டும். இந்த ஆறு "க"–க்களும் இருக்கவே கூடாது. இவை மிக மோசமானவை. இவற்றை ஒடுக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே மேட்டூர் அணை இருக்கிறது. மேட்டூர் அணைக்கு இதுவரை நிரந்தரப் பாதுகாப்பு இல்லை. கடந்த தொடரிலேகூட நான் இதைப் பற்றி வேண்டுகோள் விடுத்தேன். தற்காலிகமாகக் காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அங்கே மேட்டூர் அணை இருக்கிறது. மேட்டூர் அனல் மின் நிலையம், மேட்டூர் மின் திட்டம், கீழ் மேட்டூர் மின் திட்டம்போன்ற பாதுகாக்கப்பட வேண்டிய நிறைய இடங்கள் இருக்கின்றன. அதேபோல, இன்னும் கூடுதலாக இருக்கிற வகையில், மேட்டூருக்கும், ஒட்டுமொத்த சேலம் மாவட்டத்திற்குமாக இரண்டு காவல் படைகளை—இரண்டு பெட்டாலியன்களை—நீங்கள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சேலம் காவல் சரகம் உருவாக்கப்பட்டது 2000–த்திலே. இதுவரைக்கும் ஒரு நிரந்தரக் கட்டடம் இல்லை. மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கும் கட்டடம் இல்லாமல் இருக்கிறது. அதை நீங்கள் இந்த ஆண்டு நிறைவேற்றித் தர வேண்டும். எங்களுடைய மேட்டூர் தொகுதியிலேகூட அங்கே தாலுகா காவல் நிலையம், வெள்ளைக்காரன் காலத்துக் கட்டடமாகவே இருந்துகொண்டிருக்கிறது. அதை நீங்கள் கட்டித் தர வேண்டும். அதுபோல, கருமலைகூடல் காவல் நிலையம்; எங்கள் தொகுதியிலே அந்த இரண்டு காவல் நிலையக் கட்டடங்களுக்கு நீங்கள் கட்டடங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைய பத்திரிகையிலே பார்த்தோம்; அது 'தினத்தந்தி' செய்தித்தாள் அது கிராமத்திலே எல்லோரும் படிக்கக்கூடிய செய்தித்தாள். அது அரசுக்கு எதிரானதுகூட அல்ல. அரசுக்கு எதிராக

எழுதவில்லை. அதிலே பார்த்தீர்கள் என்றால், ஒரே நாள் செய்தித்தாளிலே, காவல் துறை பணியாற்றக்கூடிய விதத்தில், காவல் துறை பொறுப்பு ஏற்கக்கூடிய விதத்தில் 24 செய்திகள் வந்திருக்கின்றன. படித்துப் பார்த்தீர்கள் என்றால், காவல் துறையைக் குற்றம் சொல்லவில்லை. அவ்வளவு குற்ற நிகழ்வுகள் சென்னையிலே நடந்துகொண்டிருக்கின்றன. இது சென்னைப் பதிப்பு. அப்பொழுது தமிழ்நாடு முழுவதும் எவ்வளவு இருக்கும்? ஆகவே, ஒரு தரமான பத்திரிகை, உண்மைச் செய்திகளாக வெளியிட்டிருக்கிற இந்தக் குற்ற நடவடிக்கையிலே காவல் துறை சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறது. இதிலே வந்த செய்தியைப் பார்த்தீர்கள் என்றால், கண்டுபிடிக்கப்பட்டது, கைது செய்யப்பட்டது, நடவடிக்கை எடுக்கப்பட்டது, அப்படி என்று செய்திகள் எல்லாம் வந்திருக்கின்றன. 24 நிகழ்வுகளிலே காவல் துறையினர் செயல்பட்டிருக்கிறார்கள்.

நேற்று மாலைப் பத்திரிகையைப் பார்த்தீர்கள் என்றால்கூட, "தொழிலதிபரின் மனைவியைக் கட்டிப் போட்டு, ரூபாய் 25 இலட்சம் கொள்ளை, 6 மணி நேரத்தில் கொள்ளையர்கள் சிக்கினார்கள்." காவல் துறை சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறது. பீரோ புல்லிங் கொள்ளையர்கள் பிடிக்கப்பட்டார்கள். இப்படித் திறமையாகச் செயல்படக்கூடிய காவலர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்பட வேண்டும். பரிசுகள் வழங்கப்பட வேண்டும். 5, 10 சாதனைகள் பண்ணினார்கள் என்றால், அவர்களுக்குப் பதவி உயர்வு. அதையெல்லாம் நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது சென்னையிலும், தமிழ்நாட்டிலும் நடக்கக்கூடிய கொள்ளையைப் பார்த்தீர்கள் என்றால், அது பெரும்பாலும் வெளிமாநிலத்திலிருந்து வரக்கூடியவர்களால் நடத்தப்படுகிறது. நேற்றுக்கூட பீகாரிலே இருந்து வந்தார்கள் என்று சொல்கிறார்கள். அதை எப்படிக் கட்டுப்படுத்துவது? ஆகவே, அதை உடனடியாகக் கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கையில் காவல் துறை இறங்க வேண்டும் என்பதை நான் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மனித உரிமை மீறல் காவல் துறையிலே ஒரு சில இடங்களிலே இருந்துகொண்டுதான் இருக்கிறது. நாம் மறுக்கவும் முடியாது. நேற்று மாலைப் பத்திரிகையிலேகூட ஒரு செய்தி வந்திருக்கிறது. "அம்பத்தூர் இளைஞரை லாக்–அப்பில் அடித்து மனித உரிமை மீறல். எஸ்.ஐ., இன்ஸ்பெக்டரைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு." லாக்–அப்பிலே வைத்து அடித்தார்கள் என்று சொல்லி, நகரத்தில் விவரமானவன்தான் இப்படி நீதிமன்றத்திற்குப் போகிறான். கிராமப்புறத்திலே இருக்கிறவன்



போக முடியவில்லை. ஆகவே, இந்த மனித உரிமை மீறல் கட்டாயம் எங்கும் நடக்கக் கூடாது என்பதை நான் வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

அதுவும் தமிழ்நாட்டிலே பார்த்தீர்கள் என்றால், கடந்த ஆட்சிக் காலத்திலே வீரப்பன் தேடுதல் என்று சொன்னார்கள். அந்தத் தேடுதலில் செய்த கொடுமை உலகத்திலே வேறு எங்கேயுமே நடந்திருக்காது. அது கடந்த ஆட்சிக் காலத்தில்தான் நான் சொல்கிறேன். குற்றச்சாட்டுக்காக அல்ல. காவல் துறை அவ்வளவு அத்துமீறிச் செயல்பட்டார்கள். இலங்கையில் வேண்டுமென்றால் அப்படி நடக்கலாம். உலகத்தில் வேறு எங்கேயும் நடக்க முடியாது. அவ்வளவும் செய்தார்கள். ஆகவே, அப்படிப்பட்ட மனித உரிமை மீறல் நடக்கக் கூடாது. வீரப்பன் தேடுதல் என்ற பெயராலே நிறையப் பேர் பாதிக்கப்பட்டார்கள். உயிர் இழப்பு, மன நிலை பாதிப்பு, உடல்ரீதியான பாதிப்பு. அவர்களுக்கு சதாசிவம் ஆணையத்தின்மூலமாக நிவாரணம் வழங்கப்பட்டது. அந்த சதாசிவம் ஆணையத்தின்மூலமாக வழங்கப்பட்ட நிவாரணத்தைப் பெறுவதற்குப் பல பேர் முன்வரவில்லை. அங்கே போனால் மறுபடியும் காவல் துறை தொல்லை கொடுப்பார்கள் என்று பயந்துகொண்டு, நிறையப் பேர் போகவில்லை. ஆகவே, விடுபட்டவர்களுக்கு மீண்டும் அந்த ஆணையத்தின்மூலமாகவோ அல்லது வேறு ஒரு விசாரணை ஆணையத்தின்மூலமாகவோ நீங்கள் விசாரித்து, அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

அந்த வீரப்பன் தேடுதலில் காவல் துறையினருக்கு நிறையப் பதவி உயர்வு, நிறைய வெகுமதிகள், பரிசுகள் வழங்கப்பட்டன. நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. அப்படி ஒரு சிலருக்கு வழங்கிவிட்டு, அதிலே இன்னும் நிறையப் பேருக்கு வழங்கவில்லை என்று மிகப் பெரிய குற்றச்சாட்டு. இன்னும் சொல்கிறேன், ஒருவர் காவல் துறையில் பணியாற்றினார், அப்போது இருந்த ஓர் உயர் அதிகாரி, வேறு ஒருவரிடம் 25 ஆயிரம் ரூபாய் பணம் கொடு என்று சொன்னார், அவர் கொண்டு போய்க் கொடுத்தார். திருப்பி அவர் கேட்கவே இல்லை. 'ஏனய்யா பணம் வாங்கவில்லையா' என்று கேட்டார். இந்த ரூ.25 ஆயிரத்திற்கு 25 இலட்சம் பேச்சு, திட்டு உங்களிடம் வாங்க வேண்டுமா நான்? எதற்கு ரூ.25 ஆயிரம்? வேண்டாம் என்று விட்டுவிட்டேன் என்றார். உடனே அந்த உயர் அதிகாரி

சொல்கிறார், உன் தம்பியும் வீரப்பனுக்கு உதவி செய்திருக்கிறார் என்று சொன்னார். அந்த உயர் அதிகாரியினுடைய பேச்சைக் கேட்டு, தன்னுடைய உடன் பிறந்த தம்பியையே சுட்டுக் கொன்றான் அந்தக் காவலன். தம்பியைச் சுட்டுக் கொன்றான். அதற்குப் பின்னர், வீரப்பன் ஆட்களால் அவருக்குக் கை எல்லாம் ஒடிந்து போய்விட்டது. அவருக்குக்கூடப் பதவி உயர்வு இல்லை. இது என்ன அநீதி? இப்படி நிறையப் பேருக்குப் பதவி உயர்வு வழங்கப்படாமல் இருக்கிறது. அப்படி விடுபட்டவர்களுக்கும் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

சமீபத்திலேகூட உச்ச நீதிமன்றம் எல்லா மாநிலங்களுக்கும் ஒரு தாக்கீது அனுப்பி இருக்கிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் வாயிலாக, ஒரு பொது நல வழக்கிலே, எல்லா மாநிலங்களுக்கும் ஒரு தாக்கீது அனுப்பி இருக்கிறது. என்னவென்று சொன்னால், காவல் துறையில், தமிழ்நாடு உட்பட எல்லா மாநிலங்களும் 6 மாதத்திற்குள்ளாகச் சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும்; இப்போது 6 மாதங்கள் ஆகிவிட்டன, ஏன் சீர்திருத்தத்தை நீங்கள் கொண்டு வரவில்லை என்று கேட்டதாகத் தகவல். நம்முடைய தமிழ்நாட்டிலே இருந்து, அப்படிப்பட்ட சீர்திருத்தங்கள் தேவையில்லை; சீர்திருத்தங்களை நாங்களே செய்துகொள்கிறோம் என்று சொல்லியிருப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்தச் சீர்திருத்தங்கள் தேவையா அல்லது எப்படிப்பட்ட சீர்திருத்தங்களைச் செய்ய இருக்கிறோம் என்பதையும் அரசு அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, குடியரசுத் தலைவர் நேற்றுச் சொல்லியிருக்கிறார், பிரான்ஸ், கிரீஸ்போன்ற நாடுகளுக்குப் போகிற நேரத்திலே வானூர்தியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துச் சொல்லியிருக்கிறார். 'இங்கே ஊழல் அதிகரித்துக்கொண்டு இருக்கிறது; மகாத்மா காந்திபோன்ற உன்னதமான தலைவர்கள் பிறந்த இந்த நாட்டில் ஊழல்வாதிகளும் பிறக்கிறார்கள் என்பது மிகவும் வருத்தமாக உள்ளது' என்று குறிப்பிட்டுவிட்டு, 'ஊழல் இல்லாத நல்ல குடிமக்களை உருவாக்க வேண்டும்; மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் இந்தக் காலக்கட்டத்தில்' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே, ஊழல் எல்லா மட்டத்திலும் ஒழிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** ஊழலை ஒழிப்பதற்குக் காவல் துறை இன்னும் கடுமையாகப் பணியாற்ற வேண்டும் என்று நான் வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

நிலப் பிரச்சினையைப் பார்த்தீர்கள் என்றால், சென்னையும், சென்னையை ஒட்டியும் நிலப் பிரச்சினை பற்றிப் பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. 'இந்து' பத்திரிகையிலேகூட 'Man sells same land to 15 people. He collected Rs.1.95 crore.'—ஒரே ஆள் 15 பேருக்கு நிலத்தை விற்று இருக்கிறார். ஒரு கோடியே 95 இலட்சம். இது 'இந்து' பத்திரிகையிலே வந்த செய்தி. அதற்கு ஆதாரம்கூட என்னிடத்திலே இருக்கிறது. நேற்று ஒருவர் கோவிந்தன் என்பவர் அடிபட்டு, மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டு இருக்கிறார். 1989–லே அவருக்குத் தொடர் வண்டித் துறையிலே ஒதுக்கீடு செய்து, அங்கே கடன் வாங்கி, அந்தத் துறையே நிலம் வாங்கிக் கொடுத்திருக்கிறது. அந்த மனை எண் 219. அன்றைக்கு இருந்து பணம் வாங்கியிருக்கிறார். நீதிமன்றத்திலே இருக்கிறது. அது மாறி, மாறிப் போய்க்கொண்டே இருக்கிறது. ஆனால், இவருக்கு வரவில்லை. இவர் வழக்குப் போடுகிறார். நீதிமன்றத்திலே வெற்றிபெறுகிறார். காவல் துறை ஒத்துழைக்கவில்லை. நேற்றைக்கு அவர் அடிக்கப்பட்டு, இன்று மருத்துவமனையில் இருக்கிறார். அந்தப் படம் எல்லாம் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, இப்படி இந்த நிலக் கொள்ளையிலே ஈடுபடுபவர்களுக்கு சில காவல் துறை அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள். இந்தக் காவல் துறை அதிகாரிகளே கட்டப் பஞ்சாயத்தும் செய்கிறார்கள் என்ற நிலை எல்லாம் சொல்லப்படுகிறது. ஆகவே, அது தவிர்க்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். அப்புறம் Encounter death என்று சொல்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) நான் உரையை சீக்கிரம் முடித்துவிடுகிறேன். 5 நிமிடங்களில் பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் ஏற்கெனவே உங்களுக்கு நிறைய time கொடுத்திருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** அரசிற்குச் சொல்ல வேண்டிய ஆலோசனைகள். வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு நிறைய time கொடுத்துவிட்டேன்.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் ஒரு 5 நிமிடங்கள். இந்த encounter-லே பார்த்தீர்கள் என்றால், யார், யாரையோ சுட்டுக் கொல்கிறார்கள். வெங்கடேசப் பண்ணையார் எப்படிச் சுட்டுக் கொல்லப்பட்டார்? இரண்டு பேர்களுக்கும் துப்பாக்கிச் சண்டையா நடைபெற்றது? இல்லை. அதைப்போல, பங்க் குமார். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, 11–00 மணிக்கு C.M. உரையாற்றத் தொடங்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பங்க் குமாரை பெங்களூரிலே கைது செய்கிறார்கள்; F.I.R. அங்கே போடுகிறார்கள்; சென்னையிலே சுட்டுக் கொல்லப்படுகிறார். இவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளையும் நான் முன்வைக்க விரும்புகின்றேன். அதைப்போல நிறைய. போதைப் பொருள் தடுப்பு, கள்ளச் சாராயம், விபச்சாரம், இப்படியெல்லாம். பிறகு சென்னையிலே மட்டும்—என்னிடம் பட்டியலே இருக்கிறது. வேண்டுமென்றால், தருகிறேன். 20 சூதாட்ட மையங்கள் இன்றைக்கும் நடந்துகொண்டிருக்கின்றன. பெயர் வேண்டுமென்றால்கூடச் சொல்கிறேன். சங்கராச்சாரியாருக்குப் பணம் கொடுத்து நடந்தது, நான்கூட அந்த இடத்தில் இருந்தேன்; Sai Recreation Club இன்றைக்கும் நடந்துகொண்டிருக்கிறது. இது மாதிரி 20 மையங்கள் இருக்கின்றன. அதேபோல, கலாச்சார நடனம் என்று சொல்லி, Cabaret dance, ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்கிறது. இப்படி நிறையச் சொல்லிக்கொண்டே இருக்கலாம். இதையெல்லாம் மாற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்குச் சம்பளம் குறைவு. ஆகவே, அவர்களுக்குக் கூடுதலான சம்பளம் வழங்க வேண்டும்; வேண்டிய பாதுகாப்புக் கருவிகளையும் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, ஆயத்தீர்வை. மதுவிலக்கிலே எப்போதும் (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான். இதற்கு மேல் பேசவில்லை. இந்த மதுவிலக்கு ஆயத்தீர்வையிலே, எப்போதும் இல்லாத அளவிற்கு அரசுக்கு வருமானம் வந்துகொண்டிருக்கிறது. எவ்வளவு என்று சொன்னால், ஏறக்குறைய 7,431 கோடி ரூபாய். 2001–லிருந்து கணக்குப் போட்டீர்கள் என்றால், 183 விழுக்காடு கூடுதலாக வருமானம். இந்த வருமானம் யார் மூலம் வருகிறது என்றால், சாதாரண மக்கள்தான் டாஸ்மாக் கடைகளிலே குடிக்கிறார்கள்; ஆகவே, அவர்களை உறிஞ்சி வரக்கூடிய வருமானம். இந்த டாஸ்மாக் கடைகளை முழுமையாக உடனடியாக ஒழிக்கவில்லையென்று சொன்னாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படிப்படியாக ஒழிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தமிழ்நாட்டிலே கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 19; தனியார் சர்க்கரை ஆலைகள் 19; இவற்றிலே 2 மட்டும் சாராவி உற்பத்தி செய்கிறார்கள். யாரிடமோ வாங்குவதைவிட இந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்மூலமே உற்பத்தி செய்தால் ஆலையும் இன்னும் செழிப்பாக இருக்கும், மூடப்படாது, நட்டத்திலே இயங்காது; விவசாயிகளுக்கும் கரும்புக்கு இன்னும் கூடுதலாக விலை கிடைக்கும். ஆகவே, அந்த நிலையைத் தமிழக அரசு உருவாக்க வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்கிறேன்.

ஒட்டுமொத்தமாக நல்லாட்சி செய்துகொண்டிருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தக் குறைகளையெல்லாம் களைய வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, இன்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற, காவல் துறையிலே பணியாற்றக்கூடிய அத்தனை நிலைகளில் இருப்பவர்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும், நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மீண்டும் பாராட்டி, வாழ்த்துக் கூறி, அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன்மூர்த்தி, 10 நிமிடம் பேசுங்கள்.

***திரு. மு. ஜெகன்மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல், தீயணைப்பு மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த உலகத் தமிழினத்தின் ஒப்பாரும் மிக்காரும் அற்ற தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாவது

முறையாக முதலமைச்சராக அரியணையில் வீற்றிருக்கும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், தமிழக முதல்வர் அவர்களுக்கும், இளைஞர் பட்டாளத்தின் எழுச்சி நாயகனாக, வருங்காலத் தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்துகொண்டிருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சியில் நல்லாட்சி தந்துகொண்டிருக்கிற எங்கள் அண்ணன் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்காட்லாந்துக்கு நிகரான போலீஸ் தமிழக போலீஸ் என்பதுதான் பழைய நிலை. ஆனால், அறிவுக் கருவூலம், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் தலைமையிலான போலீஸ"க்கு நிகரானது ஸ்காட்லாந்து போலீஸ் என்று சொல்லப்படும் அளவுக்கு மாண்புமிகு முதல்வர் செயல்படுகிறார் என்று பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையில் வாகன வசதியை அதிகரித்து, Highway Patrol-ஐ அதிகரித்து, உடனுக்குடன் குற்றவாளிகளைக் கைது செய்து நடவடிக்கை எடுப்பதும், போலீஸாரைப் பார்த்தால், வெகுஜன விரோதியைப் பார்ப்பதுபோல் அல்லாமல், Police Commissioner, D.G.P., S.P., போன்ற உயர் அதிகாரிகளைக்கூட ஏழைக் கூலித் தொழிலாளி நேரில் பார்த்துப் புகார் மனு கொடுக்கும் நல்ல சூழ்நிலை உருவாகியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) போலீஸார் மக்களோடு மக்களாய்ப் பணியாற்றுவதும் முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சியில்தான்.

ஆதிக்க வெறியர்களின், சாதிய வெறியர்களின் கட்டுப்பாட்டுக்குள் கடந்த ஆட்சிக் காலத்தில் காவல் துறை இருந்தது. தற்பொழுதுதான் காவல் நிலையங்கள் ஜனநாயகத்தின் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கின்றன. இந்தப் போக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சியில் நல்ல மாற்றத்தைக் கொடுக்கும் என்று நம்புகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். மூடிக் கிடக்கின்ற P.C.R. Wing–களில், மனித உரிமைப் பாதுகாப்புப் பிரிவு மீண்டும் செயல்பட வேண்டும். அந்தக் காவல் ஆய்வாளரே I.O. அதிகாரியாகச் செயல்பட வேண்டும். சட்டம் ஒழுங்கு D.S.P., I.O. அதிகாரியாக இருக்கும்போது, அவர் மீண்டும் சம்பந்தப்பட்ட காவல் நிலைய S.I. அல்லது



அதிகாரியாக நியமிக்கிறார். Inspector-ஐத்தான் விசாரணை அதிகாரியாக நியமிக்கிறார். சம்பந்தப்பட்ட சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் உள்ள போலீஸார் வன்கொடுமைத் தடுப்புச் சட்ட வழக்குகளைச் சரியாகச் செயல்படுத்தமாட்டார்கள் என்றுதான் D.S.P. அந்தஸ்தில் அதிகாரிகள் உள்ளார்கள். மீண்டும் சம்பந்தப்பட்ட போலீஸாரையே அனுப்பினால், எதற்கு D.S.P. லெவல் I.O. அதிகாரி என்று பேசப்படுகிறது? ஆகையால், நீதி மறுக்கப்படுகிறது. ஆதி திராவிட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமை மறுக்கப்படுகிறது. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பயனற்றுப் போய்விடுகிறது. உடனடியாகக் கிடைக்க வேண்டிய நீதி மறுக்கப்படுகிறது.

தீண்டாமையை ஒழிப்பதற்கு, டீக்கடைகளில் இரட்டை டம்ளர் முறையை ஒழிப்பதற்கு, சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆன பின்னும், பொதுக் கிணறுகளில், குளங்களில் தண்ணீர் எடுப்பதற்கு, பொது ரோடுகளில் நடப்பதற்குக்கூட உரிமை மறுக்கப்பட்ட சமுதாயத்தை, ஊமை ஜனங்களை, அப்பாவி ஏழை மக்களை, பூர்வீகக் குடிகளை, ஆதி திராவிடர்களை வாழ வைக்க உங்களால்தான் முடியும். உங்களைவிட்டால் எங்களுக்கு யார் இருக்கிறார்கள்? வாழும் புரட்சியாளர் அம்பேத்கராக உங்களைப் பார்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) "மறுக்கப்பட்ட மதக் குளங்கள்" தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்க உங்களால்தான் முடியும்.

தீர்க்கப்படாத பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல்போன்ற ஊராட்சி மன்றங்களில் தேர்தலை நடத்திச் சிறப்பித்த மாண்புமிகு தளபதியாருக்குப் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிபெற்ற ஆதி திராவிட உள்ளாட்சிப் பிரதிநிதிகளைப் பணி செய்யவிடாமல் தடுக்கும் ஆதிக்க சமூகத்திடமிருந்து ஆதி திராவிட உள்ளாட்சிப் பிரதிநிதிகளைக் காப்பாற்றுங்கள். அவர்களுக்கு உரிய பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பணிவான கவனத்திற்கு. காவல் நிலையத்திற்குள்ளேயே பிள்ளையார்கள் உதயமாவதையும், குறிப்பிட்ட மதக் கடவுள்களின் போட்டோக்கள் மட்டும் வைக்கப்பட்டு, வழிபாடு நடத்தப்படுவதையும் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட அளவில் செயல்படுகிற ஆதி திராவிட நலக் குழுக்கள் தேநீர், பிஸ்கட் சாப்பிடும் குழுக்களாகத்தான் செயல்படுகின்றன. அந்தக்

குழுக்களுக்குப் பணிகளையும், கூடுதல் அதிகாரத்தையும் வழங்குமாறு பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

மாநில அளவில் போலீஸ் ஆதி திராவிட நலக் குழு அமைத்து, சாதிக் கலவரம் வரவிடாமல் தடுக்கும் "வருமுன் காப்போம்" திட்டம் அளித்து, அரசுக்குத் தகவல் தெரிவிக்கும் குழுவாகச் செயல்பட்டால், சாதிக் கலவரங்கள் வரவிடாமல் தடுக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தங்களின் பணிவான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன்கொடுமைத் தடுப்புச் சட்ட வழக்குகளில் விரைவாக நீதி கிடைக்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் தனி நீதிமன்றங்கள் அமைக்க வேண்டுமென்று மிகப் பணிவுடன் வேண்டுகிறேன்.

P.C.R. வழக்குகளில் உரிய தண்டனைபெற்றுத் தந்த காவல் அதிகாரிகளுக்கு promotion-ம், தவறிய காவல் அதிகாரிகளுக்கு உரிய நடவடிக்கையும் கிடைத்தால் மிகச் சரியாகச் செயல்படுவார்கள் என்கிற கருத்தை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு மிகப் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

பேரறிஞர் அண்ணாவின் தம்பியான நீங்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் விவாதங்களைக் கவனமுடன் கேட்கிறீர்கள். அவர்களுக்கு உரிய பதிலை நகைச்சுவையோடும், ஆதாரங்களோடும் சொல்லி ஜனநாயகத்தைக் காத்து வருகிறீர்கள். இங்கிலாந்து நாட்டின் நாடாளுமன்றத்தில் புகழ்க் கொடி நாட்டிய வின்ஸ்டன் சர்ச்சிலைப்போல, எட்மண்ட் பர்க்கைப் போல, சட்டமன்றத்தில் ஐம்பதாண்டு காலமாக முதலமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, உறுப்பினராக ஆற்றிய பணிகள் சட்டமன்ற ஜனநாயக வரலாற்றில் நிலைத்து நிற்கக்கூடிய அத்தியாயங்களாகும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஜனநாயகத்தைப் பற்றி "ஜனநாயகம் வீட்டு விளக்கு, சர்வாதிகாரம் காட்டுத் தீ" என்று குறிப்பிட்டார்கள். ஜனநாயகம் என்னும் வீட்டு விளக்கைக் காத்து வருபவர் நீங்கள்; சர்வாதிகாரம் என்னும் காட்டுத் தீயை ஜனநாயகம் என்னும் போர்வையைக் கொண்டு அணைத்தவர் நீங்கள். உங்களுக்குப் பொன் விழா; இந்தப் பொன் விழா ஜனநாயகத்திற்கு எடுக்கிற பொன் விழா; முத்தமிழுக்கு எடுக்கிற பொன் விழா. *(மேசையைத் தட்டும் ஒலி)*

முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களே, காவல் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்கிறதென்றால், நீங்கள்



ஆட்சியில் இருக்கிறபோதெல்லாம் காவலர்களின் பணிச் சிரமங்களை உணர்ந்து, அவர்களின் நலன் மற்றும் அதிகாரங்களைக் காத்து, அவர்கள் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டிட, கடமைகளை நிறைவேற்றிட, குற்றங்களைத் தடுத்திட, புலனாய்வு செய்திட, போக்குவரத்தைக் கட்டுப்படுத்திட, வேவுத் தகவலைச் சேகரித்திட, இவ்வாறு அனைத்தையும் ஆய்ந்து அறிக்கை தர, முதன்முதலாக திரு. கோபால்சாமி, I.C.S., அவர்கள் தலைமையில் Police Commission அமைத்தீர்கள். அந்தக் குழுவின் பரிந்துரைகள் 133–ல் 115 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தந்தீர்கள். மீண்டும் 1989 ஆம் ஆண்டு சபாநாயகம், I.A.S., அவர்கள் தலைமையில் இரண்டாவது Police Commission அமைத்து, அந்தக் குழுவின் பரிந்துரைகள் 112–ல் 87 பரிந்துரைகளை நிறைவேற்றித் தந்துள்ளீர்கள்.

*முற்பகல் 10–10*

1969 ஆம் ஆண்டு முதல் அண்ணா பதக்கம் வழங்கி, காவல் துறையிலே சிறப்பாகப் பணியாற்றியவர்களைக் கௌரவப்படுத்தி வருகிறீர்கள். 1974 ஆம் ஆண்டு வரை காவலர்கள் அணிந்திருந்த அரைக்கால் சட்டையை முழுக்கால் சட்டையாக மாற்றிட ஆணை வழங்கியவர்கள் நீங்கள்.

தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களையும் இம்மியளவும் பிசகாமல் நிறைவேற்றி வருகிற தலைவர் என்பதால், பெண்களின் உரிமைகளைக் காப்பதிலே, அவர்களின் வளர்ச்சியினைக் கண்டு மகிழ்ச்சிகொள்ளும் வகையிலே மகளிருக்கான எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றித் தந்தவர் நீங்கள்தான். 1973 ஆம் ஆண்டு முதன்முதலாக மகளிரைக் காவல் துறையிலே சேர்ப்பதற்கான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆணையைப் பிறப்பித்து நிறைவேற்றித் தந்தீர்கள். இப்போது மீண்டும் மூன்றாவது Police Commission-ஐ திரு. பூர்ணலிங்கம், ஓய்வுபெற்ற I.A.S., அதிகாரி அவர்கள் தலைமையில் அமைத்து, காவல் துறையினருக்குப் பல்வேறு சலுகைகளை வழங்க இருக்கிறீர்கள்.

இந்த வேளையில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எல்லோரையும் குற்றம் சாட்டவில்லை. Scotland Yard Police-க்கு இணையானவர்கள், திறமையானவர்கள் நமது காவல் துறையினர். ஆனால், இந்தக் காவல் துறையில் உள்ள மிகச் சிலர் மனசாட்சியை விற்று விட்டார்களோ? 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் நாள் காலை சுமார் 5–00 மணி அளவிலே, பொய் வழக்கு ஜோடிக்கப்பட்டு, நள்ளிரவிலே

உச்ச நீதிமன்ற வழிகாட்டு நெறிமுறைகளுக்கு எதிராக, இரும்பு இதயத்தோடு, மூர்க்கத்தனமாக, கொடூரமாக நடந்துகொண்டார்களே! என்னைப்போன்ற தங்கள்மீது பற்றுக்கொண்டவர்களின் நெஞ்சங்களிலே ஈட்டி பாய்ந்ததைப்போலப் பதறினோம், துடித்தோம். உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்களும், பிற மாநிலத்தவர்கள் எல்லாரும், சண்டாளர்களின் ஆட்சியிலே காவல் துறையைத் தூண்டிவிட்டு, நிர்பந்தப்படுத்தி, அவர்களைக் கைப்பாவையாக வைத்துக்கொண்டு, நான்கு முறை முதல்வராக இருந்த, தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சியில், ஊனாய், உயிராய், சுவாசமாய் இருந்திடும் இம்மாமனிதருக்கா இவ்வளவு கொடுமைகள் என வேதனையில், சோகத்தில் மூழ்கியிருந்ததை எண்ணிப் பார்க்கிறேன்.

அண்ணன் தளபதியார் அவர்கள் மதுரை சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர்மீது உண்மைக்கு மாறான வழக்குகள் போடப்பட்டன. எய்தவர்கள் இருக்க அம்பை நோவானேன் என்று எண்ணலாம். ஆனால், காவல் துறையிலே மனசாட்சியில்லாத கல் நெஞ்சமுடையவர்களாகச் சிலர் இருந்ததுதான் எங்களுக்கெல்லாம் வேதனை. 'பகைவர்க்கும் அருள்வாய்' என்கிற வரிக்கேற்ப, ஏசுபிரானாக, புத்தராக, ஜனநாயகத்தின் காவலராக வலம் வருகிற உங்களுக்கு மிகப் பெரிய விசாலமான மனமிருக்கிறது.

அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, காவல் துறை உள்ளிட்ட பல துறைகளில் பணி நியமனம் என்கின்ற பெயரில் பல்லாயிரக்கணக்கானவர்களைத் தங்களின் விருப்பம்போலத் தேர்வு செய்துவிட்டு, பணி வழங்காமல், ஆட்சியைவிட்டு இறங்கியபோது, தேர்வு செய்யப்பட்டவர்களும் தமிழர்கள்தான்; அவர்களைக் காப்பாற்ற வேண்டியது எனது கடமையென்று கூறி, அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, தி.மு.க. ஆட்சியில் பணி வழங்கிப் பணியாற்றிக்கொண்டிருந்த மக்கள் நலப் பணியாளர்கள், சாலைப் பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பிப் பழிவாங்கியதைப்போல் அல்லாமல், அண்ணா தி.மு.க. ஆட்சியில் நியமனம் செய்தவர்களுக்கெல்லாம் பணி வழங்கினீர்கள், நிரந்தரப்படுத்தினீர்கள்; அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தீர்கள் என்பது, நீங்கள் மனித நேயம் மிக்க, தமிழ்ச் சமுதாயத்தின்மீது அக்கறைகொண்ட தலைவர் என்பதற்கு எடுத்துக்காட்டு.

இந்த நிதியாண்டில் காவல் துறைக்கு 2,136 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்தீர்கள். முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களே, தங்களின் மேலான பரிசீலனைக்குச் சில கோரிக்கைகளை வைக்கிறேன். ஆதி திராவிட



மற்றும் பழங்குடியின இளைஞர்கள் மிகவும் கஷ்டப்பட்டு, படித்துப் பட்டம்பெற்று பல்லாயிரக்கணக்கானோர் வேலையின்றித் தவிக்கிறார்கள். 48 வயதாகியும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு, இளமையைத் தொலைத்துவிட்டு அலைகிறார்கள். ஆனால், ஒவ்வொரு துறையிலும் பின்னடைவுப் பணியிடங்கள் பல ஆயிரம் இருக்கின்றன.

குறிப்பாக, பால் வளத் துறையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில், 18,750 பின்னடைவுப் பணியிடங்கள் காலியாக உள்ளன. வீட்டு வசதித் துறையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில், 6,550 பின்னடைவுப் பணியிடங்கள் உள்ளன. கைத்தறித் துறையின்கீழ் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பின்னடைவுப் பணியிடங்கள் உள்ளன. இதுபோன்று பல்வேறு துறைகளில் பின்னடைவுப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் உடனடியாக நிரப்புவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 5 ஆண்டு கால ஆட்சி, உலக வரலாற்றில். . .

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெகன்மூர்த்தி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. மு. ஜெகன்மூர்த்தி:** பொன் ஏட்டில் பொறிக்கப்பட வேண்டிய ஆட்சியாக நடத்திக்கொண்டிருக்கிற, ஒடுக்கப்பட்ட மக்களின் உயிர் நாடியாய், தமிழாய் வாழ்ந்துகொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பாதம்தொட்டு வணங்கி, நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்குத் தாயாய், தந்தையாய், எங்களை விட்டுச் சென்ற எங்கள் அண்ணன் பூவை மூர்த்தியாய் வழிநடத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, சேலம் மாவட்டம், மேட்டூர் உட்கோட்டத்தில் 10–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. அடிக்கடித் தொழிலாளர்கள் பிரச்சினை, ஊர்வலம் மற்றும் உண்ணாவிரதம்போன்றவற்றிற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு)

**திரு. மு. ஜெகன்மூர்த்தி:** கூடுதல் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய நிலை உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெகன்மூர்த்தி, உட்காருங்கள்.

**திரு. மு. ஜெகன்மூர்த்தி:** மேட்டூர் அணை நீர் மின் திட்டத்திற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்) ஜெகன்மூர்த்தி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. மு. ஜெகன்மூர்த்தி:** வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, உள் துறை, ஆயத்தீர்வை மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகள்மீது காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக என்னுடைய கருத்துகளை இங்கே வழங்குவதற்காக நேரம் ஒதுக்கித் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறை தமிழகத்திலே மிகவும் சிறப்பு வாய்ந்த துறை என்பது யாரும் மறுக்க முடியாத ஒன்று. இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற காவல் துறை, தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு மக்களைக் கட்டிக் காக்கின்ற பணியை அவர்கள் பெற்றிருந்தாலும்கூட, 'மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் அடி' என்று சொல்வார்கள். அதுபோன்று, ஒரு கட்சி ஆளுகின்றபோது, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் காவல் துறையைப் புகழ்வதும், அந்தக் கட்சி ஆட்சி மாறியவுடனே, அதே காவல் துறையை இழிவாகப் பேசுவதும் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிகழ்ச்சி. ஆயிரக்கணக்கான காவலர்கள் தங்கள் குடும்பங்களைக் கவனிப்பதற்கு நேரமில்லாமல், மக்களுடைய பணியைச் செய்துகொண்டே இருக்கிறார்கள். இரவு, பகல் பாராமல், அவர்கள் மக்களுடைய பணிகளைச் செய்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், தங்களுடைய குழந்தைகளின் வளமான வாழ்க்கைக்கு அவர்களாலே எந்தவிதமான முயற்சியும் எடுக்க முடியாத ஒரு பரிதாபகரமான சூழ்நிலை காவலர்களுடைய இல்லங்களிலே இன்றைக்கு இருக்கிறது. ஆனால், அந்தக் காவல் துறையிலே இருக்கின்ற ஒரு சில பேர் செய்கின்ற தவறுகளின் காரணமாக, மொத்தக் காவல் துறையையும் இன்றைக்குக் குறை சொல்லக்கூடிய ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது.



காவல் துறை என்பது ஒரு மிகப் பெரிய, அழகான குதிரை. அந்தக் குதிரையின்மீது சவாரி செய்கின்றவர்கள் ஒழுங்காகச் சவாரி செய்வார்களேயானால், அந்தக் குதிரை நல்ல முறையிலே போய்க்கொண்டிருக்கும். ஆனால், அந்தக் குதிரையின்மீது சவாரி செய்கின்றவர்கள் சரியான முறையிலே அந்தக் குதிரையை வழிநடத்தாவிட்டால் அந்தக் குதிரை தறிகெட்டு ஓடக்கூடிய ஒரு நிலை ஏற்படும். நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் அந்தக் குதிரையின்மீது சரியான முறையிலே சவாரி செய்துகொண்டு, இன்றைக்குத் தமிழகத்திலே ஒரு நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிறார் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

இன்றைக்கு ஒரு வளமையான தமிழகம், வலிமையான பாரதம் வேண்டுமென்று நாமெல்லாம் விரும்புகிறோம். பல்வேறு தொழிற்சாலைகள் இன்றைக்குத் தமிழகத்தை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன. எந்தக் காரணத்திற்காக அவை வந்துகொண்டிருக்கின்றன? இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் இருந்தாலும், தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு நன்றாகவே இருக்கிறது. தொழிற்சாலைகளுக்குப் போட்ட மூலதனம் ஒழுங்காகத் திரும்பி வரும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது. இங்கே தொழில் அமைதி இருக்கிறது. காவல் துறையிலே இங்கே இருக்கின்ற காவல் துறை நண்பர்கள் நல்ல பாதுகாப்புக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால், இந்தக் காவல் துறையை நம்பி, இந்த அரசை நம்பி, அதிலும் நம்முடைய தமிழக முதல்வரை நம்பி இன்றைக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய்களை மூலதனம் செய்து தொழிற்சாலைகளைத் தொடங்குகிறார்கள். அந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய அத்தனை பொருட்களுக்குத் தேவைப்படுகின்ற [illegible] அளித்துக் காக்கின்ற பொறுப்பு இந்த அரசுக்கும், அவர்களுக்கும் உண்டு.

முற்பகல் 10-20

அதேபோன்று, காவலர்கள் இந்த அரசினுடைய சேவகர்களாகப் பயன்படுத்தப்பட்ட காலங்கள் எல்லாம் உண்டு. அது எந்தக் காலம் என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. காலங்கள் உண்டு; பொய் வழக்குகள் போட்ட காலங்கள் உண்டு; கஞ்சா வழக்குகள் போட்ட காலங்கள் உண்டு; இரவோடு இரவாகத் தலைவர்களைக் கைது செய்த காலமும் உண்டு. இப்படிப் பல்வேறுபட்ட நிலைகள் மாறி, கடந்த 11 மாத காலத்தில் தமிழகத்திலே எந்த மிகப் பெரிய குற்றங்களும் நடைபெறவில்லை. தமிழகத்திலே எந்தவிதமான ஜாதிச் சண்டையும்

ஏற்படவில்லை. தமிழகத்திலே எங்கும் கோஷ்டி மோதல்கள் இல்லை. தமிழகத்திலே எங்கும் எந்தவிதமான மிகப் பெரிய பிரச்சினையும் இல்லை. ஓர் அமைதிப் பூங்காவாகத் தமிழகம் 11 மாத காலமாகத் திகழ்கிறது என்பதிலே யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்திலே, தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு நிலைகளில் நாம் கவனித்துப் பார்க்க வேண்டிய ஒரு செயல். அந்தப் பல்வேறு நிலைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில், காங்கிரஸ் பேரியக்கத்தைப் பொறுத்தவரை அமரர் ராஜீவ் காந்தியை இந்த மண்ணிலே நாங்கள் இழந்திருக்கிறோம். அமரர் ராஜீவ் காந்தியை இந்த மண்ணிலே இழந்திருக்கிற காரணத்தினால் L.T.T.E. பிரச்சினையிலே எங்களுக்கு ஒரு மாறாத வடு எங்கள் உள்ளத்திலே இருக்கிறது என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக்க வேண்டுமென்பது, எனக்கும், நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் உள்ள ஆசை. ஆனால், ஒரு சில சம்பவங்கள் ஒரு சிலரால் பெரிதுபடுத்தப்படுகின்ற நேரத்தில், மடுவை மலையாக்குவதன்மூலம் தமிழகத்தில் குழப்பம் மூள்வதோடு மட்டுமல்லாமல், அந்தக் குழப்பத்திலே மீன் பிடிக்கத் தீவிரவாத அமைப்புகள் காத்துக்கொண்டிருப்பதை நாம் கவனத்திலேகொள்ள வேண்டும். பட்டாசுச் சத்தத்தைக் கேட்டுவிட்டு, வெடிகுண்டு வெடித்துவிட்டது என்று மக்களைத் திசை திருப்ப ஒரு சிலர் முயற்சித்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணமாக, சமீபத்திலே செண்டூர் கிராமத்திலே ஜெலட்டின் விபத்தை R.D.X. விபத்து எனக் கூக்குரலிடுகின்ற வாய்ப்பை இனி நாம் யாருக்கும் ஏற்படுத்திவிடக் கூடாது. இலங்கை வாழ் தமிழர்கள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார் அல்லவா? குறுக்கே, குறுக்கே பேசக் கூடாது.

**திரு. டி. சுதர்சனம்:** இலங்கை வாழ் தமிழர்கள் அமைதியான, வளமான வாழ்க்கையை அவர்கள் மண்ணிலே, அனைத்து மனித உரிமைகளையும் பெற்று வாழ வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசை. ஆனால், அதற்காக வேண்டி, நமது நாட்டின் பாதுகாப்போ அல்லது தமிழகத்தின் அமைதியோ பாதிக்கப்படக் கூடாது. சமீப காலத்திலே தமிழகத்தில் பல்வேறு சம்பவங்களில், பல அபாயகரமான ஆயுதங்கள் தயாரிக்கப் பயன்படுத்தக்கூடிய வெடிபொருட்கள் காவல் துறை மற்றும் கடற்கரைப் பாதுகாப்புப் படையினர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. காவல் துறை மிக நன்றாகவே அவர்களுடைய



பணியைச் செய்திருக்கிறார்கள். சுமார் 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள தமிழகக் கடற்கரைச் சாலையின் பாதுகாப்பு மிக, மிக அவசியமானது. இந்தக் கடற்கரைப் பகுதி சரியான முறையிலே பாதுகாக்கப்பட்டால் மட்டுமே தீவிரவாதிகளின் ஊடுருவல்கள் மற்றும் தமிழகத்திலே இருந்து அபாயகரமான பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க முடியும்.

தூத்துக்குடிக்கும், இராமேசுவரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் கடலில் 20–க்கும் மேற்பட்ட ஆள் இல்லாச் சிறு தீவுகள் அமைந்துள்ளன. இலங்கையிலேயிருந்து அகதிகளை ஏற்றிக்கொண்டு வருகின்ற படகுகள் மணல் திட்டுக்களிலும், ஆள் இல்லாச் சிறு தீவுகளிலும் அகதிகளை இறக்கிவிடுவதற்கும், தமிழகக் கடற்பகுதியிலிருந்து கடத்தல்காரர்களால் கடத்திச் செல்லப்படுகின்ற கடத்தல் பொருட்களை, அகதிகளை ஏற்றி வந்த படகுகளிலே இந்தப் பகுதியிலேயிருந்து ஏற்றிக்கொண்டு இலங்கைக்கும், மற்றும் நடுக்கடலிலே நின்றுகொண்டிருக்கும் மேற்கு நாடுகளுக்குச் செல்லக்கூடிய கப்பல்களுக்கும் கடத்திச் செல்கின்ற பணியிலே ஈடுபட்டு வருகின்றனர். இராமநாதபுரம் மாவட்டத்திலே மட்டும் கடற்கரையின் நீளம் சுமார் 271 கிலோ மீட்டர். இதிலே 17 இடங்களிலே மீன்பிடிப் படகுத் துறைகள் அமைந்துள்ளன. இந்தக் கடற்பகுதியிலே உள்ள படகுத் துறைகளை ஏறத்தாழ 1 இலட்சத்து 24 ஆயிரம் மீனவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த மீனவர்களால் சுமார் 8,403 நாட்டுப் படகுகளும், 2,861 விசைப் படகுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் படகுகளில் ஒரு சதவிகிதத்திற்கும் அதிகமான படகுகள் கடத்தல்காரர்களால் கடத்தல் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கடத்தல் பணிக்குத் தேவையான ஆட்களாக அதிக அளவிலே கடத்தல்காரர்களுக்குக் கிடைப்பது, இலங்கை அகதிகள் முகாமிலே உள்ள இலங்கை அகதிகள் ஆவார்கள். ஏனெனில், அவர்கள் தமிழகக் கடற்கரையைப் பற்றியும், இலங்கைக் கடற்கரையைப் பற்றியும் நன்கு அறிந்தவர்கள் என்பதும் ஒரு காரணம். இன்றைக்குப் பல்வேறு உலக நாடுகளிலே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட இயக்கமாக உள்ளது. எனவே, அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களைப் பெறுவதிலே சிக்கலும், சிரமமும், நிதி நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்தியத் துணைக் கண்டத்திலேயிருந்து தேவையான பொருட்களைக் கடத்திச் செல்கின்றார்கள்.

(முற்பகல் 10–25)

சமீப காலமாகத் தமிழகம், ஆந்திரம் மற்றும் மகாராஷ்டிரம்போன்ற மாநிலங்களிலிருந்து இரும்புக் குண்டுகள், அலுமினிய வார்ப்புகளாகவே

கடத்தப்பட்டு, அவை மிகப் பெரிய அளவிலே தமிழகப் போலீஸாரால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமின்றி, பேராபத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள், தளவாடங்களைத் தயாரிப்பதற்குப் பயன்படும் இயந்திரங்கள் தமிழகக் காவல் துறையினராலே கைப்பற்றப்பட்டிருக்கின்றன. கடற்பகுதியிலே மிக அதிக அளவிலே அபாயகரமான பொருட்கள் இலங்கைக்குக் கடத்தப்படுகின்ற நிலையில், அவற்றை நடுக்கடலிலேயும் தமிழக போலீஸார் கைப்பற்றியிருக்கிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் இனியும் தமிழகத்தில் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது அரசினுடைய கடமையாகும். நிச்சயமாகத் தமிழக முதலமைச்சர் அவர்கள் இதற்குத் தேவையான தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்; இனியும் எடுப்பார் என்பதிலே எங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இவ்வாறு தீவிரவாதிகள் வளர்வதற்கு தமிழகத்தில் என்றென்றும் இடம் தந்துவிடாமல், கடுமையான நடவடிக்கையின்மூலம், திறமையாகச் செயல்படுகின்ற கடத்தல்காரர்களை விரட்டுவதற்கு அரசு மிகுந்த திறமையான திட்டங்களைத் தீட்ட வேண்டியது அவசியம்.

ஆந்திரம், மகாராஷ்டிரம் மற்றும் தமிழகத்தின் பல பகுதிகளிலே கடத்தலுக்காகப் பல அபாயகரமான பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. அவ்வாறு கடத்தல் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் தமிழகக் கடற்கரையிலிருந்து வெகுதூரத்திலே அமைந்துள்ளன. அவ்வாறு தயாரிக்கப்படும் அபாயகரமான பொருட்கள் பல நூறு சோதனைச் சாவடிகளைக் கடந்து, தமிழகக் கடற்பகுதியை எப்படிச் சென்றடைந்தன என்பது மர்மமாகவே உள்ளது. எனவே, தமிழகத்தில் நடைபெற்று வருகின்ற இந்தக் கடத்தலுக்கும், கடத்தல்காரர்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது; இனியும் இதைத் தீவிரமாகக் கண்காணித்து, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பணிவான வேண்டுகோளை நான் இங்கே பதிவு செய்ய விழைகிறேன்.

நமது கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட பத்தி 15-ல் இருந்து 24 வரை, தமிழ்நாட்டிலே சட்டம்-ஒழுங்கை நிலைநாட்ட அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி விவரமாகக் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக, பத்தி 21 முதல் 24 வரை தீவிரவாதிகளைப் பற்றியும், தீவிரவாதிகளின் ஆயுதக் கடத்தல் பற்றியும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதத் தளவாடங்கள் பற்றியும், கைது செய்யப்பட்ட



தீவிரவாதிகளுக்கு உதவியவர்களைப் பற்றியும் விரிவாக அரசு எடுத்துக் கூறியுள்ளது. நக்சலைட் தீவிரவாதிகள், தமிழகத்திலேயிருந்து ஆயுதங்களை இலங்கைக்குக் கடத்துபவர்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைக்குக்கூட காலையிலே நம்முடைய தமிழகக் காவல் துறையினராலே, மண்டபம் அகதிகள் முகாமிற்குப் பின்புறப் பகுதியிலே இருக்கின்ற ஓர் இடத்தில், தெர்மாகோல் அட்டைப் பெட்டி பிடிபட்டிருக்கிறது. உடனே அவர்கள் அதைத் திறந்து பார்த்ததில், வெடிகுண்டுகள் இருப்பதைப் பார்த்து, போலீஸுக்குத் தகவல் சொல்ல, மாவட்ட எஸ்.பி. திருஞானம் தலைமையில் சோதனையிட்டபோது, அதில் மனித வெடிகுண்டுகள் தயாரிப்பதற்குப் பயன்படக்கூடிய வெடிபொருட்கள் அடங்கியிருந்ததைக் கண்டுபிடித்தனர். இந்த அதிர்ச்சி மிக்க செய்தி கடற்படையினருக்கும், ஏனைய பாதுகாப்புத் துறையினருக்கும் அதிர்ச்சியைத் தந்தது. இராமநாதபுரம் கடற்கரையில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு மக்கள் நடமாட்டம் போலீஸாரால் தடை செய்யப்பட்டுள்ளது, போலீஸின் கருத்துப்படி. இதை அகதிகள் முகாமிற்குப் பின்புறமுள்ள படகுத் துறையிலிருந்து கடத்திச் செல்வதற்கு முயன்ற நேரத்தில் பெட்டி கடலிலே விழுந்திருக்கலாம் அல்லது இலங்கையிலிருந்து கடத்தி வரப்பெற்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இப்படி, இந்தக் காவல் துறையிலே பல்வேறுபட்ட நிலைகள். இந்தத் தீவிரவாத இயக்கங்கள் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தீவிரக் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதிலே எங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. தீவிரக் கவனம் செலுத்தப்படுகின்ற இதே நேரத்தில், ஏமாற்றுகின்றவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஏமாற்றுகின்றவர்கள் நிறையப் பேர் இருக்கின்ற காரணத்தினால், நாம் ஏமாந்து போய்விடாமல்—நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் ஏமாந்துவிடமாட்டார்கள் என்று காங்கிரஸ் பேரியக்கம் நம்புகிறது. அதனாலே, அவர்கள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற என் பணிவான வேண்டுகோளை உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–30

புறநகர்ப் பகுதியிலே தொடர்ந்து சில இடங்களில் கிரில் கொள்ளையர்கள் கொள்ளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்றைக்குக்கூட ஒரு சகோதரி தனியாக இருந்த வீட்டிலே, ரூ.25 இலட்சம் பெறுமானமுள்ள நகைகள் கொள்ளையடிக்கப்பட்டு, நம்முடைய காவல் துறையினுடைய சிறப்பான பணியின் காரணமாக அந்தக் கொள்ளையர்கள் ஆறு மணி நேரத்திலே பிடிபட்டிருக்கிறார்கள். இப்படி ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலையை நாம் இன்னும் சற்றுக் கவனமாகப் பார்த்து, புறநகர்ப் பகுதிகளிலேயும் கொண்டு வர வேண்டும். குற்றம் செய்துவிட்டு, புறநகர்ப் பகுதிகளிலே போய்த் தங்கிவிடுகிறார்கள். அங்கே இருக்கிறவர்களின் வீடுகளைக் கண்காணித்து அங்கே கொள்ளையடிக்க முயற்சிக்கிறார்கள். வேறு ஆள் இல்லாத வீட்டிலே சகோதரிகள் தனியாக இருக்கின்ற நேரத்திலே இப்படிப்பட்ட கொள்ளைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் கலந்துவிட்டால் பாலின் நிலை என்ன என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அதேபோல, சில உயர் போலீஸ் அதிகாரிகள், ஐ.பி.எஸ். அதிகாரிகளின் நடவடிக்கை ஒரு துளி விஷத்தை ஒத்திருக்கிறது. ஒரு சில மாதங்களுக்கு முன் குற்றாலத்திலே ஓர் உயர் போலீஸ் அதிகாரி குடிபோதையிலே, பொது இடத்திலே, பொது மக்கள் முன்னிலையிலே, அனைவரும் முகம் சுளிக்கின்ற வகையிலே நடந்துகொண்ட நடவடிக்கை இருந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இத்தகைய நிகழ்ச்சிகளால் மக்கள் மத்தியிலே காவல் துறைக்கே ஒரு மரியாதைக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வாகனங்கள், காவல் துறைக்கு மட்டுமே பயன்பட வேண்டுமே தவிர, அவர்களுடைய சொந்த உபயோகத்திற்குப் பல உயர் அதிகாரிகள் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு காவல் துறையிலே இருக்கின்ற உயர் அதிகாரிகளுக்கு உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டிலே இன்றைக்குப் பெண் காவலர்கள் அதிகமாகவே இருக்கிறார்கள். அவர்களுக்கு Pant, Shirt கொடுக்கப்படுகிறது. கர்நாடகா மாநிலத்திலும், ஆந்திரா மாநிலத்திலும் பெண் காவலர்களுக்குப் புடவை கொடுக்கிறார்கள். அதேபோன்று பெண் காவலர்களுக்குச் சீருடை வழங்குகின்ற பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தாய்மார்கள்மீது அதிகமான பாசம் கொண்டவர்கள். பெண் காவலர்களுக்கு உடலிலே இப்படிப்பட்ட Pant, Shirt போட்டுக்கொண்டிருப்பது அவ்வளவு எளிதான காரியமாகத் தெரியவில்லை. அதனாலே, ஆந்திரா மாநிலத்தில் இருப்பதுபோன்றும், கர்நாடகா மாநிலத்திலே இருப்பதுபோன்றும் அந்தப் பெண் காவலர்களையும் கலந்து பேசி, அவர்களுக்கு ஒரு சீருடை வழங்க வேண்டும் என்பதை நான் இந்த நல்ல நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



போக்குவரத்து விபத்துக்கள் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கின்றன. அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு நிறையவே இருக்கிறது. போக்குவரத்துக் காவலர்கள் திறமையானவர்களாக இருந்தும், அந்த விபத்துக்களைத் தடுப்பதற்கு முயற்சிகள் எடுத்தும், அது முடியாத ஒரு நிலை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காவலர்கள் விபத்துப் பகுதிக்கு விரைவாகச் செல்வது இல்லை. மாநகரிலே பல சிக்னல்களில் முதல் உதவிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தும், அவற்றில் எந்தவிதமான முதல் உதவி மருந்துகளும் இல்லை. உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் காவலர்கள் வாகன ஓட்டிகளை ஒழுங்குபடுத்துகின்ற பணியை விட்டுவிட்டு, வாகனங்களை ஓரங்கட்டச் சொல்லியும், சில நேரங்களிலே நடுரோட்டிலேயே வண்டியை நிறுத்தியும் பணம் வசூலிக்கும் செயலைப் பல்வேறு பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன. அதை நீங்கள் கவனத்திலேகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் வெடிகுண்டு விபத்திலே இறந்தபோது, கிண்டி மகளிர் காவல் நிலையத்திலே ஆய்வாளராகப் பணிபுரிந்த திருமதி அனுசூயா குண்டு வெடிப்பில் தன் கையில் மூன்று விரல்களையும் இழந்து, இன்று வரைக்கும் மருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார், அவருக்கு மாநில அரசால் கொடுக்கப்பட்ட எந்த நிவாரணமோ, சலுகையோ இதுவரைக்கும் கிடைக்கவில்லை. நான்கு ஆண்டுகள் கழித்து, சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் திரு. டி.ஆர். கார்த்திகேயன் அவர்களால் ரூ.95 ஆயிரம் கொடுக்கப்பட்டது. ஆனால், உயிரைப் பணயம் வைத்து, காவல் துறையிலே சிறப்பாகச் செயலாற்றிய அந்த அம்மையாருக்குப் பதவி உயர்வு அளிக்கப்பட வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–35

அதேபோன்று, தமிழகக் காவல் துறையில் கூடுதல் கண்காணிப்பாளர் பணியிடங்களை மற்ற பல பதவிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகக் குறைவாக இருக்கின்றது. டி.ஐ.ஜி. பதவிகள் 60 இருக்கின்றன. எஸ்.பி. பதவிகள் 150 இருக்கின்றன. கூடுதல் கண்காணிப்பாளர் பதவிகள் 85 மட்டும்தான் உள்ளன. ஆனால் இந்தப் பதவிக் கிரமப்படி, 200 பதவிகள் இருக்க வேண்டும். மற்ற பதவிகள் அனைத்தும் காலப்போக்கில் உயர்த்தப்பட்டபோது, ஏ.டி.எஸ்.பி. பதவி மட்டும் கடந்த 15 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் அப்படியே உள்ளது. இதனால் பதவி உயர்வில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்ற எனது வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவலர்களுக்குத் தற்போது இருக்கும் உணவுப் படி ரூ.80/–லிருந்து ரூ.150 ஆக உயர்த்தப்பட வேண்டும். தற்போது இருக்கும் இடர்ப் படி ரூ.60/–லிருந்து ரூ.100 ஆக உயர்த்தப்படவேண்டும். தற்செயல் விடுப்பினை 12 நாட்களிலிருந்து 15 நாட்களாக உயர்த்த வேண்டும். காவல் நிலையங்களில் உள்ள காலியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். 15 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் உள்ள, ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். உதவி ஆய்வாளர்கள் வரையுள்ள அதிகாரிகளுக்குத் தற்போதுள்ள பணிச் சுமையைக் குறைத்திட, சுழற்சி முறையிலே வாரம் ஒரு நாள் ஓய்வு வழங்க வேண்டும்.

காவல் துறையினருக்கு மருத்துவப் படியை வழங்குவதற்குப் பதிலாக, அவர்களது குடும்பத்தினர் அனைவருக்கும் பயன்படும் வகையிலே, அரசே பணம் செலுத்தி மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினை அமல்படுத்த வேண்டும்.

அதேபோன்று, தமிழகக் காவல் துறையிலே 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் உள்ளன. அவற்றை மிகச் சரிய முறையிலே பராமரிக்கவும், விரைவாகப் பழுதுபார்க்கவும் சில இடங்களில் புதிதாகக் காவல் மோட்டார் வாகனப் பணிமனைகளை நிறுவ வேண்டும். தற்போது ஆவடி மற்றும் திருச்சியில் மட்டுமே காவல் துறையினரால் நடத்தப்படும் வாகனப் பணிமனைகள் உள்ளன. அதுபோன்ற பணிமனைகளை, சென்னை, செயின்ட் தாமஸ் மவுண்ட், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் நெல்லையிலும் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



மோட்டார் வாகனங்களை ஓட்டுகின்ற காவலர்களுக்கு மாதம் ரூ.120 சிறப்பு ஊதியமாகத் தற்சமயம் தரப்படுகிறது. இது மிகவும் குறைவு. எனவே, அதை ரூ.250 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆந்திரா மாநிலத்திலே 100 சதவிகிதக் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. ஆனால், தமிழ்நாட்டிலே 43 சதவிகிதக் காவலர்களுக்கு மட்டுமே வீட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, காவல் துறையினை நவீனமயமாக்கும் திட்டத்தின்மூலம் தரப்படும் நிதியைப்போல, தமிழக அரசும் தனியாக இதற்கு நிதி ஒதுக்கீடு செய்து வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஓர் அன்பான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அரசு ஊழியர்கள் அனைவருக்கும் வாரம் இரண்டு நாள், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தரப்படுகிறது. ஆனால், காவலர்களுக்கு, முதன்மைத் தலைமைக் காவலர் வரை ஆறு நாட்கள் வேலை. ஏழாவது நாள் மட்டுமே விடுமுறை என்று உள்ளது. அதனைப் பரிசீலனை செய்து, வாரந்தோறும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளை விடுமுறை நாட்கள் என அறிவித்தும், வேலை நாட்களில் அரசுப் பணி செய்தால் அந்த நாட்களுக்கு E.T.R.– கூடுதல் பணி நேரச் சிறப்பு ஊதியம் ரூ.150 வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, Cyber crime தற்போது மிக முக்கியமான குற்ற வகையாக இருந்து வருகிறது. இதற்கு நவீனத் தொழில்நுட்ப அறிவு தேவைப்படுகிறது. இதற்குத் தேவையான விசேஷ முயற்சியை எடுக்க அந்தக் காவல் துறை அதிகாரிகள் தங்களது சொந்தப் பணத்தினைக் கட்ட வேண்டியிருக்கின்றது. தகுதியான அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு அரசே பணம் கட்டி, அவர்களுக்கு அந்தத் தகுதியைப் பெற வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, 1981 ஆம் ஆண்டு பெண் உதவி ஆய்வாளர் நியமிக்கப்பட்டு, அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் பணியாற்றிக்கொண்டிருக்கின்றவர்களுக்கு இதுவரை பதவி உயர்வு தரப்படவில்லை. அதனை உடனே தர வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, திருநெல்வேலி மாவட்டம், ஆய்க்குடி காவல் நிலையத் துணை ஆய்வாளர் முகமது ஹனீபாவைப் பற்றிப் புகார் சொன்ன காரணத்தினால், எங்களது வட்டார காங்கிரஸ் தலைவர் களக்காடு மணி என்பவர்மீது 506/2 பிரிவின்கீழ் பொய் வழக்குப் போட்டு, சிறையிலே அடைத்துள்ளார்கள். சுய நலம் காரணமாகவும், காழ்ப்புணர்ச்சி காரணமாகவும் தமது அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்திய அந்தக் காவல் துறை ஆய்வாளர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எனது பணிவான வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, என்னுடைய பூந்தமல்லி தொகுதியில் நசரத்பேட்டையில் அருள்கூர்ந்து முதலமைச்சர் அவர்கள் ஒரு புதிய காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். அதேபோன்று, வில்லிவாக்கம் பகுதியிலே இருக்கின்ற வானகரத்திலே ஒரு புதிய காவல் நிலையம் உருவாக்கித் தர வேண்டும்.

*முற்பகல் 10–40*

பூந்தமல்லியில் துணை ஆய்வாளர் அலுவலகம், காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும்.

வால்பாறை அல்லது கீழ்ப் பகுதியிலே அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று கட்டித் தர வேண்டும்.

அதேபோன்று, இன்றைக்கு ஆயத்தீர்வையைப் பற்றி நான் இரண்டொரு வார்த்தைகளை உங்கள் முன்னாலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆயத்தீர்வையைப் பொறுத்தவரை, இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலே மிக அதிகமான அளவு நிதியைப் பெற்றிருக்கிறது. 2005–2006 ஆம் ஆண்டு ரூ.6,030.75 கோடியாக இருந்த வருவாய், இன்றைக்குக் கலைஞருடைய சீரிய முயற்சியினால், நல்ல நிர்வாகத் திறமையின் காரணமாக 7,452.96 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. 1,422.19 கோடி ரூபாய், சுமார் 23.58 விழுக்காடுகள் ஆயத்தீர்வையிலே இந்த அரசு உயர்த்தி இருக்கிறது. ஆயத்தீர்வையை உயர்த்தி, இந்த ஆயத்தீர்வை வருவதிலே இருக்கின்ற ஓட்டை, உடைசல்களையெல்லாம் அடைத்து, இந்த உபரி வருமானத்தைப் பெருக்கி இருக்கின்ற தமிழக முதலமைச்சர் அவர்களை நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்திலே, தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரை, இன்றைக்குத் தீ மிகவும் அழிக்கக்கூடிய ஒரு சக்தியாக இருக்கிறது.



அந்த சக்தியினை நாம் எப்படி அணுக வேண்டும் என்பதிலே பல்வேறு நவீன உத்திகளை நாம் கையாள வேண்டிய நிலையிலே இன்றைக்கு இருக்கிறோம். அந்த நவீன உத்திகள் கையாளப்படுகின்றபோது, பல்வேறு நிலைகளிலே தீயணைப்பு நிலையங்கள் இன்றைக்கு நிறையவே இருக்கின்றன. இருந்தாலும், அந்தத் தீயணைப்பு நிலையங்களுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. இன்றைக்குத் தீயணைப்புத் துறையிலே 6,643 நிர்வாக மற்றும் செயல் பணியாளர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அங்கு நிச்சயமாக 7 கோடி மக்களுக்குத் தேவையான வசதிகள் போதாது. அதனாலே, வளர்ந்து வருகின்ற பகுதிகள், விஞ்ஞான யுகத்திலே பல்வேறுவிதமான உயர்ந்த கட்டடங்கள், அந்த உயர்ந்த கட்டடங்களிலே மின்சாரக் கசிவினாலே ஏற்படுகின்ற பல்வேறுபட்ட தீ விபத்துக்கள். அந்தத் தீயணைப்புகளுக்கெல்லாம் பெருமுயற்சி எடுத்து, அவர்களுக்கு நவீன ஆயுதங்களையும் இந்த அரசு வழங்கிக்கொண்டிருந்தாலும், இன்னும் பல்வேறுபட்ட நவீன ஆயுதங்களை வழங்க வேண்டும் என்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தீயணைப்பு நிலையங்கள் இன்றைக்கு 286 ஆக இருக்கின்றன. அவற்றை நீங்கள் ஒரே ஆண்டிலே உயர்த்தாவிட்டாலும்கூட, ஆண்டு ஒன்றுக்கு 10, 20 என்று உயர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலூர் மாவட்டம், யோளுர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கணியம்பாடியில் போலீஸ் நிலையம் ஒன்று அமைத்துத் தர வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைத்து, இந்த அளவிற்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக எங்களுடைய கருத்துகளைச் சொல்ல வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்து, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார். 20 நிமிடம் உங்களுக்கு.

**திரு. டி. ஜெயக்குமார்:** நீங்கள் கூட்டினாலும் சரி, கழித்தாலும் சரி, தாங்கள் கொடுக்கின்ற நேரத்தை இரண்டால் பெருக்கி, அந்த நேரத்தில் முடித்துவிடுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமே ஒழுங்கு, நல்ல சட்டமே நல்ல ஒழுங்கு–Law is Order and Good Law is Good Order"

என்ற தத்துவ ஞானி அரிஸ்டாட்டிலின் கருத்தில் மிக்க நம்பிக்கைகொண்டும், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கினைப் பேணிக் காத்திட நவீனமயமாக்கப்பட்ட காவல் துறையை உருவாக்கியும், இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழகத்தில் மகளிர் காவல் நிலையங்களை அமைத்தும், இந்தியாவிலேயே அதிகமான பெண் காவலர்களை நியமித்தும்—the largest strength of Women Police Personnel in the Country, அதிகமான மகளிர் காவல் நிலையங்களைத் திறந்தும்—the highest number of Women Police Stations in the Country, the first Women Police Battalions of Special Police—ஐ உருவாக்கியும், மகளிர் அதிரடிப் படையை Commando Force–ஐ உருவாக்கியும், காவல் துறைக்குக் கணினியை அதிகமாகக் கொடுத்து வரலாற்றைப் படைத்து, 20 ஆண்டுகளுக்குமேலாகக் காட்டு வளங்களைச் சூறையாடி, இந்தியாவின் இறையாண்மைக்கே சவால்விட்ட காட்டுக் கொள்ளையன் வீரப்பனைச் சுட்டு வீழ்த்தி, கொலைகாரர்களை, (மேசையைத் தட்டும் ஒலி) கடத்தல்காரர்களை வீழ்த்திக் காட்டி, வீர சரித்திரம் படைத்திட்ட மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, காவல் துறை, தீயணைப்பு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். தங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1996–2001, 5 ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மொத்தம் காவல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி—5 ஆண்டு தி.மு.க. ஆட்சியில், ரூ.4,022 கோடி. எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலமான 2001–2006, 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் காவல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 6,179 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஒதுக்கிய நிதியைக் காட்டிலும் அம்மா அவர்கள் கூடுதலாக ஒதுக்கிய நிதி ரூ.2,157 கோடியாகும். காவல் துறைக்கு முழுமையான அளவுக்கு வேண்டிய வசதிகள் மற்றும் தேவையான அனைத்தையும் நிறைவேற்றும்போதுதான் காவல் துறை தன்னுடைய கடமையைச் சரிவர ஆற்ற முடியும் என்பதை நன்குணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள் காவல் துறைக்குக் கூடுதல் நிதியை ஒதுக்கினார்கள்.

முற்பகல் 10–45

கடலோரப் பாதுகாப்பைப் பொறுத்தவரை, நீண்ட நெடிய ஆயிரம் கிலோ மீட்டர் கொண்ட கடற்கரையில் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காகவும், தமிழ்நாட்டில் தீவிரவாதம் தலைதூக்காமல் இருக்கவும் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாண்புமிகு புரட்சித்



தலைவி அம்மா அவர்கள் கடலோரக் காவல் படையை அமைத்தார்கள். கடந்த நிதியாண்டான 2006–2007–ல் ஒரு கோடியே 42 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பொதுவாக, தீவிரவாதிகள் அச்சுறுத்தும் நிலையில் தமிழ்நாடு இருக்கின்ற ஒரு நிலையில் இந்த நிதியைக் கூடுதலாக ஒதுக்கீடு செய்வதுதான் மரபு. ஆனால், இதற்கு நேர்மாறாக, இந்த நிதியாண்டில் ஒரு கோடியே 38 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து, கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைவாக நிதி ஒதுக்கியுள்ளதால், தமிழ்நாட்டிற்கு இப்போது தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருக்கும் நிலையில், தீவிரவாதத்தை ஊக்கப்படுத்தும் செயலாக இந்த நிதி குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டது பலத்த சந்தேகத்தினைத் தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே ஏற்படுத்தி உள்ளது.

காவல் துறையை நவீனமயமாக்குதலைப் பொறுத்தவரை, அதிமுக்கியத்துவம் கொடுத்து மாண்புமிகு அம்மா அவர்கள், கட்டடம், வீட்டு வசதி, தொலைத் தொடர்பு, தடய அறிவியல் உபகரணங்கள் போன்றவற்றைக் காவல் துறைக்கு வழங்கி, காவல் துறையினுடைய செயல்பாட்டை மிக வேகப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், 2001–2006, 5 ஆண்டுகளில் 247 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு அந்த நேரத்தில் எங்களுக்கு இணக்கம் இல்லாத ஒரு நிலை. அப்படி இணக்கம் இல்லாத நிலையிலும்கூட மாண்புமிகு அம்மா அவர்கள் காவல் துறையை மிகச் சிறந்த முறையில் நிர்வகித்ததன் காரணமாக, மத்திய அரசு 2001–2006, 5 ஆண்டுகளில் காவல் துறைக்கு ஒதுக்கிய தொகை 356 கோடியே 42 இலட்சம் ரூபாய். 2005–2006 ஆம் ஆண்டில் மட்டும் காவல் துறையை நவீனப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் 50 கோடியே 32 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, காவல் துறை நவீனமயமாக்கலுக்குச் செலவு செய்யப்பட்டது. ஆனால், நீங்கள் இந்த நிதியாண்டில் காவல் துறையை நவீனமயமாக்க ஒதுக்கியுள்ள தொகை 47 கோடியே 47 இலட்சம் ரூபாய் ஆகும். படிப்படியாக இந்த நிதியைக் குறைப்பதற்கு முடிவு எடுத்திருக்கிறார்களா என்பதைத் தெரிவிப்பதோடு, வளர்ந்து வரும் விஞ்ஞானச் சூழ்நிலைக்கேற்ப காவல் துறைக்குத் தொலைத் தொடர்பு, தடய அறிவியல் மற்றும் இதர தளவாடங்களைக் குறைப்பதன்மூலம் காவல் துறையை நாம் கற்காலத்திற்குக் கொண்டு செல்வதுபோன்ற ஒரு தோற்றத்தை இப்போது ஏற்படுத்தி இருக்கின்றோம். மாவட்டக் காவல் படைப் பிரிவில், Demand for Grant. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையை நவீனமயமாக்குதல் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார். இந்தக் காவல் துறையை நவீனமயமாக்க வேண்டுமென்று முதன்முதலில் போலீஸ் கமிஷன் நியமித்து, அதனுடைய பரிந்துரைகள் அத்தனையையும் ஏற்று, (மேசையைத் தட்டும் ஒலி) சாதாரணமாக இருந்த தமிழ்நாடு காவல் துறையை நவீனமாக மாற்றிய பெருமை எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு மட்டும்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் சொன்னால், தி.மு.க.–வில் இடம்பெற்றிருக்கிற அமைச்சர் சொல்கிறார் என்று நீங்கள் சொல்வீர்கள். ஆனால், காவல் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்று, அண்மையில் மாண்டு போன முன்னாள் ஐ.ஜி. அருள் அவர்கள், தன்னுடைய பணிக் காலத்தில் நடைபெற்ற சம்பவங்களைத் தொகுத்து 'ஒரு போலீஸ்காரன் டைரி' என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் அவர் குறிப்பிட்டிருக்கிறார், 'இந்தியாவிலேயே முதன்முதலாக போலீஸ் கமிஷனை நியமித்து, தமிழ்நாடு காவல் துறையை நவீனக் காவல் துறையாக மாற்றியது முதலமைச்சர் கலைஞர் அவர்கள்' என்று குறிப்பிட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–50*

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது, ஏன் குறைத்தீர்கள் என்றுதான் கேட்டேன். நான் கும்பகோணத்திற்கு வழி கேட்டால், கும்மிடிப்பூண்டிக்கு வழி சொல்கிறார் அவர்.

மாவட்டக் காவல் படைப் பிரிவில், Demand for Grant, page 102—நன்றாகக் கேட்டுவிட்டு, பிறகு reply பண்ணச் சொல்லுங்கள். அவசரப்பட்டுப் பேச வேண்டாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** அதாவது, நீங்கள் நவீனமயமாக்கல் பற்றிச் சொன்னதால்தான் நான் பதில் சொன்னேனே தவிர, நிதி கூடுதல், குறைவு பற்றி நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மூன்றாவது போலீஸ் கமிஷனையும் தலைவர் கலைஞர் அவர்கள்தான் நியமித்திருக்கிறார்கள். கலைஞர் ஆட்சியில் இருக்கும்போதுதான் கமிஷனை நியமிக்கின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நிதியைக் குறைப்பதால் மட்டுமே modernisation குறைந்துவிடாது. நிதியை நீங்கள் எதற்குக் கூட்டினீர்கள், எதற்குக் குறைத்தீர்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

**திரு. டி. ஜெயக்குமார்:** Sir, நான் page number–உடன் கோடிட்டுக் காட்டுகின்றேன். அதையெல்லாம் குறித்துக்கொள்ளுங்கள். Officers இருக்கின்றார்கள், அவர்கள் reply கொடுப்பார்கள். Justify பண்ணுங்கள். என் கண்ணில் பட்டதை night full ஆக உட்கார்ந்து எல்லாவற்றையும் ready பண்ணிவிட்டு வந்து சொல்லிக்கொண்டிருக்கின்றேன். அதை நீங்கள் reply-யில் சொல்லுங்கள்.

மாவட்டக் காவல் படைப் பிரிவில் Demand for Grant, page 102—உணவுச் செலவுகள்; காவலர்களுக்கு 2006–2007 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை ரூபாய் 11 கோடியே 14 இலட்சம் ஒதுக்கிவிட்டு, 2007–2008 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2 கோடியே 89 இலட்சம் ஒதுக்கியுள்ளீர்கள். கண் துஞ்சாமல் உழைக்கும் காவலர்கள் உணவுச் செலவைக் குறைத்தது எந்த வகையில் நியாயம்? 2006–2007–ல் 11 கோடியே 14 இலட்சம் ரூபாயை ஒதுக்கிவிட்டு, 2007–2008–ல் கூடுதலாக உயர்த்திக் கொடுப்பதுதான் நியாயம். ஆனால், 11 கோடி ரூபாயிலிருந்து 2 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டதன்மூலம் இந்தக் காவலர்களுக்கான உணவுச் செலவுகள் தொடருமா என்பது இப்பொழுது கேள்விக்குறியாக உள்ளது.

2006–2007 ஆம் வருடம் 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் தடய அறிவியல் துறைக்குப் புலனாய்வுப் பொருட்கள்—Latest Investigating techniques and Gadgets to police, நவீனப் பொருட்கள் கொள்முதல் செய்ய, கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 48–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், Demand for Grant–ல் இதற்காக 2006–2007–ல் ஒதுக்கிய தொகை ரூபாய் 37 இலட்சம் ரூபாய் ஆகும். இந்த நிதியாண்டில் 2007–2008–ல் Demand for Grant–ல் Budget Allocation ஆயிரம் ரூபாய் என provision கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், 2007–2008 கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 60–ல், ரூபாய் 2 கோடியே 23 இலட்சத்திற்கு நவீனமயமாக்கும் பொருட்கள், தளவாடங்கள் வாங்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பொருட்கள் வாங்கப்பட்டனவா? அப்படியானால் எந்தெந்தப்

பொருட்கள் வாங்கப்பட்டன? எந்த நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டன? ஏன் போதிய provision கொடுக்கப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தைப் பொறுத்தவரை, 1991 ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தி, இந்த வாரியத்தின்மூலமாகக் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். 2001–2006 வரையுள்ள ஐந்தாண்டு காலத்திற்கு மட்டும் 17,049 காலிப் பணியிடங்கள் அம்மா அவர்களால் நிரப்பப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த ஒரு வருட காலமாகக் காவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், காவல் துறையில் தற்போது sanctioned strength என்று சொல்லக்கூடிய, குறைவாக இருக்கின்ற பணியிடங்கள் காலியாக 11,739 இருந்தும், அவை இன்றும் நிரப்பப்படாமல் உள்ளன. தேர்தல் வாக்குறுதியாக நீங்கள் என்ன சொன்னீர்கள்? நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே காலிப் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்புவோம் என்று சொன்னீர்கள். ஆனால் ஆண்டு ஒன்றாகியும்கூட, இதுவரையில் காவலர்கள் பணி நியமனம்—recruitment செய்ததாக எந்தவிதமான குறிப்பும் இல்லை. நீங்கள் அவர்களை நியமனம் செய்யும்போது, எப்படி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியின்போது காவலர்கள் தகுதி, திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ, அதே அடிப்படையில் காவலர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தை 1989 முதல் 1991 வரை உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மூடிவிட்டீர்கள். ஆனால் 1991–ல், காவலர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற அடிப்படையில், காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் புத்துயிர் கொடுத்து, 2001 முதல் 2006 வரையுள்ள ஐந்தாண்டு காலங்களில் மட்டும் 12,264 வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 31–12–2006–க்கு sanctioned houses என்று சொன்னால், 98,897. தற்போது காவலர் குடியிருப்புகள் கட்டப்படும் நிலையில் உள்ளது 5,373. இந்த 5,373–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு ஒதுக்கிய குடியிருப்புகளை நீங்கள் ஒதுக்கீடு செய்து, காவல் துறையிடம் வழங்கியது, hand over செய்தது 527 குடியிருப்புகள். ஆனால், கொள்கை விளக்கக் குறிப்பில் என்ன



குறிப்பிட்டுள்ளீர்கள்? காவல் துறைப் பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டியது 51,508 (31–05–2006 கணக்கின்படி). 31–12–2006 வரை 51,495 வீடுகள். எனவே, இதன்மூலம் என்ன தெரிகின்றது என்று சொன்னால், இந்த ஓராண்டு காலத்தில் காவலர்களுக்குப் புதிய குடியிருப்புகளை நீங்கள் கட்டவில்லை என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

முற்பகல் 10–55

அதேபோன்று, காவல் துறையில் பணியாற்றும் காவலர்கள், சார் ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், மற்றும் காவல் துறையின் இதர பணியாளர்கள், அலுவலர்கள் தங்களுக்குள்ள குறைகளை எடுத்துச் சொல்லவும், அவற்றைத் தீர்க்கவும் அம்மா அவர்கள் குறை தீர்க்கும் நிகழ்ச்சியின்மூலம் குறை தீர்த்தார்கள். ஆனால், இன்று காவலர்கள் தங்கள் குறைகளை எங்கே போய்ச் சொல்வது என்று திக்குத் தெரியாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

ஒப்பளிக்கப்பட்ட இந்தியக் காவல் பணி அதிகாரிகள் எண்ணிக்கை 214 ஆகும். 1–1–2005 அன்று நிலவரப்படி மொத்த இந்தியக் காவல் பணி அதிகாரிகள் எண்ணிக்கை 193 ஆகும். எனவே, மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போதுகூட 2006 கணக்குப்படி இது 193, ஆனால், இன்றைக்கு அவர் சொன்னது 189, எனவே, 2005-லிருந்து இன்றைய கணக்குப்படிப் பார்த்தால், அதைக் கழித்தால், கிட்டத்தட்ட நிறைய இந்தியக் காவல் பணியிடங்கள் காலியிருக்கின்ற சூழ்நிலையிலே, 214 sanctioned strength-க்கு ஏற்ற வகையிலே அதை fill-up செய்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் அளவில் தற்போதுள்ள நிலைமையில் இந்த 214 இந்தியக் காவல் பணி அதிகாரிகள் இப்போது உள்ளனரா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, காவல் துறைப் பணியாளர்களுடைய குழந்தைகள். இதுகூட நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் கடந்த முறை அம்மா அவர்களிடத்திலே கேட்டு School of Excellence கொடுக்கப்பட்டது. 10 கோடி ரூபாயும் கொடுக்கப்பட்டது. ஆனால், அதைக்கூட நான் கேட்கிறேன், அந்த 10 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு, இப்போது என்ன நிலைமை என்பதுதான் எங்களுடைய கேள்வியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரில் வாகனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில், போக்குவரத்தை மட்டும் சீர் செய்ய 8 சாலைச்

சந்திப்புக்களில் கேமராக்கள் பொருத்தப்பட்டு அம்மாவின் ஆட்சியில் போக்குவரத்து கண்காணிக்கப்பட்டு, நவீனக் கட்டுப்பாட்டு அறையின்மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது. இதனை விரிவுபடுத்தும் வகையில், ரூபாய் 2 கோடியே 1 இலட்சம் செலவில் 20 சாலைச் சந்திப்புக்களில் கேமராக்கள் பொருத்தப்பட்டன. தற்போது போக்குவரத்து நெரிசலை நவீனக் கட்டுப்பாட்டு அறைமூலம் கண்காணிப்பதற்கு வசதியாகப் பல சாலைச் சந்திப்புக்களில் கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும்.

காவல் துறையில் வேகமான செயல்பாடு என்று சொல்லும்போது, குற்றங்கள் நடைபெறாமல் விழிப்போடிருந்து பார்ப்பது என்பதும், அப்படியே குற்றங்கள் நடந்தால், அந்தக் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனை பெற்றுத் தருவதும் காவல் துறையினுடைய முக்கியக் கடமையாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியின்போது, ஒரு கொலை வழக்கில் முதல் தகவல் அறிக்கை (First Information Report) பதிவு செய்யப்பட்ட 40 நாட்களிலே குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு விரைவு நீதிமன்றம்மூலம் தண்டனை பெற்றுத் தரப்பட்டது.

அதேபோன்று, அண்ணா சிலை நடைபாதை அருகே 7–2–2005 அன்று ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொலையாளி உடனடியாகக் கைது செய்யப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்ட 15 நாட்களில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, 29 நாட்களிலே குற்றவாளிக்குத் தண்டனைப் பெற்றுத் தரப்பட்டது. அதேபோன்று, ஒரு கொலை வழக்கில் 4 நாட்களில் விசாரணை முடிக்கப்பட்டு, நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** உங்களுக்காவது 15 நாள், ஒரு மாதம், ஆறு மாதம். ஆனால், சமீபத்தில் போன வாரம் கோட்டூர்புரத்திலே ஒரு கொலை நடந்தது. மறுநாளே அந்தக் கொலையாளியைக் கண்டுபிடித்தது கலைஞருடைய அரசு என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் சட்டம் படித்தவர். நான் கேட்ட கேள்வி, குற்றங்களைக் கண்டுபிடிப்பது பற்றிக்



கேட்கவில்லை. அவர்களுக்கு எவ்வளவு நாட்களில் தண்டனை வாங்கித் தரப்பட்டது என்பதைத்தான் நான் கேட்டேனேயொழிய, வேறு எந்தக் கேள்வியும் இல்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு ஜெயக்குமார் சட்ட அமைச்சராக இருந்தவர். தண்டனை தருவது அரசாங்கம் அல்ல; அது நீதிமன்றம்.

**திரு. டி. ஜெயக்குமார்:** அதைத்தான் காவலர்கள் உரிய முறையிலே விசாரணை செய்து charge sheet எல்லாம் file செய்து, witness-ஐ எல்லாம் produce பண்ணி, prosecution தரப்பிலே வாதாடி, தண்டனையை வாங்கிக் கொடுத்தோம். அதைத்தான் நான்கு நாட்கள் என்று நான் சொன்னேன்.

அதேபோன்று, குற்றங்களைக் கண்டறிவது, 2001 ஆம் ஆண்டில் 71 சதவிகிதமாக இருந்தது, 2005 ஆம் ஆண்டில் 86 சதவிகிதமாக அதிகரித்தது. 2006 மே மாதம் முதல் 2007 மார்ச் மாதம் வரையில் குற்றங்கள் கண்டறியப்பட்டது எத்தனை சதவிகிதம் என்பதையும், கடந்த 2006 நவம்பர் மாதம் கிண்டி J—3 காவல் சரகத்திற்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற இரட்டைக் கொலையில் வயதான பெரியவரும், வயதான மூதாட்டியும் கொடூரமாகக் கொல்லப்பட்டு ஐந்து மாதங்கள் ஆகியும், இதுவரை குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உங்களால் முடியவில்லை. இதுபோல, குற்ற நிகழ்வுகளில் கடந்த மே 2006 முதல் 2007 மார்ச் வரை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட முடியாத நிலையையும், குற்றத்தின் தன்மையைக் குறித்தும் விளக்கம் அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களது ஆட்சிக் காலத்தில் குற்றங்களின் நிகழ்வு என்று சொல்லும்போது, உங்களது 1996–2001 ஆண்டு ஆட்சியின்போது, ஆட்சி முடிவுபெற்று, எங்கள் அம்மா ஆட்சியில் 2001–ல் இருந்து 2005 வரை நடைபெற்ற குற்றங்களுடைய எண்ணிக்கை, 1996–2001 ஆம் ஆண்டைக் காட்டிலும் மிக, மிகக் குறைவு. கொலைகள், Murder—2001 ஆம் ஆண்டு வாக்கில் எண்ணிக்கை 1,994. 2005–ல் 1,365. ஆதாயக் கொலை, Murder for gain—2001 ஆம் ஆண்டு வாக்கில் எண்ணிக்கை 81. 2005–ல் 74. கூட்டுக் கொள்ளை, Dacoity—2001 ஆம் ஆண்டு வாக்கில் எண்ணிக்கை 158. 2005–ல் 73. கொள்ளை, Robbery—2001 ஆம் ஆண்டு வாக்கில் எண்ணிக்கை 669. 2005–ல் 437. கன்னக்களவு, Burglary—2001 ஆம் ஆண்டு வாக்கில் எண்ணிக்கை 5,957. 2005–ல் 3,738. திருட்டு, Theft—2001 ஆம் ஆண்டு வாக்கில் எண்ணிக்கை 14,940 ஆகும். 2005–ல் 15,851. ஆக, 2001–ல் மொத்தம் 25,339 ஆக இருந்த குற்றங்களின்

எண்ணிக்கையை 21,536 ஆகக் குறைத்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது நான் கேட்க விரும்புவது, 2006...

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் 2005–ஐப் படித்தார். 2006–ஐயும் கொஞ்சம் படித்திருந்தால், தி.மு.க. ஆட்சியிலே, கொலையாக இருந்தாலும், ஆதாயக் கொலையாக இருந்தாலும், வழிப்பறியாக இருந்தாலும், கன்னக்களவாக இருந்தாலும், திருட்டாக இருந்தாலும், 2005–ஐவிட 2006–லே குறைந்திருக்கிறது என்பதை கொள்கை விளக்கக் குறிப்பின் பக்கம் 66–லே நீங்களே படிக்கலாம்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் கேட்பார் என்று தெரிந்துதான் நான் இந்தக் கேள்வியையே கேட்டேன். பக்கம் 16-17-ல் Traffic Accident இருக்கிறது. அதிலே மட்டும் புள்ளிவிவரத்தை இந்த 7–வது மாதம் வரை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதாவது upto date, இட்டத்தட்ட நீங்கள் பார்த்தீர்கள் என்றால், மே மாதத்திலிருந்து இதுநாள் வரை கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், அதேபோன்று இந்த offences-க்கும் நீங்கள் கொடுக்க வேண்டியதுதானே? ஏன் கொடுக்கவில்லை? இப்போது அதுதான் என்னுடைய கேள்வி. அதை நீங்கள் இப்போதுகூட இல்லை, officers–இடம் கேட்டு அப்புறம்கூடக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குற்றங்கள் குறைந்ததை நீங்கள் படிக்க வேண்டும் என்பதற்காக விட்டுவிட்டாராம்.

**திரு. டி. ஜெயக்குமார்:** நான் படித்துவிட்டேன். அவர் படித்துக்கொள்ளட்டும். சாதி, மத மோதல்களைப் பொறுத்தவரை முழுமையான அளவுக்குக் கட்டுப்படுத்தி, அமைதியை உருவாக்கியவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். கடந்த 10 ஆண்டுகளில், 1996–2001 ஆம் ஆண்டு உங்களுடைய ஆட்சியில் மதக் கலவரங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 67 ஆகும். ஆனால், 2001–லிருந்து 2005 பிப்ரவரி மாதம் வரை மதக் கலவரத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5 ஆகும்.



அதேபோன்று, சாதிக் கலவரம், 1996–2001 ஆம் ஆண்டில் 213 ஆகும். 2001–லிருந்து 28–2–2005 வரை 40. அதேபோன்று, 1996–2001 ஆம் ஆண்டில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகள் 194, அது உங்களுடைய ஆட்சியில். 2001–லிருந்து 28–2–2005 வரை எங்களுடைய ஆட்சியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகள் 77 ஆகும்.

குற்றங்கள், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் வெகுவாகக் குறைந்துள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளீர்கள். விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பூங்கா நகர் பொறுப்பாளர் பாபு வெட்டிப் படுகொலை, அம்பத்தூர் நகர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் ரவி படுகொலை, சங்கரன்கோவிலில் நாட்டு வெடிகுண்டுகள் தயாரிப்பு, நெல்லையில் எவர்சில்வர் கூஜா வெடிகுண்டுகள் பதுக்கல், சேலத்தில் நக்சல் சதி வேலைக்கு வெடிமருந்து சப்ளை, சென்னையில் ராக்கெட் லாஞ்சர் தயாரிப்பு, ஓசூரில் கட்டடங்களைத் தகர்க்கும் வெடிகுண்டுகள், டெட்டனேட்டர்கள், ஜெலட்டின் குச்சிகள் தயாரிப்பு, அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் இல்லத்தில் குண்டு வெடிப்பு, அகதிகள் முகாமிலிருந்து 17 போராளிகள் தப்பி ஓட்டம், சென்ட்ரல் இரயில் நிலையம் எதிரே உள்ள போலீஸ் பூத்தில் பட்டப்பகலில் ரவுடி டில்லி பாபு படுகொலைக் கும்பலால் கொடூரமாக வெட்டிக் கொலை, இராசபாளையத்திலே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் வீட்டிற்குள் வெட்டிக் கொலை, ம.தி.மு.க. ஊராட்சித் தலைவர் இராஜேந்திரன் வெட்டிக் கொலை, விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்காகக் கடலுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 1½ டன் எடையுள்ள துப்பாக்கி தயாரிக்கும் மெஷினை கஸ்டம்ஸ் அதிகாரிகள் கைப்பற்றுதல், திருவொற்றியூர் நகரப் பாட்டாளி மக்கள் கட்சியின் துணைச் செயலாளர் ஓட, ஓட வெட்டப்பட்டது, சென்னையை அடுத்த துரைப்பாக்கத்தில் ரவுடி ஒருவன் ஓட, ஓட விரட்டிப் படுகொலை, கடலூர் அருகே காணாமல் போன மூவர் கிரிக்கெட் மைதானத்தில் புதைப்பு என்று அடுக்கிக்கொண்டே போகும் அளவுக்கு எண்ணற்ற அராஜகச் செயல்கள் தமிழ்நாட்டில் கடந்த 10 மாதங்களாகவே நடந்துகொண்டிருக்கின்றன. இவை போதாதென்று கடந்த ஒரு மாதமாக L.T.T.E. நடமாட்டம், ஆயுதக் குவிப்பு, ஆயுதத் தயாரிப்பு ஆகிய செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. 14–2–2007 அன்று இந்தியக் கடலோரக் காவல் படை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, ஏ.கே. 56 இரகத் துப்பாக்கிகள், தோட்டாக்கள் தற்கொலைப் படைத் தாக்குதலுக்குப் பயன்படுத்த...

**HON. DEPUTY SPEAKER:** Thiru Jayakumar, please conclude your speech.

**திரு. டி. ஜெயக்குமார்:** வெடிமருந்துப் பொருட்கள் ஆகியவற்றையும், மண்டபம் பகுதியில் இலங்கைக்கு ஆயுதங்களைக் கடத்திச் செல்வதற்கு வந்த படகு ஒன்றையும்—நாட்டு நடப்பு, நல்லது என்பதற்காகத்தான் படிக்கிறேன் நான் இதை—கைப்பற்றியுள்ளார்கள்.

15–2–2007 அன்று 4 ஆயிரம் கிலோ வெடிபொருட்கள்கொண்ட ஒரு படகை தனுஷ்கோடி அருகே இந்தியக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். தூத்துக்குடியில் வெடிபொருட்களைக் கொள்முதல் செய்துவிட்டு இலங்கை திரும்பும்போது, அந்தப் படகு பிடிபட்டதாகத் தகவல் வெளிவந்தது. ஆனால், 'இந்து' பத்திரிகையை, நம்முடைய ஞானசேகரன் அவர்கள் நேற்றுக்கூட இங்கே படிக்கும்போது சுட்டிக்காட்டினார்கள். நடுக்கடலிலே பிடிக்கப்பட்ட படகு குறித்து முழுமையான அளவுக்கு ஆய்வு செய்யப்பட்டு, முடிவு வரவில்லை. ஆனால் அதற்குள்ளே D.G.P. என்ன சொல்கிறார் என்றால், இது நமது தமிழ்நாட்டு எல்லையை நோக்கி வரவில்லை என்ற கருத்தைச் சொல்கின்றார்கள். எப்படி இவ்வளவு அவசரப்பட்டு அவர் சொல்ல முடியும் இந்தக் கருத்தை என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விசாரணைக்கு அது உகந்ததுதானா? அப்படி அவசரப்பட்டுச் சொல்வது எந்தவிதத்திலும் ஏற்புடையதாக இல்லை. அந்த 'இந்து' தலையங்கத்தைக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்க்கலாம் என்று நான் சொல்கின்றேன்.

*முற்பகல் 11–05*

நேற்றைக்குக்கூட மண்டபம் பகுதியிலே கிட்டத்தட்ட தெர்மாகோல் பெட்டியிலே ஒரு பெரிய அளவிற்கு Suicide Bomb வந்தது என்று சொன்னால், அந்த அளவிற்கு இன்றைக்குத் தமிழகம் தினந்தோறும் இதைச் சந்திக்க வேண்டிய நிலையில் இருந்துகொண்டிருக்கின்றது. உண்மை நிலை இவ்வாறிருக்க, குற்றங்கள், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் வெகுவாகக் குறைந்துள்ளன என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருப்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோன்ற ஒரு செயலாக இருக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த 10 மாதங்களில் உங்கள் ஆட்சியில் நடைபெற்ற குற்றங்களைத் தொகுத்து உங்கள் ஆட்சியினுடைய சாதனையாக இப்புத்தகத்தை



மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் அளிக்கின்றேன். அதைக் கொண்டு போய்க் கொடுங்கள்.

(ஒரு புத்தகம் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் அளிக்கப்பெற்றது)

1992–ல் முதல் மகளிர் காவல் நிலையம் உருவாக்கப்பட்டு, இன்றைய அளவில் 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட வழிவகுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இனிமேல் general ஆகத்தான் வரும். எல்லாக் காவல் நிலையங்களிலும் வரவேற்பாளராகப் பெண் காவலர்களை மாண்புமிகு அம்மா அவர்கள் நியமித்ததன்மூலம் காவல் நிலையங்களுக்குக் குடும்பப் பிரச்சினைகளுக்காகவும், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும், வரதட்சணைக் கொடுமை சார்ந்த புகார்களைப் பெற்று உரிய முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பெண் காவலர்கள் வரவேற்பாளராக—Receptionist ஆக நியமிக்கப்பட்டார்கள். ஆனால், இப்போது வரவேற்பாளராகப் பெண் காவலர்களைக் காவல் நிலையத்திற்கு நியமிக்க மறுக்கும் காரணம் என்ன என்பதைத் தெளிவுபடுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பெண் காவலர்கள் மேலதிகாரிகளால் பாலியல் துன்பத்திற்கு ஆளாகின்ற ஒரு சூழ்நிலையைத் தடுக்கும் வகையில், பெண் காவலர்களுக்கு உரிய பணிப் பாதுகாப்பு வழங்கவும் கேட்டுக்கொள்கின்றேன்.

உத்தரப் பிரதேச மாநிலம் நொய்டாவில் 32 சிறுவர், சிறுமிகளைக் கொன்று புதைத்த சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது. 9–1–2007 அன்று வெளிவந்த 'தினத்தந்தி' செய்தியில், சென்னை நகரில் மட்டும் ஆண்டுக்கு சுமார் 500 குழந்தைகளும், சிறுவர், சிறுமிகளும் காணாமல் போகின்றார்கள் என்றும், தமிழகம் முழுவதும் 5 ஆயிரம் குழந்தைகளும், சிறுவர், சிறுமிகளும் காணாமல் போகின்றனர் என்றும் அதிர்ச்சி தரும் செய்தியை வெளியிட்டிருக்கிறது. அரசு இச்செய்தியை சாதாரணமாக எடுத்துக்கொள்ளாமல், காணாமல் போன குழந்தைகள் பற்றிய விவரங்களை அறிந்து, கண்டுபிடித்துத் தர வேண்டிய நடவடிக்கையை உடனடியாக எடுக்கவும், எத்தனை குழந்தைகள் காணாமல் போயினர், புகார் கொடுக்கப்பட்டதா, புகார் பதிவு செய்யப்பட்டதா, புகாரின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுக் குழந்தைகளைக் கண்டுபிடித்து உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதா என்ற விவரங்களையும் அவைக்கு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டசபைக் காவலர்களுக்கு—Watch & Ward duty பார்ப்பவர்கள் கால் கடுக்க சட்டசபை காலை தொடங்குகுகின்ற நேரம் முதல், முடியும் வரை நின்றுகொண்டு பணியாற்றுகின்றார்கள். இவர்களுக்கு சட்டசபை நடக்கும் நாட்களில் தினப் படியாக, காவலர்களுக்கு ரூ.50/–ம், சார் ஆய்வாளருக்கு ரூ.55/–ம். (மணியடிக்கப்பெற்றது) இல்லை, தீயணைப்புக்கு வந்துவிடுகிறேன். (குறுக்கீடு) கடந்த ஒரு வருடமாக இவர்களுக்கு அந்தப் படி உயர்த்தி வழங்கப்படவில்லை. பணியின் சிரமத்தை அறிந்து, தினப் படியை உயர்த்தி, கூடுதலாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதித்தது 20 நிமிடங்கள், பேசியிருப்பது 25 நிமிடங்கள். உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** கடந்த ஒரு வருடமாக—ஜி.கே. மணி 40 நிமிடங்கள் பேசினார். நாங்கள் பிரதான எதிர்க்கட்சி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சியில், ஈரோட்டிலே ஜோதி கிருஷ்ணன் என்கிற ஒரு காவல் துறை ஆய்வாளர், ஐந்து ஆண்டு காலம் அவர் காணாமல் போய், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது நான் கேட்கிறபோது, காணாமல் போனவரைக் கண்டுபிடிக்கிறோம், கண்டுபிடிக்கிறோம் என்று ஐந்து ஆண்டு காலம் சொன்னாரேயொழிய, கடைசி வரை அந்த ஜோதி கிருஷ்ணனை அந்த ஆட்சியாளர்கள் கண்டுபிடிக்கவில்லை. இந்த ஒரே ஒரு சான்று மட்டும் போதும். இன்னொன்று, மீனாட்சி என்கிற ஒரு ஆசிரியை காணாமல் போய், கடைசி வரை கண்டுபிடிக்காமல், இப்போது தலைவர் கலைஞருடைய ஆட்சிதான் கண்டுபிடித்தது என்பதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி கொடுத்தது 20 நிமிடங்கள். நீங்கள் பேசியது 25 நிமிடங்கள். பேசி முடியுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** ஒரு நல்ல சமுதாயத்தில் குழந்தைகள் நலன் காக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் நான் இந்தக் கருத்தைச் சொல்கின்றேன். ஆனால், அந்தக் கருத்துக்கு மதிப்பு அளிக்காமல்,



விவாதத்தைத் திசை திருப்புவது என்பது உண்மையிலேயே வருத்தப்பட வேண்டிய ஒன்றாக இருக்கின்றது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் கணினி வழங்கினார்கள். வழங்கப்பட்ட கணினி இயக்கப்படாமல் உள்ளது. கணினிகள் இயக்கப்படுவதற்கு மேசை, நாற்காலிகள்போன்றவற்றை வழங்கி, கணினியை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டு ஓராண்டு ஆகியும், இதன் செயல்பாடு குறித்துக் கொள்கை விளக்கக் குறிப்பில் எதுவும் கூறப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, no. உங்களுக்குக் கொடுத்தது 20 நிமிடங்கள். இப்போது 28 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. டி. ஜெயக்குமார்:** இவ்வாணையம் எத்தனை முறை கூடியது, யார், யாரையெல்லாம் அழைத்துக் குறைகளைக் கேட்டார்கள், மாவட்டவாரியாக இவ்வாணையம் சென்று காவலர்கள் குறைகளைக் கேட்டார்களா, காவல் துறைப் பணியாளர்கள் குறைகளைக் கேட்டார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இவ்வாணையம் அமைந்துள்ள அலுவலகம்கூட எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர். (குறுக்கீடுகள்) நீங்களே யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு அனுமதிக்கப்பட்டது 20 நிமிடங்கள்தான். (குறுக்கீடுகள்) பேசி நமக்குள்ளே எடுக்கப்பட்ட முடிவு. 20 நிமிடங்கள் கொடுத்தால் போதும் என்று நீங்கள்தான் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு அவர் 27 நிமிடங்களுக்குமேல் பேசி இருக்கிறார். (குறுக்கீடு) இப்போது சீக்கிரம் உரையை முடியுங்கள்.

முற்பகல் 11–10

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பு—2006–2007, பக்கம் 17–தீயணைப்புத் துறையில் 10 water tenders, 4 சிறுந்துகள் மற்றும் 4 ஜீப்புகள் வாங்க ரூபாய் 1 கோடியே 90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. Demand for Grant–ல் பக்கம் 5–ல், ரூபாய் 23 கோடியே 32 இலட்சம் provision கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால்,

திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 4 கோடியே 54 இலட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 2007–2008–ல் ரூபாய் 21 கோடியே 69 இலட்சம் நிதி ஒதுக்கீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது முரண்பாடாக உள்ளது. ரூபாய் 23 கோடியே 32 இலட்சம் ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டு மதிப்பீட்டில் ரூபாய் 21 கோடியே 69 இலட்சம் provision கொடுக்கப்பட்டால் என்ன பொருட்கள் வாங்கப்படும் என்பது குறித்து எந்தவிதக் குறிப்பும் இல்லை. மேலும், தீயணைப்பு வண்டி ஓடாமல் நடுரோட்டில் நின்றுவிட, அதைத் தள்ளிவிட்டு ஸ்டார்ட் செய்வதும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சி கொறடா, என்ன உறுப்பினர் அவர்பாட்டுக்குப் பேசிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறார்?

**திரு. டி. ஜெயக்குமார்:** இறுதியாக, நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் ஒரு கருத்தை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நம்முடைய எதிர்க்கட்சி கொறடா, நீங்கள், நான் எல்லோரும் பேசி, காங்கிரஸ் கட்சியுடன் பேசி, நானே சொன்னேன், இரண்டாவது நாளைக்கு முதலமைச்சர் பேசுவதற்கு முன்னால் அரை மணி நேரம் பேசுங்கள் என்று சொன்னேன். இல்லை, இல்லை, முதல் நாள் எங்களுக்கு 30 நிமிடங்கள் கொடுங்கள், இரண்டாவது நாள் 20 நிமிடங்கள் கொடுங்கள் என்று கேட்டீர்கள். இப்போது கிட்டத்தட்ட 30 நிமிடங்களாக நம்முடைய அருமை நண்பர் பேசிக்கொண்டு இருக்கிறார். முதலமைச்சர் இன்னும் பதில் சொல்ல வேண்டும். எனவே, தயவுசெய்து (குறுக்கீடு) இல்லை, பேசுவதை எல்லாம் பேசிவிட்டு, வெளிநடப்புச் செய்கிறீர்கள், அது வேறு. நான் என்ன சொல்கிறேன் என்றால்—இல்லை, ஜெயக்குமார் பேச வேண்டியதை மொத்தம் பேசிவிட்டார். காவலர்களுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாக நிதி உதவி தர வேண்டும் என்று சொல்கிறார். முதலமைச்சர் பதில் சொல்வார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் (குறுக்கீடு) என்ன இது? முறையல்ல. (குறுக்கீடுகள்) முதலமைச்சர் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சுதந்திரம் எப்போது வந்ததாகக் கருத முடியும் என்று நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இவ்வளவு நேரம் பேசியது போதும், உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மகாத்மா காந்தி அடிகள், 'இரவு 12 மணிக்கு எப்போது ஒரு பெண் தன்னந்தனியாக நகைகளை அணிந்துகொண்டு யாருடைய துணையுமின்றிச் செல்கின்றாளோ, அன்றைக்குத்தான் உண்மையான சுதந்திரம் கிடைத்ததாகக் கருத முடியும்' என்று சொன்னார்கள். அந்தச் சுதந்திரம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் இருந்தது. இன்றைக்கு இல்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு பெண் சுதந்திரமாக இருக்கலாம் என்றாலும், நீங்கள் கஞ்சா கேஸ் போட்டு செரினாவை உள்ளே அடைத்துவிடுகிறீர்களே, எங்கே சுதந்திரம் இருக்க முடியும்? பொய் வழக்கு. ஜெயலட்சுமியை விட்டீர்களா? (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை எத்தனை முறைதான் இந்தச் சபையிலே சொல்வார் என்பது எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** உங்கள் ஆட்சியில் சட்டத்தைப் பற்றி, ஒழுங்கைப் பற்றி, நேர்மை பற்றிப் பேசுவதற்கு எந்த அருகதையும் கிடையாது. ஜெயலட்சுமியே உங்களுக்கு சாபம், செரினாவே ஒரு சாபம், ஓர் அவமானம் உங்களது ஆட்சியில். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள், கருப்பசாமி. (குறுக்கீடுகள்) செங்கோட்டையன், நினைத்து, நினைத்துப் பேசாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற விவாதத்திற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டிய நேரத்தில், வேண்டுமென்றே இந்த அவையில் தவறான எண்ணங்களை உருவாக்கக்கூடிய அளவுக்குக் குறுக்கிட்டுப் பேசி நேரத்தை எடுத்துக்கொள்வது. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள், துரைக்கண்ணு, அன்பழகன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி, அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், அந்தக் கட்சியினுடைய தலைவர் எழுந்திருந்து பேசுவாரேயானால், எந்த நியாயத்திற்கும் பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன். ஆனால், எல்லோருமாகச் சேர்ந்து கூச்சல் போடுவதை எதிர்க்கட்சியினர் ஒரு முறையாக ஆக்கி, நேரத்தை அதனால் வீணாக்குகிறார்கள். ஆகவே, தயவுசெய்து பேரவைத் தலைவர் அவர்கள் உடனடியாக முதலமைச்சர் அவர்களைப் பதில் சொல்ல அழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையைத் தொடங்குவதற்கு முன்பு ஒரு பசுமையான நினைவை இங்கே என் நெஞ்சிலும், அவையோர் நெஞ்சிலும் படர விடுகின்றேன். 12–7–1962 அன்று இதே மன்றத்தில் காவல் துறை மானியத்தில் அன்றைய எதிர்க்கட்சியின் துணைத் தலைவராக இருந்த நான் ஆற்றிய உரையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அப்பொழுது பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக வீற்றிருந்தார். அன்று நான் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது. சொல்லப் போனால், முதல் பகுதி இது. தொடக்கப் பகுதி இது.

"நமது போலீசார் ஒரு பெரிய தியாகப் பரம்பரையை நம் நாட்டில் உருவாக்கி வருகின்றவர்கள். பொதுவாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமானால் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நமது மாநிலத்தில் இருக்கின்ற போலீசார் தங்களுடைய கடமையை ஆற்றி வருகிறார்கள் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது."

மறந்துவிடக் கூடாது. அப்பொழுது நான் எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர். எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர், ஆளுங்கட்சி வரிசையிலே பெருந்தலைவர் காமராஜர்போன்றவர்கள் அமர்ந்திருந்தபோது போலீசாரைப் பற்றி கூறிய வாசகம் இது.



தங்கள்
"கடும் மழையிலும், கொடிய வெயிலிலும், நள்ளிரவிலும், இடையிலேயும்,
பணியினை, கொலைகாரர்கள் மத்தியிலும், கள்வர்கள் துச்சமாக
தங்கள் உயிரைப் பற்றிய கவலையில்லாமல், மரணத்தைத் திராவிட
மதித்து கடுமையாகப் போரிடுகின்ற அந்தத் தியாக சீலர்களை கடமைப்பட்டிருக்கிறது.
முன்னேற்றக் கழகம் பாராட்டுவதற்குக் உணர்ந்து அவர்களுக்கு
அப்படிப்பட்ட உழைப்பின் மேன்மையை கேட்பதுதான் இந்த
மேலும் பல சலுகைகள் வழங்க வேண்டுமென்று நான் எழுப்பும்
வெட்டுப் பிரேரணைமீதும், இந்த மானியத்தின்மீதும் தெரிவித்துக்கொள்கின்றேன்."
குரல் என்பதை முதற்கண்

பிரச்சினை
நேற்றைக்கு வெட்டுத் தீர்மானத்தைப் பற்றிப் பெரிய ஒன்றைச்
இங்கே வந்தது. அதனைப் பற்றி விளக்கம் அளிக்கும்போது வாசகம்
சொல்ல விட்டுவிட்டார்கள். வெட்டுப் பிரேரணையினுடைய அல்லது
எப்படி இருக்க வேண்டுமென்றால், கல்வித் துறைக்கு ஒதுக்கியிருப்பதிலிருந்து
நீர்ப்பாசனத் துறைக்கு ரூ.2,000 கோடி என்று கொடுப்பவர்கள்
100 ரூபாயை வெட்ட வேண்டும் என்றுதான் தீர்மானம் வேண்டுமென்றுதான்
கொடுப்பார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் கூட்ட 100 ரூபாயைக்
சொல்ல வேண்டும். ஆனால், வெட்டுத் தீர்மானம் சொன்னால்தான்
குறைக்க வேண்டும் என்று இருக்கும். அப்படிச் கேட்பதற்குப்
அவர்களுக்குப் பேசும் வாய்ப்பு. கூட்ட வேண்டுமென்று வெட்டுத்
பதிலாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டு அந்த ஆனால்,
தீர்மானத்தின்மீதுதான் எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுவார்கள். எதிர்க்கட்சியினுடைய
பேசும்பொழுது, இங்கே நம்முடைய தலைவர்களும்,
தலைவர்களும் மற்றும் தோழமைக் கட்சிகளுடைய காவல்
உறுப்பினர்களும் எடுத்துரைத்ததைப்போல, இன்னும் தாருங்கள்
துறையினருக்குத் தேவை, தேவை, இவைகளையெல்லாம் அந்த
என்று கேட்பதைப்போலத்தான் கேட்பார்கள். அப்படிப்பட்ட துணைத்
நிகழ்விலேதான் நான் இந்த அவையில் எதிர்க்கட்சியினுடைய முன்பு,
தலைவராக நின்று, பெருந்தலைவர் காமராஜருக்கு முன்பு
பக்தவத்சலனாருக்கு முன்பு, சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு வாய்ப்புகளைச்
கேட்டேன்; காவல் துறையினருக்கு இன்னும் பல வசதி
செய்து தர வேண்டுமென்று கேட்டேன்.

*முற்பகல் 11–20*

பேசும்பொழுது
இங்கே நம்முடைய ஜி.கே. மணி அவர்கள் உயர்த்திக்
சொன்னார்கள்; அவர்களுக்குச் சம்பளத்தையாவது இப்போதாவது?
கொடுக்கக் கூடாதா? என்ன செய்யப் போகிறீர்கள் அவர்கள் ஏங்கித்
அவர்கள் ஏங்கித் தவிக்கிறார்களே என்று சொன்னார்.

தவித்தார்களோ, இல்லையோ, அவர்களுக்காக ஜி.கே. மணி அவர்கள் இங்கே ஏங்கித் தவித்த காட்சியை நானும் கண்டேன், எல்லோரும் கண்டார்கள். ஆனால், ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். 1967–க்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி உருவாகி, நம்முடைய வாய்ப்புக் குறைவின் காரணமாகப் பேரறிஞர் அண்ணா அவர்களை நாம் இழந்து, அதற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்க வேண்டிய சூழ்நிலை உருவாகி, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், காவல் துறையினருடைய கஷ்ட நஷ்டங்களை எண்ணிப் பார்த்து, அவர்களுக்கு என்ன செய்யலாம் என்று யோசித்து, இந்தியாவிலேயே முதன்முதலாக போலீஸ் கமிஷன் அமைத்த மாநிலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்த இந்த மாநிலம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு காரியத்தைச் செய்தவர்கள் மார் தட்டிக்கொள்வதிலே தவறில்லை. அந்த வகையிலேதான் முதன்முதலாகத் தமிழகத்தில் காவல் துறைக்காக ஒரு கமிஷன், கோபாலசாமி அவர்களுடைய தலைமையில்—அவர் I.A.S., அல்ல I.C.S.,—அவருடைய தலைமையில் அமைத்து, அதனுடைய பரிந்துரைகளை நிறைவேற்றினோம். சரியாகச் சொல்ல வேண்டுமேயானால், அப்போது காவலர்களுடைய மாதச் சம்பளம் 65 ரூபாய். அந்த முதல் காவல் துறை கமிஷன் செய்த சிபாரிசின்படி மாதச் சம்பளம் 200 ரூபாயாக உயர்ந்தது. அதற்குப் பிறகு இன்னொரு போலீஸ் கமிஷன்—நான் போட்டதெல்லாம் போலீஸ் கமிஷன்தான், நான் வேறு கமிஷனை நாடிப் போகவில்லை. அப்படிப்பட்ட இரண்டாவது கமிஷனில் 200 ரூபாய் என்பது 500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு, மத்திய அரசு ஊழியர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழு வாயிலாக ஊதியங்களை உயர்த்தித் தந்தபோது, 65 ரூபாய் மாதச் சம்பளத்தில் இருந்த காவலர்களுக்கு இன்றையதினம் மாதம் 6,500 ரூபாய் கிடைக்கிறது என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எடுத்த (மேசையைத் தட்டும் ஒலி) முதல் முயற்சியினுடைய விளைவு என்பதை அரசியல்வாதிகளாக இருப்பவர்கள் வேண்டுமானால் அரசியலுக்காக ஒத்துக்கொள்ளாமல் இருக்கலாம், ஆனால், மனசாட்சி உள்ள காவல் துறை நண்பர்கள் நிச்சயமாக இதை உணர்வார்கள், உணர்ந்து, நன்றி பாராட்டுவார்கள்.

இங்கே நம்முடைய நண்பர் ஜெயக்குமார் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். காவலர்களுக்குக் குடியிருப்பு அம்மா ஆட்சியில், அதாவது அ.தி.மு.க. ஆட்சியில் கட்டித் தந்ததைப்போல் நீங்கள் கட்டித் தரவில்லை என்று சொன்னார்கள். எனக்கு இதிலே யார்



காவலர்களுக்கு அதிகம் செய்தார்கள், யார் செய்யவில்லை என்ற போட்டா போட்டிக்கு நான் வரவும் இல்லை, அதிலே ஜெயக்குமாரோடு எனக்கு அல்லது செங்கோட்டையனோடு எனக்கு வம்பு, தும்பு எதுவும் இல்லை. இரண்டு பேரும் எதைச் சொல்கிறோம்? ஒருவருக்கொருவர் குறை சொல்லி, ஆளுங்கட்சி எதிர்க்கட்சியையும், எதிர்க்கட்சி ஆளுங்கட்சியையும் குறை சொல்லி, இன்னும் நிரம்பச் செய்ய வேண்டுமென்று, அந்த இலாபத்தை நாம் இரண்டு பேரும் சேர்ந்து கொடுப்பது பாதிக்கப்பட்டிருக்கின்ற காவல் துறையினருக்குத்தான். அதைத்தான் இன்றைக்கு நாம் செய்திருப்பதாக நான் கருதுகின்றேன்.

அவர்கள் சொன்னார்கள், அ.தி.மு.க. ஆட்சியிலே கட்டித் தரப்பட்ட குடியிருப்புகளைவிட காவலர்களுக்குத் தி.மு.க. ஆட்சியில் குறைவாகத்தான் குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். என்னிடத்திலே உள்ள புள்ளிவிவரத்தின்படி, 1991–1996 என்ற 5 ஆண்டு கால ஆட்சியில், அ.தி.மு.க. ஆட்சியில், காவலர்களுக்குக் குடியிருப்புகள் 3,503 கட்டித் தர ஆணையிடப்பட்டிருக்கின்றது. 1996–2001–ல், இந்த 5 ஆண்டு கால ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 12,103 குடியிருப்புகள் கட்டித் தர ஆணையிடப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) 12 ஆயிரம் என்பது மூவாயிரத்தைவிடக் குறைவானது என்று சொன்னால், நான் ‘ஆமாம்’ என்று ஒத்துக்கொள்கின்றேன்.

அது மாத்திரமல்ல, அதற்குப் பிறகும் 2006–2007–ல் தி.மு.க. ஆட்சியில், 3 ஆயிரம் வீடுகள் கட்டித் தர ஆணையிடப்பட்டுள்ளது. 2007–2008–ல் தி.மு.க. ஆட்சியில் மேலும் இரண்டாயிரம் வீடுகள் கட்டித் தர ஆணையிடப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, யார் அதிக வீடுகளைக் கட்டித் தந்தார்கள் என்பதல்ல முக்கியம். இந்தப் போட்டா போட்டி, ஆளுகின்ற கட்சிக்கும், ஆளப் போகிறோம் என்று எண்ணிக்கொண்டிருக்கிற எதிர்க்கட்சிக்கும் இடையிலே இருந்தால், அது இடையிலே இருப்பவர்களுக்கு நல்லதுதான். அந்த வகையிலேதான் நான் இந்தப் போட்டா போட்டியையும் வரவேற்கின்றேன். இதை நான் தவறு என்று கருதவில்லை.

முற்பகல் 11–25

இன்னொன்று சொன்னார்கள். குற்றங்கள் பெருகிவிட்டன தி.மு.க. ஆட்சியில்; அம்மா ஆட்சியில் அமைதிப் பூங்காவாகத் தமிழகம் இருந்தது; இந்த ஆட்சியிலே பூங்காவில் புயல் வீசிக்கொண்டிருக்கிறது என்று; இப்பொழுது புயல் எங்கே வீசுகின்றது என்று எல்லோருக்கும்

தெரியும். இங்கே வீசவில்லை புயல். இருந்தாலும், அம்மாவின் ஆட்சியிலேதான் அமைதியாக இருந்தது என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன், ஒரு புள்ளிவிவரத்தை.

அ.தி.மு.க. ஆட்சியில் ஜூன் 2005 முதல் டிசம்பர் 2005 வரையிலான காலக்கட்டத்திலும், கழக ஆட்சியில் ஜூன் 2006 முதல் டிசம்பர் 2006 வரையிலான காலக்கட்டத்திலும் தமிழகத்தில் நடைபெற்ற பல்வேறு குற்றங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், கழக ஆட்சியில் குற்றங்கள் குறைந்துள்ளன என்பதை அறியலாம்.

கன்னக் களவுகள், அ.தி.மு.க. ஆட்சியில் 2,235, கழக ஆட்சியில் 2,061. திருட்டு, அ.தி.மு.க. ஆட்சியில் 9,304, கழக ஆட்சியில் 8,079. கொலைச் செயல்கள், அ.தி.மு.க. ஆட்சியில் 759, கழக ஆட்சியில் 749. காயம், கொடுங்காயம் ஏற்படுத்திய நிகழ்ச்சிகள், அ.தி.மு.க. ஆட்சியில் 8,238, கழக ஆட்சியில் 7,794. பெண்களுக்கு எதிரான கற்பழிப்புக் குற்றங்கள், அ.தி.மு.க. ஆட்சியில் 318, கழக ஆட்சியில் 264. ஆள் கடத்தல், அ.தி.மு.க. ஆட்சியில் 476, கழக ஆட்சியில் 458. வரதட்சணை மரணங்கள், அ.தி.மு.க. ஆட்சியில் 140, கழக ஆட்சியில் 107. கணவர் அல்லது அவரது உறவினர்களால் ஏற்பட்ட கொடுமைகள், அ.தி.மு.க. ஆட்சியில் 1,086, கழக ஆட்சியில் 764. பெண்களை மானபங்கப்படுத்தல், அ.தி.மு.க. ஆட்சியில் 1,050, கழக ஆட்சியில் 666. நம்பிக்கை மோசடி, அ.தி.மு.க. ஆட்சியில் 115, கழக ஆட்சியில் 100. தீ வைப்பு நிகழ்ச்சிகள், அ.தி.மு.க. ஆட்சியில் 304, கழக ஆட்சியில் 239. ஏமாற்றுதல், அ.தி.மு.க ஆட்சியில் 1,554, கழக ஆட்சியில் 1,026. குற்றங்களைக் கண்டுபிடித்தல், அ.தி.மு.க. ஆட்சியில் 88 சதவிகிதம், கழக ஆட்சியில் 93 சதவிகிதம். (மேசையைத் தட்டும் ஒலி) கண்டுபிடிக்கப்பட்ட களவு போன சொத்தின் மதிப்பு, அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.24 கோடி, கழக ஆட்சியில் ரூ.27 கோடி. மீட்கப்பட்ட சொத்து, அ.தி.மு.க. ஆட்சியில் ரூ.19 கோடி, கழக ஆட்சியில் ரூ.23 கோடி. இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் பதிவான பிற வகை வழக்குகள், அ.தி.மு.க. ஆட்சியில் 64,701, கழக ஆட்சியில் 60,535. இதிலே பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை. ஒரு 100, 200 தான் வித்தியாசம் இருக்கும் அந்த ஆட்சிக்கும், இந்த ஆட்சிக்கும்.

அப்படியிருக்கும்போது, நாம் நினைப்பதைப்போல எதிர்க்கட்சியிலே இருக்கிற நீங்களும் நினைத்தால், இரண்டு பேரும் சேர்ந்து, எல்லோரும் சேர்ந்து நாட்டில் நல்லுறவை வளர்க்கலாம், நாட்டில் தீமைகளை ஒழிக்கலாம். அதை விட்டுவிட்டு, நீதான் தீமையை அதிகமாகச் செய்தாய், நாங்கள் செய்ததெல்லாம் நன்மைகள்தான், நாங்கள்தான்



அமைதியாக இந்த நாட்டை வைத்திருக்கிறோம் என்று இப்படிப் பேசுவது, யார் அமைதியை நிலைநாட்டுவது என்பதிலே நமக்குள்ளே வாக்குவாதம் வந்து, அதுவே முற்றி, அதுவே தகராறாக ஆகி, அதுவே பெரிய போர்க்களமாக ஆகி, நமக்குள்ளே அபிப்பிராய பேதங்களை மேலும், மேலும் வளர்ப்பதற்குத்தான் அது வழிவகுக்கும் என்பதையும், இதிலே போட்டா போட்டி வேண்டாம் என்பதையும் எதிர்க்கட்சி நண்பர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 11–30*

இன்னொன்று நம்முடைய ஜெயக்குமார் சொன்னார், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்திற்கு நிதி குறைக்கப்பட்டுவிட்டது என்றார். நேற்றையதினம் நம்முடைய செங்கோட்டையன் அவர்களும் அதையே குறிப்பிட்டார். அவர்கள் இந்தப் புத்தகத்திலே இருக்கின்ற அந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டு அதைச் சொன்னார்கள். அவர்கள் அதை வைத்துக்கொண்டு சொன்னதிலே தவறு இல்லை. ஆனால், அதை ஆழமாகப் பார்த்தால், 2002–2003–ல் அ.தி.மு.க. ஆட்சியில் 136.20 கோடி ரூபாய். 2003–2004–ல் அதே அ.தி.மு.க ஆட்சியில் 89.14 கோடி ரூபாய். ஆக, இந்தக் குறைவு அ.தி.மு.க ஆட்சியிலேயே ஏற்பட்டுவிட்டது. ஆகவே, நான் அ.தி.மு.க. ஆட்சியைக் குறை கூறவில்லை. மத்திய சர்க்கார் தந்த உதவியைக்கூட, percentage விகிதத்திலேதான் தந்தார்கள். அப்படித் தந்தபோது, 50:50 என்று தந்தபோது நிறைவாக இருந்தது. பிறகு 60:40 என்று தந்தபோது, மாநில அரசினுடைய பங்கு குறைந்து, அது ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தது. அதனால்தான் அ.தி.மு.க. ஆட்சியிலே மீண்டும் குறைக்கப்பட்டது என்பதற்கான விவரமாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவலர்களுடைய காலியிடங்கள் நிரப்பப்படவில்லை. எப்போது நிரப்புவீர்கள் என்று நம்முடைய ஜெயக்குமார் அவர்களும், எதிர்க்கட்சி சார்பிலே பேசியவர்களும், தோழமைக் கட்சியின் சார்பிலே பேசியவர்களும் பேசினார்கள். காலியிடங்களை நிரப்பிட, கடந்த ஆண்டு 5,000 பேரைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இப்போது நடைமுறையிலே அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் 5,000 பேரை இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்ற நல்ல செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவலர்களுக்கு Feeding charges குறைந்து வருகிறது; குறைக்கப்பட்டுள்ளது என்று ஜெயக்குமார் மெத்தவும் கவலைப்பட்டார். அவருக்குத் தெரியும். அரிசி விலை குறைந்து இருக்கிற காரணத்தால், அந்தக் கணக்கில் அது குறைவாகத் தெரிகிறது. அது தெரியும் அவருக்கு. தெரிந்தாலும் ஒரு விவாதத்திற்குச் சொல்லி வைக்க வேண்டுமே என்பதற்காகச் சொல்கிறார். Feeding குறைவாக இருக்கிறது என்றால் யாராவது நம்ப முடியுமா? அதுவும் ஜெயக்குமாரைப் பார்த்தால், Feeding குறைவு என்று யாராவது சொல்வார்களா? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாக, தமிழகத்தில் காவல் துறையில் 1962 ஆம் ஆண்டு total strength 29,560 பேர். 1964–ல் 35,000 பேர். 1969–ல் 41,337 பேர், 1989–ல் 66,856 பேர், 2001–ல் 91,340 பேர், 2006–ல் 98,897 பேர். காவல் துறையிலே total strength 2007–ல், இப்பொழுது 99,774 பேர். வெகு விரைவில் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சம் என்ற இலக்கை அடையும் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவர்களுக்குத்தான் அந்தக் காலத்தில் மாதம் 65 ரூபாய் என்று ஊதியம் இருந்து, இன்றையதினம் 6,000 ரூபாய் என்கிற அளவிற்குமேல் உயர்ந்து இருக்கிறது என்றால், ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு கட்சியினுடைய அரசும் அவர்களாலான உதவிகளை, சம்பள உயர்வைக் காவலர்களுக்குத் தந்ததன் காரணமாகவும், ஒன்றிரண்டு அரசுகள் அதைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தாலும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில் நானே அந்தக் காலத்திலே போலீஸ்காரர்களுக்காகப் பாட்டு எழுதி பாடி, நடித்த நாடகமே நம்முடைய பெரியவர் பக்தவத்சலம் அவர்களால் தடை செய்யப்பட்டு, தடை செய்யப்பட்ட நாடகத்தினுடைய பாடலை இதே அவையில், நீங்கள் தடை செய்தாலும் இங்கே பாடுகிறேன், கேளுங்கள் என்று,

(முற்பகல் 11–35

"போலீசு வேலைக்கென்று போகின்ற ரொப்பனுக்கு,
புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண் வளராய்!
சேப்புத் தொப்பி மாட்டிக்கிட்டு
காக்கி உடை போட்டுக்கிட்டு
போகின்ற ரொப்பனிடம்
பழைய கடன்காரன் வந்து



பாக்கி கேட்டால்
கமண்டலமும் வேணுமடா,
காவி உடை வேணுமடா"

என்று பாடிய அந்தப் பாட்டையெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) பெரியவர் பக்தவத்சலனார் அவர்களுக்கு நேராகவே பாடிக் காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) நாடகம் நடித்தால் கைது செய்வேன் என்று சொன்னீர்களே, உங்களுக்கு நேராகவே இப்பொழுது பாடி நடித்திருக்கிறேன், கைது செய்யுங்கள், பார்க்கலாம். என்று நானும் பேச, அவரும் அதை வேடிக்கையாக அன்றைக்கு எடுத்துக்கொண்டார்கள்.

இன்றைக்குப்போல் இவ்வளவு ஆக்ரோஷங்கள் அன்றைக்கு நம்முடைய அவையிலே இல்லை. கோபம் இருக்கும். குமுறல் இருக்கும். ஆத்திரப் பேச்சுக்கள் இருக்கும். ஆனாலும், உள்ளூர வெறுப்பு இருக்காது. ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தாலே இன்றைக்குப் பயப்படுகிறார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நிலைமை அன்றைக்கு இல்லை. ஒரு தோழமை உணர்வோடு, நட்புணர்வோடு—இங்கே நம்முடைய அமைச்சர் எடுத்துக் காட்டியதைப்போல், மீனாட்சி வழக்கு நீண்ட காலமாகப் புரியாமலே இருந்தது. இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகுதான் அந்த வழக்கு என்னவென்று வெளிப்பட்டு, தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது; எதிரிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, தருமபுரியிலே மூன்று மாணவிகள் கொளுத்தப்பட்டார்களே, அந்த வழக்கும் நீண்ட நாள் நடைபெற்று, விசாரணை நடத்தி முடிக்கப்பட்டு, எதிரிகள் மூன்று பேருக்குத் தூக்குத் தண்டனையும், எதிரிகள் 25 பேருக்குக் கடுங்காவல் தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மேல்முறையீட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனாலும், அது தள்ளித் தள்ளிப் போய், கிடப்பிலே போடப்பட்ட வழக்கு எடுக்கப்பட்டு, இன்றைக்கு அதற்குத் தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஒரு புதுவிதக் கொள்ளையர்கள். திடீரென்று கேள்விப்பட்டோம். Grill கொள்ளையர்கள் என்று ஒரு புதுவிதமான கொள்ளையர்கள். அவர்கள் பல இலட்சக்கணக்கான மதிப்புள்ள பொருட்களையெல்லாம் கொள்ளையடித்து, அதன் காரணமாக எந்தவிதமான தண்டனையும் தர முடியாத சூழ்நிலையில், போலீஸ்தான் அவர்களைத் தேடித் தேடி அலைந்து, கடந்த கால ஆட்சியிலே அவர்கள் பிடிபடாமல், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான், அவர்கள் எல்லாம் பங்களாதேஷ்

நாட்டைச் சேர்ந்தவர்கள், இங்கே வந்து கொள்ளையடிக்க வந்திருக்கிறார்கள் என்று புரிந்துகொண்டு, மூன்று பெண்கள் உட்பட 14 குற்றவாளிகளைக் கொல்கத்தா சென்று கைது செய்து, அவர்கள் இன்றைக்குத் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்கள் சம்பந்தப்பட்ட 66 வழக்குகளில் திருடு போன தங்க நகைகள் 184 சவரன் மற்றும் வெள்ளி நகைகள் 400 கிராம் மற்றும் ரூ.43,000 ரொக்கம் ஆகியவை கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. இது Grill கொள்ளை. இன்னொன்று பீரோ புல்லிங். பீரோக்களை வெளியிலேயிருந்து இழுத்து, அதில் இருக்கிற பணத்தை, நகை நட்டுக்களைத் திருடுவது, அது பீரோ புல்லிங். அந்தக் களவுகளில் ஈடுபட்டுத் தொடர்ந்து காவல் துறைக்குப் பெரும் அறைகூவலாக இருந்தவன் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த நாகமணி என்பவன். அவன் கைது செய்யப்பட்டு, அவனிடம், 69 வழக்குகளிலே களவு போன தங்க நகைகள் 438 பவுன், வெள்ளி நகைகள் 650 கிராம் மற்றும் ரொக்கம் 51,000 ரூபாய் கைப்பற்றப்பட்டது.

அண்மையிலேதான் நம்முடைய தலைமைச் செயலகத்தில், திருடு போன சொத்துக்கள் மீண்டும் கொண்டு வரப்பட்டு, உரியவர்களுக்கெல்லாம் ஒப்படைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்தது. அதிலே நான் கலந்துகொண்டபோது, அங்கே வரிசை, வரிசையாகக் கொலு வைப்பதைப்போல அந்த நகைகளையும், பொருட்களையும் வைத்து, அதை இழந்தவர்கள் வந்து வாங்கிக்கொண்டு போனபோது, எவ்வளவு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள் என்பதை நான் நேரிலே கண்டவன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

ஆக, மாநிலத்தில் 2006 ஆம் ஆண்டு 89 சதவிகித சொத்து வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 81 சதவிகித சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். 2005 ஆம் ஆண்டு 86 சதவிகித சொத்துக்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன. 78 சதவிகித சொத்துக்கள் மட்டுமே 2005–ல் மீட்கப்பட்டன. அதைவிட அதிகமாக நாம் கண்டுபிடித்து, அவர்களை எல்லாம் தண்டித்து இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே நான் போட்டி போட விரும்பவில்லை. அன்றைக்கு இருந்த செயல் முறையில் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி; அவர்கள் 4 furlong முன்னேறினார்கள் என்றால், நாம் 6 furlong முன்னேறினோம் என்றால், அந்த 4 furlong–ஐயும் கடந்துதான் 6 furlong



முன்னேறியிருக்கிறோம் என்ற அந்த உணர்வோடுதான் இங்கே பேசுகின்றேனே அல்லாமல், நீங்கள் ஒன்றும் பெரிதாகச் செய்துவிடவில்லை; நாங்கள்தான் செய்தோம் என்று, இந்த போலீஸ் துறை மானியம் பேசுகின்ற நேரத்தில் தீயணைப்புத் துறைக்கு வேலையைக் கொடுக்க நான் விரும்பவில்லை. ஆனால், நான் எப்போதும் சொல்வதுண்டு. போலீஸ் துறையையும், தீயணைப்புத் துறையையும் ஒன்றாக வைத்திருப்பதற்கே காரணம், இதிலே ஏற்படுகின்ற சூடு, இதிலே மூளுகின்ற அனல், இதிலே பற்றி எரிகின்ற தீ, இவற்றை அணைப்பதற்குத் தீயணைப்புப் படை உடனே தேவை என்பதற்காகத்தான் இரண்டு மானியங்களையும் ஒன்றாக வைத்திருக்கிறார்கள் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல வேளை, இங்கே தீயணைப்புத் துறை உள்ளே வராமலே, அணைந்து போயிருக்கிறது நெருப்பு. அணைந்து போனது வெளியில் தெரியாமல் இருக்கலாம். ஆனாலும், அணைந்து போனது அணைந்ததுதான். அந்த நிம்மதியோடு நான் என்னுடைய பேச்சைத் தொடருகின்றேன்.

சட்டம் ஒழுங்குப் பராமரிப்பைப் பற்றிப் பேசும்பொழுது நம்முடைய ஜி.கே. மணி அவர்களும், நம்முடைய சுதர்சனம் அவர்களும், செங்கோட்டையன் அவர்களும், வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும், வேல்முருகன் அவர்களும் கள்ளச் சாராயத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். அவைகளையெல்லாம் ஒடுக்க வேண்டும் என்று சிவபுண்ணியம் சொன்னார், நம்முடைய விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் செல்வமும் சொன்னார். நான் அவர்களுக்கெல்லாம் சொல்வது, கள்ளச் சாராயம் என்பது ஒழிக்க முடியாத ஒன்று என்பதுதான். என்ன இப்படி சவால் விடுகிறீர்கள் என்று என்னிடத்திலே கேட்பீர்களேயானால், சொல்லுகிறீர்களே, காமராஜர் ஆட்சி வர வேண்டும், காமராஜர் ஆட்சி வர வேண்டும் என்று, அந்தக் காமராஜர் ஆட்சியிலேயே ஒழிக்க முடியாத ஒன்று இது. பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியிலேயே அது எந்த அளவுக்கு இருந்தது, பக்தவத்சலம் ஆட்சியிலே எந்த அளவுக்கு இருந்தது என்பதைப் புள்ளிவிவரம் போட்டு, எனவே இதை ஒழிக்க முடியாது; இத்தனை இலட்சம் பேர் கள்ளச் சாராயப் பேர்வழிகள் தண்டிக்கப்பட்டுச் சிறையில் இருக்கிறார்கள் என்றெல்லாம் கூறப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்ல, இதே அவையிலே நான் பேசி இருக்கின்றேன். அன்றைக்கு முதலமைச்சர் நிலையிலே இருந்து பேசியிருக்கின்றேன். என்ன பேசினேன் என்றால், போர்பந்தரில், மகாத்மா காந்தி பிறந்த ஊரில் அவருடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு பெரிய

கிணறு தோண்டி, அதிலே கள்ளச் சாராயத்தைக் காய்ச்சி, அதை விற்றுக்கொண்டு இருந்தார்கள் என்பதை நான் அல்ல, இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் டெல்லி பாராளுமன்றத்திலே சொல்லி வருத்தப்பட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டேன். ஆனால், இந்திரா காந்தி வருத்தப்பட்டாலும் சரி, இன்றைக்கு அந்தக் கட்சியிலே இருக்கின்ற கடைசித் தொண்டன் வருத்தப்பட்டாலும் சரி, அறவே கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியாததற்குக் காரணம், மதுவிலக்குத் திட்டத்தில் நாம் மற்ற நாடுகளோடு போட்டி போடுவது என்றால், அவர்களைவிட இன்னும் நல்ல சரக்குகளை இங்கே உற்பத்தி செய்ய வேண்டும் என்பதிலேதான் வெற்றிபெற முடியுமே தவிர, வேறு வழியிலே வெற்றிபெற முடியாது என்பதற்கு இன்றைய உலக நிலை, உலகப் பண்பாடு, உலகக் கலாச்சாரம் சாட்சியாக இருக்கின்றது.

நான் இன்றைக்கும் சொல்லுகின்றேன். டாஸ்மாக் ஊழியர்களைப் பற்றியெல்லாம் பேசினீர்கள். நான்கூட நம்முடைய கோவிந்தசாமியிடத்திலேயோ, சிவபுண்ணியத்திடத்திலேயோ வேடிக்கையாகக் கேட்கலாம் என்று எனக்கு ஒரு ஆசை. நம்முடைய டாக்டர் ராமதாஸ் அவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு, ஜி.கே. மணி அவர்களுடைய அன்புக் கட்டளையை ஏற்று, மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வந்துவிடலாமா என்பதுதான் அந்த யோசனை. நீங்கள் எல்லாம் சரி என்று சொன்னால், நான் அதற்குக்கூடத் தயாராக இருக்கின்றேன், ஒரு 7 ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை என்று. ஆனால், அந்த டாஸ்மாக் ஊழியர்கள் அப்போது என்ன ஆவார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். *(சிரிப்பு)*

*பிற்பகல் 11–45*

கள்ளச் சாராயத்தை ஒழிக்கவில்லை என்று மிகக் கடுமையாக நம்முடைய செங்கோட்டையன் அவர்கள் இந்த அரசின்மீது குற்றஞ்சாட்டினார். குற்றஞ்சாட்டிவிட்டு அதற்குமேல் போகவில்லை; அதோடு நிறுத்திவிட்டார். நான் அவருக்கு ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்ல விரும்புகிறேன். கள்ளச் சாராயம் குடித்துப் பாதிக்கப்பட்டோர், 2001 ஆம் ஆண்டு 3 சம்பவங்களில் இறந்தவர்கள் 98 பேர், மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டவர்கள் 250 பேர். 2003 ஆம் ஆண்டு ஒரு சம்பவம், இறந்தவர்கள் 17 பேர், மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டவர்கள் 89 பேர். 2004–ல் 2 சம்பவங்கள், கள்ளச் சாராயம் குடித்த சம்பவங்கள், அதிலே இறந்தவர்கள் 5 பேர், மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டவர்கள் 5 பேர். 2005–ல்



2 சம்பவங்கள், இறந்தவர்கள் 10 பேர், மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டவர்கள் 37 பேர், ஆக, 2006 ஏப்ரல் முடிய, அந்த ஆட்சியில், அ.தி.மு.க ஆட்சியில், உங்களுக்கு எல்லாம் புரியம்படிச் சொல்ல வேண்டுமேயானால், நீங்கள் அன்போடு சொல்கின்ற அம்மா ஆட்சியில் 134 பேர்—கள்ளச் சாராயம் குடித்து இறந்தவர்களுடைய எண்ணிக்கை 134. மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டவர்கள் 387. ஆனால், தி.மு.க. ஆட்சியில், 2006 மே மாதம் தி.மு.க. ஆட்சி வந்தது முதல் டிசம்பர் வரையில், கேவலம், ஒரேயொரு ஆள்தான் இறந்திருக்கிறார் இந்தக் கள்ளச் சாராயம் குடித்து என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக நான் கள்ளச் சாராயத்தை ஆதரிக்கிறேன்; அதற்கு நான் வக்காலத்து வாங்குகிறேன் என்று யாரும் கருதக் கூடாது. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு நாமும், காவல் துறை நண்பர்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதிலே அசையாத கருத்து எனக்குண்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதற்காக எத்தகைய கடுமையான தண்டனையையும் விதிப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று சொன்னார்கள். செங்கோட்டையன் அவர்கள் நேற்று ஆரம்பப் பேச்சிலேயே சொன்னார்கள். மணல் கொள்ளை நடைபெறுகிறது, மணல் திருட்டு நடைபெறுகிறது, அதைச் சரியாக நிருவகிக்கவில்லை என்று சொன்னார்கள். அதையும் வாங்கிப் பார்த்தேன். 2005–2006 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் விற்கப்பட்ட மணல்மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாய் ரூ.78.50 கோடி—ரூ.78½ கோடி. 2006–2007, தி.மு.க. ஆட்சியில் மணல்மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாய் ரூ.130.49 கோடி. *(மேசையைத் தட்டும் ஒலி)* அன்று ரூ.78 கோடி, இன்றைக்கு ரூ.130 கோடியாகப் பெருகியிருக்கிறதே அல்லாமல், மணல் பிரச்சினையில் நாம் ஒன்றும் ஏமாந்து போய்விடவில்லை. அதைச் சரியாகத்தான் நிருவகித்துக்கொண்டிருக்கிறோம் என்பதற்காக இதைச் சொல்ல விரும்புகின்றேன்.

நம்முடைய சுதர்சனம் அவர்களும், ஞானசேகரன் அவர்களும் மற்றும் நம்முடைய ஜெயக்குமார் அவர்களும் பேசும்போது, வேறு சிலரும் பேசும்போதுகூட, **Rocket Launcher** பற்றியெல்லாம் பேசினார்கள். 11–7–2006 அன்று மும்பையில் நடந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தும், சென்ற சுதந்திர தினத்தை முன்னிட்டு பயங்கரவாத இயக்கங்களினுடைய அச்சுறுத்தல்

வந்தபோதும், குறிப்பாக, கல்பாக்கம் அணு மின் நிலையத்தையே தாக்கிச் சேதம் விளைவிக்கவுள்ளதாகத் தகவல் கிடைத்தபோதும், மாநிலத்திலே முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து மையங்களிலும் தக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, எந்தவிதமான அசம்பாவிதச் சம்பவங்களும் நிகழாமல் தடுக்கப்பட்டுள்ளது. 17–12–2006 அன்று, அடையாளம் தெரியாத நபர்களால் இந்து முன்னணி தென்காசி நகரத் தலைவர் குமார் பாண்டியன் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட 3 எதிரிகளை அரசு கைது செய்து, அவர்களில் 2 பேரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைத்தது.

இவை எல்லாம், தீவிரவாதத்தை, மத வெறியின் காரணமாக நடைபெறுகின்ற வன்முறை வெறியாட்டங்களைத் தடுப்பதற்கு இந்த அரசு எடுத்த கடுமையான நடவடிக்கைகள்.

முற்பகல் 11–50

அதேபோல, பயங்கரவாதச் செயல்கள். வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்குள்ளே வருவது, இந்தியாவில் இருக்கிறவர்களைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய வன்முறைச் செயல்களுக்கு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்ப்பது; அவர்களை இந்த அரசு விட்டு வைக்கவில்லை. இதிலே குறிப்பாக Rocket launcher—இதை 7-9-2006 அன்று ஆந்திர மாநிலத்திலே சாக்கு மூட்டைகளிலே ஏற்றிச் சென்றபோது, இது பிடிக்கப்பட்டதாகத் தகவல். அதைப் பற்றி விசாரித்தால், 7–9–2006, நம்முடைய ஆட்சி வந்த பிறகு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அம்பத்தூரிலேயிருந்து அது கடத்தப்பட்டது Granthi Travels மூலமாக, 10–8–2005, 11–5–2006, 9–9–2006 ஆகிய தேதிகளில் நடந்துள்ளதாகத்தான் தெரிய வந்துள்ளது. இதன்மூலம், 2005 ஆம் ஆண்டிலிருந்து நடந்து வந்த இந்த சதிச் செயலை மிகவும் திறமையாகச் செயல்பட்டு ஒரே வாரத்திலே முறியடித்தது நம்முடைய அரசின் காவல் துறையினரே என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய ஞானசேகரன் அவர்கள் இந்த வன்முறையாளர்களைப் பற்றி, பயங்கரவாதிகளைப் பற்றிப் பேசக் குறிப்பு தயாரித்திருக்கிறார். அவருக்கு வெகு சுலபமாகக் கிடைத்த குறிப்பு, நம்முடைய தமிழ்நாடு காவல் துறையின் மானியக் கோரிக்கையிலே கிடைத்துவிட்டது. அதிலேயிருந்து குறிப்பு எடுத்தார் பாருங்கள், எடுத்து, நாம் எங்கெங்கே வன்முறையாளர்கள், யார், யார் பயங்கரவாதிகள் என்று அவர்கள்மீது



நடவடிக்கை எடுத்தோமோ, அவர்களையெல்லாம் விடுதலைப் புலிகள் என்று இவர் மாற்றிவிட்டார். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) நான் படித்துப் பார்த்தேன். ஒரு வேளை நாம் படித்த பிறகு—யாரும் proof திருத்தியிருப்பார்களோ நம்முடைய அலுவலகத்திலே என்று படித்துப் பார்த்தால், அதே பயங்கரவாதிகள் என்றுதான் இருந்தது. விடுதலைப் புலிகள் என்று இல்லை. ஞானசேகரனுடைய கண்ணுக்கு பயங்கரவாதிகள் என்றாலே விடுதலைப் புலிகள் என்று தெரிகிறது. அதற்காக நான் விடுதலைப் புலிகளை ஆதரிப்பவன் அல்ல. அதுவும் அவருக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) விடுதலைப் புலிகள்—தமிழ்நாட்டிலே இனி அவர்களுக்கு வேலையில்லை, அந்த வேலையிலே அவர்கள் ஈடுபடவும் இல்லை; ஈடுபடவும் கூடாது என்பதிலே நான் மிகத் தீவிரமாக ஞானசேகரனுக்குக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கு அவர் சொல்லிக் காட்டிய இத்தனை நிகழ்ச்சிகளிலும் வருகின்றவர்கள், அந்தக் கதாநாயகர்கள் எல்லாம் வேறு கதாநாயகர்கள்; இவர் அவர்களையெல்லாம் விடுதலைப் புலிகளாக இங்கே கற்பித்துச் சொன்னார். நண்பர் ஞானசேகரன் அவர்களே, அவர்கள் விடுதலைப் புலிகள் அல்ல. உங்களுடைய ஞானத்திற்கு வேண்டுமானால் அப்படித் தெரிந்திருக்கலாம். நீங்கள் சேகரித்துக் கொடுத்த தகவல்களில் உண்மையான தகவல்களைச் சேகரித்துக் கொடுக்க வேண்டுமே தவிர, அவர்கள் எல்லாம் விடுதலைப் புலிகள் என்று சொன்னதை நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் என்று கருதுகின்றேன். அவர்கள் விடுதலைப் புலிகள் அல்ல. விடுதலைப் புலிகள் என்றால், அவர்களுடைய போக்கு வேறு, அவர்களுடைய நோக்கு வேறு. அது நமக்கு நன்றாகத் தெரியும். ஆனால், அவர்களுடைய எந்தவிதமான வன்முறைச் செயல்களும் இந்த இந்தியாவிற்கே, இந்தத் தமிழகத்திற்கே தீங்கு விளைவிக்கக்கூடிய எந்த ஒரு காரியமாக இருந்தாலும், நான் சொல்கின்றேன், உறுதியாகச் சொல்கின்றேன், அறுதியிட்டுச் சொல்கின்றேன்; இந்த அரசு அத்தகைய காரியங்களுக்கு இடம் அளிக்காது, அளிக்காது, அளிக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்றையும் சொன்னார்கள். இராமநாதபுரத்திலே அகதிகள் முகாம் இருக்கிறது. (குறுக்கீடு) நம்முடைய சுதர்சனம் அவர்கள் இங்கே சொன்னார்கள். நான் உடனடியாக இராமநாதபுரத்திற்குத் தொடர்புகொண்டு அங்குள்ள அதிகாரிகளைக் கேட்டபோது வந்த செய்தியைச் சொல்கின்றேன். மத்திய கடல் மீன் ஆராய்ச்சி

நிறுவனத்தின் தெற்குக் கடற்கரையில் சிறிய வெள்ளை நிற தெர்மாகோல் பெட்டி ஒன்று கரை ஒதுங்கியது. அதைக் காவல் துறையினர் கைப்பற்றித் திறந்து பார்த்ததில், 8 அங்குல நீளமும், 2 அங்குலச் சுற்றளவும்கொண்ட 5 சிவப்பு நிற பிளாஸ்டிக் குழாய்கள் இருப்பதைக் கண்டு, மதுரையிலிருந்து வெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டது. சோதனையில், அந்த பிளாஸ்டிக் குழாய்கள், கப்பல்களில் பயன்படுத்தப்படும் சமிக்ஞைத் தோட்டாக்கள் (Signal cartridges) என்று தெரிய வந்தது. அந்தப் பெட்டியிலிருந்த 5 சமிக்ஞைத் தோட்டாக்களில் ஒரு தோட்டாவை வெடிக்க வைத்துப் பார்த்ததில், அது உயரே சென்று வெளிச்சத்தை ஏற்படுத்தி, சிறிய பாராசூட்போல விரிந்து கீழ் நோக்கி வந்தது. மேலும், இராமேஸ்வரம் கடற்படை அதிகாரி Biswal என்பவரும் சோதனை செய்து, இவை அனைத்துத் தரப்புக் கப்பல்களிலும் பொதுவாகப் பயன்படுத்தக்கூடிய சமிக்ஞைத் தோட்டாக்கள்தான் (Signal cartridges) என்றும், வேறு ஆபத்து இதனால் எதுவுமில்லை என்றும் தெரிவித்தார். இது தொடர்பாக, மண்டபம் காவல் நிலையத்தில் குற்ற எண் 74/07, பிரிவு 102, குவி.ந.ச.வின்கீழ் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற செய்தி எனக்குக் கிடைத்திருக்கின்றது. ஆகவே, அது கண்டு பீதியடைய வேண்டியதில்லை; பதற்றப்படத் தேவையில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–55*

இந்த வகையிலே, கடலோரத்திலே நம்முடைய தமிழகம், இந்தியாவினுடைய பாதுகாப்பைப் பலப்படுத்திக்கொள்கின்ற வகையில், தொடர்ந்து நம்முடைய காவல் துறையினுடைய பணி மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு விஷயத்தைச் சொன்னார்கள்; மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள், 'காவலர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடாது' என்று ஒரு தாக்கீது அனுப்பியிருக்கிறார் என்று, அதை ஒரு குற்றச்சாட்டைப்போல அவர்கள் சொன்னார்கள். அது பற்றி உடனடியாக நாங்கள் விசாரித்தபோது, அப்படியொரு தாக்கீது அனுப்பப்படவில்லை என்று நம்முடைய நிதி இலாகாவிற்குச் செய்தி வந்திருக்கின்றது. வேறு பல இலாகாக்களையும் விசாரித்தபோது, திரு. ப. சிதம்பரம் அத்தகைய எந்தத் தாக்கீதையும் அனுப்பவில்லை; போலீசாருக்குக் கடன் கொடுக்கக் கூடாது என்று அவர் சொல்லவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, போலீசாரைப் பற்றியும், அவர்களுடைய செயல்பாடுகளைப் பற்றியும், அவர்களை



வைத்து நடத்துகின்ற ஆட்சியினரைப் பற்றியும், இரு தரப்பிலும் நம்முடைய கருத்துகளைப் பரிமாறிக்கொண்டிருக்கின்றோம்.

இதற்குமேல், நம்முடைய செல்வப் பெருந்தகை நேற்றுப் பேசும்போது, கடந்த கால ஆட்சியில் வேண்டுமென்றே தன்மீது ஒரு பெரிய விசாரணை நடத்தி, அதை விசாரித்த காவல் துறையினர் (குறுக்கீடு) காவல் துறையினர்தானே? (குறுக்கீடு) அப்படிக் குற்றச்சாட்டு எதுவுமேயில்லை என்று (குறுக்கீடு) சி.பி.ஐ. சொல்லிவிட்டார்கள் என்று குறிப்பிட்டார். நேற்றுக் குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல், இப்பொழுது என்னிடத்திலே கடிதமும் கொடுத்திருக்கிறார். இதைப் பற்றி, தன்மீது ஒரு தவறான, வேண்டுமென்றே, திட்டமிட்டுச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டைப் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார். தக்கவரைக் கொண்டு, சரியான ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவற்றிற்கெல்லாம் முத்தாரம் வைப்பதைப்போல், சில அறிவிப்புகளை இங்கே சொல்ல விரும்புகின்றேன். முதல் அறிவிப்பாக, நம்முடைய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், நம்முடைய திரு. கி. ஆறுமுகம் அவர்களும் இந்த அவையிலே ஒரு பரிந்துரையை வைத்தார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 12 மீனவர்கள், கடந்த 1½ மாத காலமாகக் காணாமல் போய்விட்டது குறித்து இதே அவையிலே பிரச்சினை எழுப்பட்டபோது, அவர்களைக் கண்டுபிடிப்பதற்கான பணி தொடர்ந்து நடைபெறும் என்றும், அவர்கள் கண்டுபிடிக்கப்படும் வரை அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தேன். அதன்படி, காணாமல் போன அந்த 12 மீனவக் குடும்பங்களுக்கு, அவர்கள் இல்லம் திரும்பும் வரை, அல்லது காணாமல் போன மீனவர்களுடைய குடும்பம் அரசிடமிருந்து முழு நிவாரண உதவித் தொகை பெறும் வரை மாதந்தோறும் தலா ஒரு குடும்பத்திற்கு ரூ.1,500/– உதவித் தொகை வழங்குவது என்று முடிவெடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*நண்பகல் 12–00*

**கடலோரப் பாதுகாப்பிற்குப் புதிய பணியிடங்கள்:** கடலோரப் பாதுகாப்பிற்காக 12 கடலோரக் காவல் நிலையங்கள், 12 புறநகர்க் காவல் நிலையங்கள் மற்றும் 40 சோதனைச் சாவடிகள் ஆகியவற்றிற்குக் கட்டடங்கள் கட்ட தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால்

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான செலவில் 50 சதவிகிதம் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். அனைத்துக் கட்டடங்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்படும். இந்த நிலையங்களில் காவலர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை நியமிக்க ரூ.5 கோடி செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**புறக்காவல் நிலையங்களைத் தரம் உயர்த்துதல்:** 2006–2007 ஆம் நிதியாண்டில் பல்வேறு இடங்களில் 10 புறக்காவல் நிலையங்கள் முழுமையான காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன. இன்றைய நிலவரப்படி மாநிலத்தில் 106 புறக்காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் பின்வரும் 12 புறக்காவல் நிலையங்கள் முழுநேரக் காவல் நிலையங்களாக சுமார் ரூ.3.8 கோடி செலவில் தரம் உயர்த்தப்படும்:

| வ. எண் | நகரம்/மாவட்டம் | தரம் உயர்த்தப்பட வேண்டிய புறக்காவல் நிலையம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் மாவட்டம், மாகரல் | – 5 ஆம் வகை |
| 2. | விழுப்புரம் மாவட்டம், கீழ்க்குப்பம் | – 5 ஆம் வகை |
| 3. | திருச்சி மாவட்டம், இனாம் குளத்தூர் | – 5 ஆம் வகை |
| 4. | புதுக்கோட்டை மாவட்டம், செம்பட்டுவிடுதி | – 5 ஆம் வகை |
| 5. | தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளி | – 5 ஆம் வகை |
| 6. | கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி அணை | – 5 ஆம் வகை |
| 7. | மதுரை மாவட்டம், எம். சத்திரப்பட்டி | – 5 ஆம் வகை |
| 8. | இராமநாதபுரம் மாவட்டம், தெற்குவேலி | – 5 ஆம் வகை |
| 9. | கன்னியாகுமரி மாவட்டம், பளுகல் | – 5 ஆம் வகை |
| 10. | மதுரை மாநகரம், அரசு இராஜாஜி மருத்துவமனை | – 5 ஆம் வகை |
| 11. | திருவண்ணாமலை மாவட்டம், புதுப்பாளையம் | – 5 ஆம் வகை |
| 12. | திருவண்ணாமலை மாவட்டம், பாச்சல் | – 5 ஆம் வகை |



**15 காவல் நிலையங்களைத் தரம் உயர்த்துதல்:** சென்னை மாநகரக் காவல் ஆணையாளர் மற்றும் மண்டலக் காவல் துறைத் தலைவர்கள் மேற்கொண்ட ஆய்வின்படி, மாநிலம் முழுவதும் 100 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. 2006–2007 ஆம் ஆண்டில் 14 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டன. 2007–2008 ஆம் ஆண்டில் 15 காவல் நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, பணியாளர்களுடைய எண்ணிக்கை ரூ.6.19 கோடியில் அதிகரிக்கப்படும்.

| வ. எண் | நகரம்/மாவட்டம் | தரம் உயர்த்தப்பட வேண்டிய புறக்காவல் நிலையம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் மாவட்டம் | – திருப்பெரும்புதூர் |
| 2. | கடலூர் | – பண்ருட்டி |
| 3. | திருவண்ணாமலை | – ஆரணி நகரம் |
| 4. | திருச்சி | – திருவெறும்பூர் |
| 5. | தஞ்சாவூர் | – தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை |
| 6. | திருச்சி நகரம் | – காந்தி மார்க்கெட் |
| 7. | திருச்சி நகரம் | – கே.கே. நகர் |
| 8. | கோயம்புத்தூர் | – திருப்பூர் வடக்கு |
| 9. | கோயம்புத்தூர் | – திருப்பூர் ஊரகம் |
| 10. | நாமக்கல் | – நாமக்கல் |
| 11. | கோயம்புத்தூர் நகரம் | – குனியமுத்தூர் |
| 12. | மதுரை | – அவனியாபுரம் |
| 13. | திண்டுக்கல் | – பழனி நகரம் |
| 14. | இராமநாதபுரம் | – கமுதி |
| 15. | தூத்துக்குடி | – கோவில்பட்டி மேற்கு |

**தூத்துக்குடி மாவட்டத்தில் பேரூரணியில் உள்ள காவல் பயிற்சிப் பள்ளியை மேம்படுத்துதல்:** தூத்துக்குடி மாவட்டத்தில் பேரூரணியிலே உள்ள காவல் பயிற்சிப் பள்ளியில் 400 காவலர்களுக்குப் பயிற்சியளிக்க

வசதியுள்ளது. இந்தப் பள்ளி 54 ஏக்கர் நிலப் பரப்பளவில் அமைந்துள்ளது. தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை ரூ.4.38 கோடியில் மேம்படுத்தி 600 காவலர்களுக்குப் பயிற்சியளிக்கும் அளவுக்குப் பயிற்சித் தரம், பள்ளித் தரம் உயர்த்தப்படும்.

**காஞ்சிபுரம் மாவட்டம், ஓரகடத்தில் புதிய காவல் நிலையம் உருவாக்குதல்:** காஞ்சிபுரம் மாவட்டம், ஓரகடம் கிராமத்தில் சிப்காட்மூலம் தொழில் மையங்கள் அமையவுள்ளன. மேலும், டெல்பி, டி.வி.எஸ்., எம்.எம். போர்ஜிங் இந்தியா நிறுவனம் ஆகிய பன்முக வெளிநாட்டு நிறுவனங்கள் கூடிய விரைவில் ஓரகடத்தில் தொழிற்சாலைகள் நிறுவவுள்ளன. ரூ.1,400 கோடியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய தானியங்கி சோதனை ஆய்வு மற்றும் வளர்ச்சித் திட்டமும் இந்த இடத்தில் நிறுவப்படவுள்ளது. புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்படும்போது வாகனப் போக்குவரத்து அதிகரிக்கும் என்பதாலும், ரோந்துப் பணி அதிகரிக்கப்பட வேண்டியிருக்கும் என்பதாலும், ஓரகடத்தில் வகை–1 காவல் நிலையம் புதிதாக சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும். அதோடு, சுங்குவார்சத்திரத்தில் தற்போது உள்ள வகை 5 காவல் நிலையம், வகை–1 ஆகத் தரம் உயர்த்தப்படும்.

*பிற்பகல் 12–05*

**காவல் பணியாளர்களுக்கு 2,000 புதிய குடியிருப்புகள்:** தமிழ்நாடு காவல் பணியில் பணியாற்றும் காவலர்களுக்குத் தற்போது 42,556 குடியிருப்புகள் உள்ளன. மொத்தமுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையில் இது 43.03 சதவிகிதம் ஆகும். இந்த ஆண்டில் கூடுதலாகக் காவல் பணியாளர்களுக்கு 2,000 குடியிருப்புகள் சுமார் 110 கோடி ரூபாய செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**இரண்டாம் நிலைக் காவலர்களை முதல் நிலைக் காவலர்களாக நிலை உயர்த்துதல்:** பத்து ஆண்டுகள் பணியை நிறைவு செய்யும் 7,320 இரண்டாம் நிலை ஆண் காவலர்களும், 3,231 இரண்டாம் நிலைப் பெண் காவலர்களும் முதல் நிலைக் காவலர்களாக நிலை உயர்த்தப்படுவார்கள். இதன் காரணமாக, ஆண்டு ஒன்றுக்கு ரூ.6.13 கோடி அரசுக்குக் கூடுதலாகச் செலவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**முதல் நிலைக் காவலர்களைத் தலைமைக் காவலர்களாக நிலை உயர்த்துதல்:** 5 ஆண்டுகள் பணியை நிறைவு செய்துள்ள 293 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாக நிலை உயர்த்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



**நிலை**
**தலைமைக் காவலர்களை சிறப்பு உதவி ஆய்வாளர்களாக உயர்த்துதல்:** 114 தலைமைக் காவலர்கள் சிறப்பு உதவி ஆய்வாளர்களாக நிலை உயர்த்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**தமிழ்நாடு சிறப்புக் காவல் படை பணியாளர்களுக்குக் கூடுதல் நேர ஊதியம் வழங்குதல்:** தற்போது ஆயுதப் படை, உள்ளூர் மற்றும் சிறப்புப் பிரிவுகள் காவல் பணியாளர்களுக்குக் கூடுதல் நேர ஊதியமாக நாளொன்றுக்கு ரூ.150 வழங்கப்படுகிறது. இந்தக் கூடுதல் நேர ஊதியம் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணியாற்றுபவர்களுக்கு அளிக்கப்படுவதில்லை. தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப் பணி, பயிற்சி மையம் மற்றும் சிறப்புப் படையில் உள்ள பணியாளர்களுக்கும் கூடுதல் நேர ஊதியம் வழங்கப்படும். இதன் காரணமாக, 12,690 பேர் பயன்பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுக் காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களை இரண்டாம் நிலைக் காவலர்களாகத் தேர்வு செய்தல்:** காவல் துறையில் இளநிலை உதவியாளர், தட்டச்சர் பதவிகளுக்குக் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்படுவதற்கு 1,460 பேர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளார்கள். இவர்களில் காவலர் பதவிக்குத் தேவையான கல்வி மற்றும் உடற்தகுதி உள்ளோருக்கு இரண்டாம் நிலைக் காவலர் பதவி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**கருணை அடிப்படையில் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள தகவுப் பதிவாளர்களுக்குக் கால முறை ஊதியம் வழங்குதல்:** கடந்த 2002 ஆம் ஆண்டில் கருணை அடிப்படையில் பணி கேட்டுக் காத்திருப்போர் பட்டியலில் இருந்த 805 பேர் தகவுப் பதிவாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டு, மாதம் ரூ.2,500 தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டார்கள். கடந்த 4 ஆண்டுகளுக்குமேல் இவர்கள் தொடர்ந்து தொகுப்பூதியத்தில் பணியாற்றுகின்றார்கள். இடைக்காலத்தில் ஒரு சிலர் தட்டச்சர் மற்றும் இளநிலை உதவியாளர் பதவிகளில் கால முறை ஊதிய விகிதத்தில் மாற்றப்பட்டுள்ளனர். மீதமுள்ள சுமார் 650 நபர்களுக்கு கால முறை சம்பள விகிதம் இந்த ஆண்டு நிர்ணயிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**சேலம் சரகம் அலுவலகத்திற்கு அமைச்சுப் பணியாளர்கள் பதவிகளை ஏற்படுத்துதல்:** 2000 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, காவல் துறைத் துணைத் தலைவர் பதவியுடன் சேலத்தில் காவல் சரகம் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்திற்கு அமைச்சுப் பணியாளர் பதவிகள்

எதுவும் இல்லாமல் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. அதனால், இந்த அலுவலகத்தின் நிர்வாகப் பணியை கவனிக்க அயற்பணி அடிப்படையில் அமைச்சுப் பணியாளர்கள் சரகத்தின் பிற மாவட்டங்களிலிருந்து பணியமர்த்தப்படுகின்றார்கள். இந்த நிலைமையைச் சரி செய்ய, சேலம் காவல் சரகத்தில் அமைச்சுப் பணியிடங்கள் புதிதாக உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**வெடி குண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்தல் படையில் முன்னாள் படை வீரர்களை நிரந்தரம் செய்தல்:** காவல் துறையில் சிறப்புப் பிரிவில் மாதாந்திர ஒப்பந்த ஊதியத்தில் நியமிக்கப்பட்ட 42 முன்னாள் இராணுவத்தினரை நிரந்தரமாகப் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோவில் இடையே இலக்க முறை நுண்ணலைத் தொடர்பு வசதி ஏற்படுத்துதல்:** 1997 ஆம் ஆண்டில் தூத்துக்குடி, நெல்லை, நாகர்கோவில் இடையே இலக்க முறை நுண்ணலைத் தொடர்பு வசதி (Digital Microwave Communication) உருவாக்கப்பட்டது. 8 ஆண்டு காலம் உபயோகத்தில் இருந்து வந்த இந்தத் தொலைத் தொடர்பு இப்போது பழுதடைந்தும், உதிரிப் பாகங்கள் சந்தையில் கிடைக்காத சூழ்நிலை உள்ளதாலும் பழைய கருவிகளை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ரூ.2.35 கோடி செலவில் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மன்னார்குடியில் உள்ள மறு அஞ்சல் தொலைத் தொடர்பு நிலையக் (Repeater Station) கட்டடம்கட்டுதல்:** மன்னார்குடியில் உள்ள 1973 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட மறு அஞ்சல் தொலைத் தொடர்பு நிலையமானது (Repeater Station) தற்போது முழுவதும் சேதமடைந்து, பயன்பாட்டுக்கு உதவாத நிலையிலே உள்ளது. மிக நவீனக் கருவிகள் இந்தக் கட்டடத்தில் வைக்கப்பட்டிருப்பதாலும், பணியாளர்கள் நாள் முழுவதும் அங்கு பணியாற்றுவதாலும், பழைய கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய மறு அஞ்சல் நிலையக் கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–10

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய நுண்ணலை தொலை தொடர்பு இணைப்புகள் நிறுவுதல்:** தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு, கிருஷ்ணகிரி மாவட்டம் ஏற்படுத்தப்பட்டது. அந்த மாவட்டத்திலுள்ள



காவல் துறை அலுவலர்களுக்கு நுண்ணலைத் தொலைத் தொடர்பு இணைப்பு வசதி ஏற்படுத்தித் தர வேண்டியது அவசியமாகிறது. இந்த வகையில் கருவிகள் நிறுவவும், கட்டடங்கள் கட்டவும் ரூ.94.58 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**சேலம் மாவட்டத்தில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்:** சேலம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. சுமார் 3.5 கோடி ரூபாய் செலவில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டடம் ஒன்று சேலத்தில் புதிதாகக் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஒன்று புதிதாக ஏற்படுத்துதல்:** ரூபாய் 16.52 கோடி செலவில் சுமார் ஆயிரம் பேர்கொண்ட தமிழ்நாடு சிறப்புக் காவல் படை ஒன்று புதிதாகவே உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**இரண்டாம் நிலை காவலர்கள் பணியிடங்களை நிரப்புதல்:** தற்போது சுமார் 14,000 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியிடங்கள் காவல் துறையில் காலியாக உள்ளன. இவற்றில் 5,000 பணியிடங்களை நிரப்பத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மேலும் 5,000 பணியிடங்களும், 2008–2009 ஆம் ஆண்டில் மீதமுள்ள 4,000 பணியிடங்களும் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திருவாரூர் மாவட்டத்தில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்:** திருவாரூர் மாவட்டத்தில் தற்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கான சொந்தக் கட்டடம் ரூ.3.44 கோடி செலவில் இந்த ஆண்டு கட்டி முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்றும் ஒரு பெரிய அறிவிப்பு: காவல் நிலையக் கட்டடங்கள்:

| வ. எண் | மாவட்டம்/நகரம் | இடம் |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் மாவட்டம் | ஆலந்துறை |
| 2. | கோயம்புத்தூர் | மகாலிங்கபுரம் |
| 3. | கோயம்புத்தூர் நகரம் | பி.1 பஜார் |

| | | |
|---|---|---|
| 4. | திருவண்ணாமலை | செய்யாறு அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 5. | தூத்துக்குடி | கடம்பூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 6. | தூத்துக்குடி | புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 7. | தூத்துக்குடி | கழுகுமலை |
| 8. | தூத்துக்குடி | எப்போதும்வென்றான் |
| 9. | மதுரை | உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 10. | மதுரை | சமயநல்லூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 11. | மதுரை | திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 12. | மதுரை | பாலமேடு |
| 13. | இராமநாதபுரம் | ஏமனேஸ்வரம் |

இவை தவிர, மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பின்வரும் 25 இடங்களில் காவல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்டக் கோரிக்கை வைத்துள்ளார்கள். இவற்றில், அரசு நிலம் இருக்கும் இடத்தில் உடனடியாகக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ.சி. மணி – மருவூர்

டாக்டர் க. பொன்முடி– சின்னசேலம்

திரு. எ.வ. வேலு – திருவண்ணாமலை கிழக்கு

திரு. என்கேகே.பி. ராஜா – கருங்கல்பாளையம்

திரு. தங்கம் தென்னரசு – மல்லாங்கிணறு

திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன் – மூலனூர்



டாக்டர் (திருமதி) பூங்கோதை – ஆலங்குளம் அனைத்து மகளிர் காவல் நிலையம்

திரு. கே.சி. பழனிச்சாமி – கரூர்

திரு. கு. பிச்சாண்டி – திருவண்ணாமலை நகரக் காவல் நிலையம்

திரு. பெ.சு. விஜயகுமார் – சந்தவாசல்

திரு. அர. சக்கரபாணி – அம்பிளிக்கை

திரு. செ. குருசாமி – அம்மாப்பேட்டை

திரு. டி. இராமச்சந்திரன் – தளி

திரு. கே.பி. இராமசுவாமி – மங்களாபுரம்

திரு. ஜி.கே. மணி – மேட்டூர் தாலுகா

திரு. கு. சின்னதுரை – கெங்கவல்லி

திரு. வை. சிவபுண்ணியம் – தலையாயமங்கலம்

திரு. கரி. இராமசாமி – திருவாடனை

திரு. டி. செங்குட்டுவன் – இராயக்கோட்டை

திரு. ஞா. ஜாண் ஜோசப் – நித்திரவிளை

திரு. வ. முல்லைவேந்தன் – அ. பள்ளிப்பட்டி

திரு. கே. உலகநாதன் – திருத்துறைப்பூண்டி

திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான் – அரவக்குறிச்சி

திரு. எஸ்.எஸ். சிவசங்கர் – ஆண்டிமடம்

திருமதி டி. யசோதா – திருப்பெரும்புதூர்

**புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்துதல்:** மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் புதிதாகக் காவல் நிலையங்கள் அமைக்கக் கோரிக்கைகள் தொடர்ந்து வந்தவண்ணம் உள்ளன. மாநிலத்தில் ஏற்கெனவே 1,432 காவல் நிலையங்கள் உள்ளன. தேவையின் அடிப்படையில் புதிதாகப் பின்வரும் இடங்களில் காவல் நிலையங்கள் சுமார் ரூ.3.2 கோடியில் தொடங்கப்படும்.

| வ. எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | திருவண்ணாமலை | மேல்மா கூட்டு ரோடு |
| 2. | விழுப்புரம் | பகண்டை கூட்டு சாலை |
| 3. | நாமக்கல் | நல்லிப்பாளையம் |
| 4. | சென்னை மாநகரம் | நொளம்பூர் |
| 5. | திண்டுக்கல் | ரெட்டியார்சத்திரம் |
| 6. | விழுப்புரம் | காணை |

வேலூர் மாவட்டம், காட்பாடியில், காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் புதிதாகக் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று, 18 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் ஒன்று கட்டப்படும்.

பிற்பகல் 12–15

**சென்னையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் புதிய கோட்டம் ஏற்படுத்துதல்:** சென்னை மாநகரத்தில் தற்போது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் வட சென்னை மற்றும் தென் சென்னை ஆகிய 2 கோட்டங்கள் உள்ளன. சென்னை மாநகரில் பல மாடிக் கட்டடங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயலாக்கத்தை மேலும் விரிவுபடுத்தவும், சென்னை மாநகரில் தற்போது செயல்பட்டு வரும் வட சென்னை மற்றும் தென் சென்னைக் கோட்டங்களைப் பிரித்து சென்னை நகர மத்தியக் கோட்டம் என்ற புதிய கோட்டம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அலுவலர்களுக்கு செல்லிடத் தொலைபேசிக் கட்டணம் வழங்குதல்:** தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தற்போது துணை இயக்குநர்கள், கோட்ட அலுவலர்கள், உதவிக் கோட்ட அலுவலர்கள், நிலைய அலுவலர்களுக்கு 100 செல்லிடத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேலும் விரைவாகச் செயல்படுத்த எஞ்சியுள்ள 304 அலுவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.500/– வீதம் செல்லிடத் தொலைபேசி வசதி செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்:** தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 282 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் 161 நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 30 நிலையங்கள் பகுதி நிரந்தரக் கட்டடங்களிலும், 92 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. பகுதி நிரந்தரக் கட்டடங்களிலும், வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வரும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பின்வரும் இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்குக் கட்டடம் கட்டக் கோரிக்கை அளித்துள்ளார்கள்:

திரு. எ.வ. வேலு – தண்டராம்பட்டு

திரு. அ. தமிழரசு – ஓமலூர்

திரு. ஆர். சிவானந்தம் – ஆரணி

திரு. குத்தாலம் க. அன்பழகன் – குத்தாலம்

திரு. நா. இராமகிருஷ்ணன் – கம்பம்

திரு. கே. உலகநாதன் – திருத்துறைப்பூண்டி

திரு. த. தியோடர் ரெஜினால்டு – தக்கலை

திரு. அர. சக்கரபாணி – ஒட்டன்சத்திரம்

இந்தக் கோரிக்கைகளை ஏற்று, இந்த ஆண்டு, இரண்டு கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாமன்ற உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே நசரத்பேட்டை என்ற இடத்திலே, ஒரு புதிய காவல் நிலையம் வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை சில தினங்களுக்கு முன்னாலே முதலமைச்சர் அவர்களிடத்திலே கடிதம்

கொடுத்திருந்தேன். அதை ஏற்று, தயவுசெய்து, ஒரு புதிய காவல் நிலையம் அமைக்கப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது பாதி, கேட்காதது பாதி என்று சொல்லி, அள்ளி, அள்ளிக் கொடுத்த பாரி வள்ளலைப்போல, எனது தொகுதிக்கு ஒரகடத்திலே ஒரு காவல் நிலையமும், ஸ்ரீபெரும்புதூரிலே பழுதுபட்டிருக்கின்றதற்கு ஒரு புத்தம் புதிய காவல் நிலையமும், சுங்குவார்சத்திரத்திற்கு ஒரு காவல் நிலையமும் என்று வாரிக் கொடுத்திருக்கின்ற வள்ளலைப் பாராட்டி, நன்றி தெரிவித்து, அமர்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துவாச்சாரியில் ஏற்கெனவே இடம் வழங்கப்பட்டுவிட்டது. அரசு நிலம் இருக்கிறது. அந்த இடத்தில் சொந்தக் கட்டடம் இல்லாமல் இன்று வீட்டு வசதி வாரியக் கட்டடத்தில் காவல் நிலையம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், சத்துவாச்சாரியில் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும், அதைப்போல, அங்கே Traffic Police Station ஒன்று அமைப்பதற்கும், வேலூரில் புதிதாக A.R. Police Battalion or தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அமைப்பதற்கும் முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்களை முன்னிட்டாவது, சத்துவாச்சாரியிலே காவல் நிலையம் அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நீண்ட கடற்கரைகளிலே வாழக்கூடிய, இலட்சோப இலட்சம் மீனவர்களுடைய குடும்பங்களிலே பால்



வார்க்கின்ற நல்ல செய்தியாக, கடலில் மீன் பிடிக்கச் செல்லுகின்ற மீனவர்கள், அவர்கள் திரும்ப வேண்டிய காலக்கெடுவுக்குள் திரும்பவில்லை என்று சொன்னால், அந்த மீனவர்களுக்கு என்ன நேர்ந்ததோ என்று கவலையோடு காத்திருக்கின்ற அந்தக் குடும்பங்கள் மகிழ்ச்சியடைகின்ற வகையிலே, அவர்களுடைய குழந்தைகளுக்கும், அந்தக் குலத்து பெண்டிர்களுக்கும், அவர்கள் மீண்டும் திரும்பக் கிடைக்கின்ற வரை அல்லது அவர்களைப் பற்றிய தகவல் கிடைக்கின்ற வரை, அவர்கள் படுகின்ற கஷ்டங்களுக்கு மாமருந்தாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு வரலாற்றுப் புகழ் மிக்க அறிவிப்பினை இந்த அவையிலே வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அறிவிப்பு, மீனவர் சமுதாயத்து மக்கள் என்றும் நன்றியோடு நினைத்துப் பார்க்க வேண்டிய நல்ல அறிவிப்பு என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய ஆசைப்படுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–20*

மீனவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து, அந்தத் தாய்மார்களுடைய துன்பங்களை அறிந்து, ஏழை படுகின்ற பாட்டை மனதாரப் புரிந்து, அந்த நோய் தீர்க்கின்ற மருந்தாக, மாதம் ரூ.1,500 என்பது அவர்களுக்கு ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதம் என்பதை இந்த அவையிலே பதிவு செய்து, இத்தகைய நல்ல அறிவிப்பைத் தந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, தமிழகத்திலே வாழுகின்ற இலட்சக்கணக்கான மீனவ மக்கள் சார்பாக என் நெஞ்சம் நிறைந்த நன்றியினை இந்த அவையிலே பதிவு செய்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நல்ல அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு மாதம் ரூ.1,500 வழங்கியதற்குப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்த மாமன்றத்தின் வாயிலாக, அனைத்து உறுப்பினர்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, சேலம் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு மூன்றரைக் கோடி ரூபாயும், மேட்டூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடத்திற்கு

நிதியினையும் ஒதுக்கித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சேலம் மாவட்ட மக்களின் சார்பிலேயும், மேட்டூர் தொகுதி மக்கள் சார்பிலேயும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மேட்டூர் பகுதி, அங்கே மேட்டூர் அணை, மற்ற பகுதிகளுக்குக் காவலர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். பாதுகாப்புத் தேவை. அதற்குக் காவலர்களை ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அதையும் நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்திலே இருக்கின்ற காவல் நிலையத்தினைத் தரம் உயர்த்துவதாக அறிவித்த தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் இரண்டரை இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் பக்கம் 5–ல் குறிப்பிட்டுள்ளதைப்போல, புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் தொடங்குவதற்கு 25 கி.மீ. சுற்றளவிற்குள் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமாவது இருக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு நிலையமும் குறைந்தது 50,000 மக்களுக்காவது பயன்பட வேண்டும் என்றும், அது ரூ.50,000–க்குக் குறைவில்லாத பொருட்சேதம் மற்றும் அழிவுகளை ஏற்படுத்த வாய்ப்புள்ள பகுதிகளில் அமைய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில், இரண்டரை இலட்சம் மக்கள் வாழுகின்ற என்னுடைய பண்ருட்டி தொகுதிக்கு ஒரேயொரு தீயணைப்பு நிலையம்தான் இருக்கிறது. அதுவும் ஒரு வண்டிதான் இருக்கின்றது. அந்தப் பகுதியில் அடிக்கடித் தீ விபத்து ஏற்பட்டு, ஏழையெளிய மக்களுடைய குடிசைகளும், வீடுகளும் தீக்கிரையாகின்றன. அதனால் கருணை உள்ளத்தோடு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டே என்னுடைய பண்ருட்டி பகுதியில் குள்ளஞ்சாவடி, முத்தாண்டிக்குப்பம் ஆகிய இந்த இரண்டு பகுதிகளிலும் தீயணைப்பு நிலையம் அவசியம் தேவைப்படுகின்ற காரணத்தினால், ஏதாவது ஒன்றையாவது இந்த ஆண்டு அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கத்திலே சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேசிய நெடுஞ்சாலையிலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. தயவுசெய்து கருணைகூர்ந்து அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தந்தால், அடிக்கடி ஏற்படும் தீ விபத்தினைத் தடுக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பல்வேறு அறிவிப்புகளில், காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களைப் பாதுகாக்க உதவி, காவலர்களுக்குப் பல்வேறு சலுகைகள், புதிய காவல் நிலையங்கள், புதிய கட்டடங்கள் என்று பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டமைக்கு நன்றி. நான் பேசுகின்றபோதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக வைத்தேன். திருப்பூர் பகுதியில் சற்றேறக்குறைய 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தற்போதைய கணக்குப்படி இருக்கிறார்கள். ஆறு, ஏழு இலட்சம் மக்கள் தினசரி திருப்பூருக்குள்ளே வேலைக்காக வந்து செல்கிறார்கள். ஆகவே, ஏராளமான குற்றங்களும் அதையொட்டி, அதிகரித்துக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், திருப்பூரிலே மூன்று காவல் நிலையங்கள் கூடுதலாக வேண்டுமென்று காவல் துறையிலிருந்து பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆகவே, திருப்பூரினுடைய அந்தத் தனித்தன்மையைக் கணக்கில்கொண்டு, இந்த ஆண்டே, மூன்று இல்லையென்றாலும், ஒன்றோ அல்லது இரண்டோ காவல் நிலையங்கள் கூடுதலாக அமைத்துத் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேலூர் மாவட்டத்தில், ஆந்திராவிற்கும், தமிழ்நாட்டிற்கும் ஒட்டியிருக்கின்ற எல்லைப் பகுதியிலே அடிக்கடி நக்சலைட்டுகள் அங்கிருந்து இங்கே வந்து பல்வேறு தொல்லைகள், இடையூறுகள் ஏற்படுத்தி வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

[திரு. சி. கோவிந்தசாமி] [2007 ஏப்ரல் 26

தமிழ்நாட்டு எல்லைக்குள் நக்சலைட்டுகள் ஊடுருவலைத் தடுக்கின்ற வகையில் உரிய பாதுகாப்பு ஏற்பாட்டினைச் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

*பிற்பகல் 12–25*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறையினுடைய பணியாளர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, கருணை அடிப்படையிலே, கணினி விவரப் பதிவாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையை ஏற்று, அவர்களைப் பணி நிரந்தரம் செய்திருப்பதற்கு என்னுடைய பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, திருவாரூர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம் மூன்று கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கும், மன்னார்குடியில் மறு அஞ்சல் தொலைத் தொடர்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கும், தலையாயமங்கலம், திருத்துறைப்பூண்டி காவல் நிலையங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்பதற்கும், திருத்துறைப்பூண்டியிலே புதிய இயணைப்பு நிலையம் கட்டப்படும் என்பதற்கும், திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் சார்பாகவும் நன்றி சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. அவருக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

அதோடு, சிவகங்கை மாவட்டம், காட்டாண்டிகுளம் ஆதி திராவிடப் பெண் செல்லம்மாள் கொலை செய்யப்பட்டு 3 மாதம் ஆகிறது, கண்டுபிடிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டேன் அதோடு, அந்தக் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்க வேண்டும். ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த பெண் என்பதாலே, அதை அறிவிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



2007 ஏப்ரல் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்புகளை நம்முடைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழகத்திற்கு அறிவித்திருக்கிறார். விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக அவருக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஆதி திராவிட மக்கள்மீது கடந்த காலங்களில் எப்படியெல்லாம் உண்மைக்குப் புறம்பான வழக்குகள் போட்டு, இன்று உண்மை வெளியில் வந்திருக்கிறது என்பதை நாங்கள் கோரிக்கையாக வைத்தோம். அதை ஏற்று, நீதி விசாரணை செய்யப்படும் என்று நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் அறிவிப்புச் செய்ததற்கு மீண்டும் ஒரு முறை நன்றியைக் கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோல் ஆயிரக்கணக்கான இளைஞர்களை, கடந்த காலங்களிலே காவல் துறை உண்மைக்குப் புறம்பான வழக்குகளைப் போட்டுச் சின்னாபின்னம் ஆக்கி இருக்கிறார்கள். அதையும் கருத்தில்கொண்டு, அதன்மீது விசாரணை செய்ய வேண்டும். எத்தனையோ படுகொலைகள் இன்றும் கண்டுபிடிக்கப்பட முடியாமல் நிலுவையில் இருக்கின்றன. நம்முடைய காவல் துறை உடனே அதைக் கண்டுபிடிக்க ஆவன செய்யுமாறு கேட்டு, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை ஒன்றை நிறைவேற்றினால், இன்னொன்று பின்னால் வந்துகொண்டே இருக்கும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும்கூட, இந்த அவையிலே ஒரே ஒரு கோரிக்கையை இப்பொழுது ஏற்றுக்கொள்கின்றேன். மற்றவை தள்ளப்பட்டவைகள் அல்ல. மற்றவை நம்முடைய Police Commission பரிந்துரைகளிலே இடம்பெறும், இடம்பெற வைப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மூத்தவர் என்ற முறையிலும், காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் என்ற முறையிலும், நம்முடைய பழைய நண்பர் என்ற முறையிலும் திரு. சுதர்சனம் அவர்கள் கோரிய காவல் நிலையம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய காவல் நிலையம் நசரத்பேட்டையில் அமைத்துக் கொடுத்ததற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, நான் பழைய நண்பன் அல்ல, நீண்ட நெடுங்காலமாக முதல்வர் அவர்களுடைய குடும்ப நண்பர் என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), 25–4–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,927,50,81,000/–, மூலதனக் கணக்கில் ரூ.207,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



## (ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), 25–4–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.114,91,37,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.8,89,43,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 12–30

## (இ) கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37–மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), 25–4–2007 அன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.43,46,62,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27–4–2007) வெள்ளிக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12–30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*140.* பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை. *(2006–2007)*

*141.* பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை. *(2006–2007)*



*142.* பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை. *(2006–2007)*

*143.* பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. *(2006–2007)*

*144.* அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது அறிக்கை. *(2006–2007)*

*145.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

*146.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

---

D
V 211, 31 P07
P07. 32. 2
227661
சென்னை-600 008

அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.